REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# புதிய பூமி

புதிய பூமி PUTHIYA POOMI

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

சுற்று 09 | ஆகஸ்ட் 2002 | பக்கம் 12 | விலை 10/- | சுழற்றி 49

# இலங்கை அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது! இலங்கையின் ஜனாதிபதி சந்திரிக்காவா! புஷ்ஷா?

ரதமர் ரணில் விக்கிரமசிங்கஹ மெரிக்க ஜனாதிபதி புஷ்ஷிற்கு மிகவும் நருக்கமானவராகிவிட்டார். புஷ்ஷும் ணிலுக்குப் பின்னால் நின்று அவரின் டவடிக்கைகளுக்கு பக்கபலமாக ருக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

ரதமர் ரணில் விக்கிரமசிங்கஹவின் லைமைத்துவத்தின் கீழ் மேற்கொள்ளப் டும் செயற்திட்டங்களை ஒருமனதுடன் ான் வரவேற்பதாகவும், பிரதமரின் அமெரிக்காவின் பூரண ஒத்துழைப்பு வேண்டும் என்று கேட்டுக் கொண்டு ள்ளார். அமெரிக்க தரப்பிலிருந்து பிரதமரின் கோரிக்கைக்கு சாதகமான பதில்கள் கிடைத்துள்ளன.

இலங்கை அமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கை உருவாகவும் 'மிலேனியம் செலன்ஞ்' திட்டத்துக்கு கீழான 'உதவிகள்' கிடைக்கவும் வழியேற்பட்டுள்ளது.

பிரதமர் எடுத்துள்ளார்.

'மிலேனியம் செலன்ஞ்' திட்டத்துக்கு கீழ் இலங்கைக்கு உத்வி கிடைக்கும் என்பதை விட அமெரிக்க பொருட்கள் இலங்கையில் குவிக்கப்படவிருக்கின்றன என்பதே உண்மை. அதன் மூலம் இலங்கையில் அமெரிக்க பொருட்களு க்கான சந்தை மேலும் விரிவாக்கப்பட வுள்ளது.



அமெரிக்காவில் கல்வி கற்று அமெரி க்கப் பெண்ணை மண முடித்த அமைச்சர் மிலிந்த மொரகொட திரை மறைவி லிருந்து மேற்கண்ட எல்லா வற்றையும் செய்து முடித்ததில் திருப்தி கொண்டுள்ளார். அடுத்து வரும் தசாப் தத்தில் உலகநாடுகளை ஆழப் போகின்ற 100 தலைவர்களில் மிலிந்த மொரகொடவின் பெயரும் அமெரிக்க மதிப்பீட்டு அறிக்கையில் இடம்பெற்றிருக்க கிறது குறிப்பிடத்தக்கது. அந்தளவுக்கு அமெரிக்கா இலங்கை விவகாரங் களுடன் நெருக்கமாகிவிட்டது.

தெற்காசிய விவகார ங்களுக்கு பொறுப் பான அமெரிக்க பிரதி அமைச்சர் கிறிஸ்டினா ரொக்கா, பாதுகாப்பு அதிகாரி கள் ஆகி யோரின் அமெரிக்கா விற்கு விஜயமும் அமெரிக்க யுத்தக் கப்பல்களின் கொழும்பு வருகையும் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவர் ஆஸ்லி வில்ஸ் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும், தமிழ் மக்களையும் மிரட்டுவது போன்று அடிக்கடி வெளியிட்ட அறிக்கைகளும் ஒன்றோ டொன்று தொடர்புடையன. அதன் வளர்ச்சியே

11ம் பக்கம் பார்க்க...

## தமிழ் மக்களின் தலைமையை மாற்ற வேண்டும்!

## அமெரிக்கா வற்புறுத்தும்?

லைமையின் கீழ் மேற்கொள்ளப்படு ின்ற சமாதான முயற்சிகளுக்கு முழு த்துழைப்பையும் வழங்குவதாகவும் தெரிவித்துள்ள புஷ் மேற்கண்டவாறான ருத்தினை வேறு எந்த தலைவருக்கும் துவரையில் தான் தெரிவிக்கவில்லை ன்றும் கூறியுள்ளார்.

ூலை 25ம் திகதி இடம்பெற்ற 15 நிமிட பச்சுவார்த்தையின் போதே மேற்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி ஷ்ஷுடனும் ஏனைய அமெரிக்க லைவர்களுடனும் இலங்கை அரசின் ாதுகாப்பு, சமாதான நடவடிக்கைகள், பாருளாதாரம் என்பவற்றுக்கு ரணில் அமெரிக்காவிற்கு விஜயம் செய்வதற்கு சில நாட்களுக்கு முன்பு உலக நாடுகளின் ஐந்து தலைவர்கள் அமெரிக்காவிற்கு விஜயம் செய்திருந்த போதும் புஷ்ஷை சந்திக்கும் 'பாக்கியம்' ரணிலுக்கு மட்டுமே கிடைத்துள்ளது. அப்பாக்கியத்தை பயன்படுத்தி இலங்கை அரசின் சமாதான நடவடிக்கைகள், பாதுகாப்பு. பொருளாதாரம் என்ப வற்றை அமெரிக்காவிடம் ஒப்படைக்கும் உத்தியோகபூர்வ 'நடவடிக்கையை ஏற்கனவே இலங்கையின் பொருளா தாரத்தில் கூடிய செல்வாக்கைச் செலுத்திவரும் அமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கை. மிலேனியம் செலன்ஞ்' என்பவற்றினூடாக மேலும் கூடிய கட்டுப்பாட்டை செலுத்தப் போகிறது. இலங்கை அரசின் சமாதான நடவடிக்கைகளுக்கான ஒத்துழைப்பு என்ற பேரில் பாரிய இராணுவ உதவிகளை பெறுவதற்கான வழிவகை கள் ஏற்படுத்தப்படவுள்ளன.

## 1983 இனவன்முறை பற்றிய விசாரணை அறிக்கை எங்கே?

983ம் ஆண்டு யூலை மாதத்தில் ஐ. த. க. அரசின் ஆசீர்வாதத்துடன் தமிழ் க்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட னை வன்முறைகள் பற்றி நடாத்தப்பட்ட சாரணைகளின் முடிவு என்ன? இன ன்முறைகள் நடாத்தப்பட்டு 19 ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ள நிலையில் வ்விசாரணைகள் பற்றி தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் ழுகிறது.

கவும் காலம் கடந்த நிலைமையில் ஒரு ருடத்துக்கு முன்புதான் ஜனாதிபதி ந்திரிகா 1983 யூலை இனவன்முறை ள் பற்றி விசாரணை செய்து அறிக்கை மர்ப்பிக்கும்படி ஓய்வு பெற்ற நீதியரசர் ஒருவரை நியமித்திருந்தார். விசாரணை ள் நடைபெற்றன என்பது உண்மை. சாரணை முடிவுகள் என்னவென்று ாருக்கும் தெரியாது. அவை இன்னும் வெளியிடப்படவில்லை.

ிழ் மக்களுக்கு எதிரான கொலை ள், கொள்ளைகள் உட்பட பலவித ான வன்முறைகளுக்கும் பொறுப்பான ர்கள் யார் என்பதை உத்தியோக ூர்வமாக அரசாங்கம் வெளியிடுமா ன்பதை எதிர்பார்த்திருப்பவர்களுக்கு ரமாற்றமாகவே இருக்கிறது. அவ் வன்முறைகளுக்கு பொறுப்பானவர்கள் ல வருடங்களாகியும் சட்டத்தின் முன் ிறுத்தப்படாமலும் குற்றவாளிகள் ண்டிக்கப்படாமலும் விடப்பட்டுள்ளனர்.

விசாரணை அறிக்கைகள் வெளியிடப் பட்டாலும் அது பூரணமானதாக இருக்குமோ என்பதும். அதன் சிபாரிசு களின்படி வன்முறைகளுக்கு பொறுப் பானவர்களுக்கு எதிரானவர் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதும் கேள்விகளாக இருக்கின்ற போதும் 977 இனவன்முறைகள் பற்றி விசாரித்த சன்சோனி ஆணைக் குழுவின் விசாரணை அறிக்கை போன்றாவது புலமையர் அக்கறைகளு க்காவது 1983 வன்முறைகள் பற்றிய விசாரணை அறிக்கையும் உதவியாக அமையுமல்லவா என்ற குறைந்த பட்ச எதிர்பார்ப்புகளாவது பூர்த்தி செய்யப்பட வேண்டாமா?

1983 இனவன்முறைகளில் ஐ. தே. கட்சியின் முக்கியஸ்தர்களின் பங்கேற்பு பற்றிய தகவல்கள் வெளிவந்தால் ஐ. தே. மு. அரசாங்கத்தை மகிழ்வூட்டாது என்பதால் தமிழ் தலைவர்கள் விசாரணை அறிக்கையை வெளியிட வேண்டும் என்று கோராமல் இருக்கின் றனர். ஐ. தே. மு. அரசாங்கத்தில் இருக்கும் மலையகத் தமிழ் தலைவர் களும் அதனை விரும்பவில்லை.

இன்று கொழும்பிலும் சுற்றுப்புறங் களிலும் மீண்டும் தமிழர்கள் வசிக்கின் றனர். ஓரளவிற்கு சுதந்திரமாக நடமாடு கின்றனர். சொந்தமாக வீடுகளை வாங்கியுள்ளனர். வியாபாரங்களையும், தொழில்களையும் செய்கின்றனர். ஆடிவேல் விழா கொண்டாடப்படுகிறது.

ஆனால் 1983 ஆண்டு யூலை மாதம் பிற்பகுதியில் நடைபெற்ற திட்டமிட்ட இனவன்முறைகள் மறக்க முடியாத அளவிற்கு பாரதூரமானவை. அதன் விளைவுகளால் இலங்கையின் சகல மக்களும் இன்றும் திணறிக் கொண்டி ருக்கின்றனர்.

பாதுகாப்பற்ற நிலையிலிருந்த தமிழ் மக்கள் மீது ஏவிவிடப்பட்ட காடைத் தனத்தால் பலர் கொல்லப்பட்டனர். தமிழ்ப் பெண்கள் பாலியல் வல்லுறவுக் குட்படுத்தப்பட்டனர். தமிழர்களின் சொத்துக்கள் கொள்ளையடிக்கப் பட்டன். நாசமாக்கப்பட்டன பூட்டியிருந்த வெலிக்கடை சிறைச்சாலையில் ஒரு முறையல்ல இருமுறை தமிழ்க் கைதிகள் கொலை செய்யப்பட்டனர்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வரும் இவ்வேளையில் 1983 வன்முறைக்ளுக்கு பொறுப்பானவர்கள் யார் என்பதை வெளிக்கொண்டு வர வேண்டியதும், அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டியதும், அவ் வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர் களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டியதும் அவசியமாகும் என்பதை யும் வலியுறுத்த வேண்டும்.

## நில உச்சப்பயன்பாட்டில் நம்பிக்கை கொண்டவர்கள் மேல் கொத்மலைத் திட்டத்தை ஆதரிக்கமாட்டார்கள்!

மேல்கொத்மலைத் திட்டம் நிறை வேற்றப்படாமல் தடுத்து நிறுத்தப் பட்டால் அமைச்சர் கரு ஜயசூரியவுக் கும் பிரதியமைச்சர் நவீன் திசாநாயக் காவிற்கும் கௌரவப் பிரச்சினையாக இருக்கலாம். மலையகத் தலைவர்கள் சிலருக்கும் அவர்களின் கையாட் களுக்கும் கமிஷனும், வருமானமும் இல்லாமல் போகலாம் ஆனால் தலவாக்கொலை வாழ் மக்களினதும் மலையகத் தமிழ் மக்களினதும் இருப்பு பாதுகாக்கப்பட்டு உறுதி செய்யப்படும். மக்களினதும் இருப்பு பாதுக்கப்பட்டு உறுதி செய்யப்படும். இலங்கை நாட்டின் வளமான பெருநிலப்பரப்பு நீரில் மூழ்கடிக்காது பாதுகாக்கப்படும்.

எனவே அத்திட்டம் பூரணமாக கைவிடப்பட வேண்டும் என்பதே நியாய மான கோரிக்கை ஆகும். அக்கோரிக் கையை முன்வைத்து பல அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள் கலை இலக்கிய அமைப்புகள் பொது அமைப்புகள் என்பவற்றின் பிரதிநிதிகளையும், தனி நபர்களையும் உள்ளடக்கி அமைக்கப்பட்டுள்ள மேல் கொத்மலைத் திட்டத்துக்கு எதிரான மக்கள் இயக்கத்தின் எதிர்ப்பு நடவடிக்கைகளில் பங்கெடுப்பதும், ஆதரவளிப்பதும் இன்றியமையாதது.

அகில இலங்கை ஐக்கிய தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் டி. அய்யாத்துரை புதிய மலையகம் அமைப்பின் வெ.மகேந்திரன் புதிய பண்பாட்டு அமைப்பின் ம். திலகராஜா ஆகியோரை அமைப்பாளர்களாக கொண்டு இல.204, டிம்புல் வீதி, மல்லியப்பு ஹட்டனில் மேல் கொத்மலை திட்டத் துக்கு எதிரான மக்கள் இயக்கம் காரியாலயத்தை கொண்டு இயங்கு கிறது. அத்திட்டத்தை எதிர்ப்பவர்கள் மேற்படி விலாசத்துடன் தொடர்பு கொண்டு எதிர்ப்பை ஒருங்கிணைத் துக்கொள்ள முடியும்.

அவ்வியக்கத்தின் எதிர்ப்பு நடவடிக்கை களில் ஆரம்பமாக கையெழுத்து இயக்கம் யூலை 27ம் திகதி ஹட்டனில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வியக்கத்திற்கு மக்கள் ஆதரவு பெருகிவருவதை அவதானிக்க முடிகிறது.

இது இவ்வாறிருக்க யார் எதிர்த்தாலும் மேல்கொத்மலை திட்டத்தை நடை முறைப்படுத்தியே தீருவோம் என்று நீர் மின்சக்தி அமைச்சர் கரு ஜயசூரியவும். பெருந்தோட்ட பிரதியமைச்சர் நவீன் திசநாயக்கவும் கூறியுள்ளார்.

இது ஜனநாயக நாடு என்பதால் யாரும் எதிர்ப்பை தெரிவிக்கலாம். ஆனால் மேல் கொத்மலை திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித் துள்ளார். ஆனால் அத்திட்டத்தை எதிர்ப்பவர்கள் எதிர்க்கும் உரிமை இருக்கிறது என்பதற்காகவோ எதிரக்க வேண்டும் என்பதற்காகவோ எதிர்க்கவில்லை. மலையகத் தமிழ் மக்களின் குடி செறிவை பாதுகாத்துக் கொள்ளவும். வளமான பெரும் நிலப்பரவை நீரில் மூழ்கடிக்காமல் பாதுகாத்துக் கொள்ளவும். பாரிய நீர்த் தேக்கத்தினால் ஏற்படப் போகும் சூழல் பாதிப்பை தவிர்த்துக் கொள்ளவுமே எதிர்ப்பை தெரிவிக்கின்றனர்.

மின்சாரத் தேவையை பூர்த்தி செய்து கொள்ள சூழலை பாதிக்காத. நிலங் களை நீரில் மூழ்கடிக்காத ஆற்று நீரை ஓடவிடுகின்ற நிலையில் பல சிறி நீர்மின் திட்டங்களை ஆரம்பிக்க முடியும். அதனால் செலவு குறைவாக மின் சாரத்தை பெறமுடியும். மனித உயிர் வாழ்வுக்கு பாதிப்பான பாரிய நீர்த்தேக்கங்களும் அனல் மின் நிலையங்களும் அவ்சியமில்லை.

அவ்வாறிருக்கும் போது மேல்கொத் மலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று விடாப்பிடியாக இருப்பதன் பின்னணியில் வெளிப் படுத்தப்படாத அரசியல் உள்நோக் கங்கள் இருக்கின்றன. அவை மலையகத் தமிழ் மக்களுக்கு பாதிப் பானவை. ஒப்பந்த வேலைகளினூடாக லாபங்களை பெறும் அவாவும் இருக்கின்றது. இந் நோக்கங்களை கொண்டுள்ளவர்களுக்கு நாட்டைப் பற்றியும் அக்கறை இருக்குமென்று எதிர்பார்க்க முடியாது.

25ஆயிரம் சதுரமைல்

தொடர்ச்சி 9ம் பக்கம்..

www.padippakam.com



# மலையக அமைச்சர்களின் சேவை யாருக்கு?

தற்போதைய அரசாங்கத்தில் இரண்டு மலையக அமைச்சர்கள் இருப்பது முழு மலையக மக்களுக்கும் அதி உயர் கௌரவம் அல்லவா? இவ்வாறு கூறி மக்களை மடையர்களாக்கும் பிரகிருதிகள் இருக்கிறார்கள். எப்பொழுதும் யூ.என்.பி. மலையக மக்களுக்கு நன்மையே செய்யும் கட்சி என்றும் அதனால் தான் யானைச் சின்னம் மலையக மக்களின் மனங்களில் பதிந்து நிற்பதாகவும் கதை அளப்போர் இப்போதும் இருந்து வருகிறார்கள்.

யூஎன்.பி. எவ்வளவு நயவஞ்சகத்துடனும் பேரினவாத அகங்காரத்துடனும் மலையக மக்களை நடாத்தி வந்ததென்பதை உதைத்த காலை நக்கித் தமது பிழைப்பை நடத்துவோர் மறைத்து விடுவார்கள். ஆனால் கடந்த காலத்தை தெரிந்த மக்கள் அதன் படுபாதகமான பக்கங்களை மறந்து விடமாட்டார்கள்.

இப்போதும் கூட மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளிலும் வேலை வாய்ப்பு. கல்வி மற்றும் சமூகவளர்ச்சி என்பவற்றில் பேரினவாதப் புறக்கணிப்பை நடாத்தி வருவதில் யூஎன்.பி. சளைத்து நிற்கவில்லை. இப்போது தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வில் யூ.என்.பி. அரசாங்கமும் முதலாளிகளின் பக்கமா அல்லது தொழிலாளர்களின் பக்கமா என்பதைத் தொழிலாளர்கள் கண்ணால் பார்க்கவே போகிறார்கள். சரி அவர்களை விட்டு விட்டு அமைச்சர்கள் ஆறுமுகமும் சந்திரசேகரமும் யார் பக்கம் நிற்பார்கள்? முன்பு எவர் பக்கம் நின்றார்கள்? விரைவில் இவர்களது நிலைப்பாடு மலையகத்திற்கு தெரிய வரப் போகின்றது என்பதாலேயே இருவரும் வெவ்வேறு வேடம் கட்டி கூத்துக் காட்டி வருகிறார்கள்.

யூஎன்.பி. மலையகத்திற்கு இரண்டு முழு அமைச்சர் பதவிகள் கொடுத்து இருவரது பணிவு மிக்க சேவைகளையும் ஆதரவையும் பெற்றுக் கொள்வதற்கே யாகும். தோட்டக் கம்பெனிகளுடன் பேரினவாதத்துடனும் முரண்படாது முரண்டு பிடிக்காது பணிந்து குனிந்து செல்வதற்கே இரண்டு அமைச்சர்கள். அதேவேளை ஒருவரைக் காட்டி மற்றவரையும் கைகளுக்குள் வைத்திருக்கலாம் என்பதும் யூஎன்.பி. அனுபவப்பட்டதொன்றாகும். இப்போதாவது மலையக மக்கள் இரண்டு அமைச்சர்களினதும் சேவை யாருக்கானவை என்பதனைப் புரிந்திருக்க வேண்டும். புரியாவிட்டால் நாம் என்ன செய்வது.

# புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியில்

## ஒரு மாணவன் உள நோயாளியாக்கப்பட்ட பரிதாபம்

யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியின் உயர்வகுப்பு மாணவன் குமாரசாமி பிரதீபன் மோசமான கேலி. கிண்டலுக்கு ஆளாகியதால் உள நோயாளியாக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது. அக்கல்லூரியில் கற்பிக்கும் ஆசிரியர் லலீஸ்வரன் இம் மாணவனைத் தொடர்ந்து கேலி செய்து துன்புறுத்தி வந்துள்ளார். அத்துடன் மாணவர்களையும் தூண்டிவிட்டு அம்மாணவனை அவமானப்படுத்தும் வகையில் விடயங்கள் இடம்பெற்றுள்ளன. பாதிக்கப்பட்ட மாணவனின் குடும்பச் சூழலை வைத்து அம் மாணவன் கேலிக்குள்ளாக்கப்பட்டுள்ளான். இதனால் பாதிப்படைந்த பிரதீபன் யாழ் போதன வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக தெல்லிப்பளை உள நோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற வேண்டியதாயிற்று.

இம் மாணவன் உயர்தர வகுப்பு மாணவர் மன்றத்திற்கு தலைமைப் பதவிக்கு தெரிவு செய்யப்படும் சூழல் இருந்தது. அதனைத் திட்டமிட்டுக் குழப்பி அப் பதவிக்கு அம்மாணவனை வரவிடாது தடுப்பதற்கு மேற்படி ஆசிரியரும் வேறு சிலரும் திட்டமிட்டே மாணவர் மத்தியில் குழப்பம் ஏற்படுத்திக் கொண்டனர் என்றே கூறப்படுகின்றது.

உள நோயாளியாக்கப்பட்ட மேற்படி மாணவன் ஓரளவு குணமடைந்து மீண்டும் பாடசாலைக்குச் சென்றபோது மீண்டும் கேலி செய்யப்பட்டதால் திரும்பவும் வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை பெற வேண்டியதாயிற்று. இதுபற்றி அக்கல்லூரி அதிபருக்கு முறையிட்ட போதிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட மாணவனின் சகோதரிகள் இதுபற்றி அதிபருடனும் ஏனையோரிடம் பேச முற்பட்டும் பலன் கிடைக்கவில்லை. அதிபர் தனக்கு வேண்டிய ஆசிரியர்கள் செய்யும் மோசமான நடவடிக்கைகள் பற்றி பூசி மெழுகிக் காப்பாறிக் கொள்வார். கல்வி அதிகாரிகளை செல்வாக்கு காரணமாகக் கண்டும் காணாது இருந்து கொள்வார்கள். ஆனால் பாதிக்கப்படுவது மாணவர்களே முன்பும மணியம் மாஸ்டர் என்ற ஆசிரியரின் அடாவடித்தனத்தால் ஒரு மாணவன பழிவாங்கப்பட்டு பாடசாலையை விட்டுப்போக நேர்ந்தது. அதிபர் அந்த ஆசிரியருக்கு சப்பை கட்டி நின்றார். கல்வி அதிகாரியோ கண்ணையும் வாயையும் பொத்திக் கொண்டார். அங்சே சாதியம் எழுந்து ஆடியது. இப்போது ஒரு சாதாரண குடும்பத்து மாணவன் ஆசிரியர் ஒருவரின் அட்டகாசத்தால் உள நோயாளியாக்கப்பட்டு அக் குடும்பமே கண்ணீர் வடித்து நிற்கிறது. அவ் ஆசிரியர் அதிபரின் ஊரும் உறவும் என்பதால் பாதுகாக்கப்பட்டுள்ளார். அடுத்து எந்தெந்த மாணவர்கள் பழிவாங்கப் படுவார்களோ தெரியாது. ஒரு காலத்தில் கல்விக்கும் ஒழுக்கத்திற்கும் நல்லாசிரியர்களுக்கும் பெயர் பெற்று விளங்கிய சோமஸ்கந்த கல்லூரி இன்று பழிவாங்கல்களுக்கும் மாணவர்களை நாசப்படுத்துவதற்கும் பெயர் பெற்று வருகிறது. இந் நிலை எப்போது மாற்றமடையும்.

புத்தூர் எம்.தெய்வேந்திரகுமார்


இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரே ஒரு
வெகுஜன அரசியல் பத்திரிகை

புதிய பூமி

ஒவ்வொரு மாதமும் 1ம் திகதி வெளிவருகிறது.

நிதி உதவி செய்யுங்கள்

செய்திகள் - கட்டுரைகள் அனுப்புங்கள்

உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்

சந்தா சேருங்கள்

வருட சந்தா – 200 ரூபா
ஆறு மாதம் – 100 ரூபா
வெளிநாடுகளுக்கு US $ 20.00
(தபாற் செலவு உட்பட)

விற்பனைக்கு உதவுங்கள்

தொடர்புகளுக்கு :

ஆசிரிய பீடம் / நிர்வாகம் :
புதிய பூமி
S-47, 3வது தளம்,
கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
(C.C.S.M. Complex)
கொழும்பு - 11, இலங்கை.

பணம் அனுப்பும் வங்கி விபரம் :
சோ. தேவராஜா
கணக்கு இலக்கம் : 0672-21-2002634-6
Bank of Ceylon
Central Super Market, Colombo - 11.


# நற்குணண் நாலு நடக்கும் உலகிலே

## பிள்ளையையும் கிள்ளி விட்டு...

சனாதிபதி சந்திரிகாவுக்கு இப்போது பேச்சு வார்த்தைகள் சரிவர நடக்க வேண்டும் என்பதிலே பெரும் அக்கறை வந்துவிட்டது. கிழக்கு நிலவரம் குறித்து அவர் காட்டியுள்ள அக்கறை பற்றி யாரும் குறை சொல்லக் கூடாது. ஆனால். ராணுவமும் அதை விட அதிகமாகக் கடற்படையும் நடத்துகிற குழப்ப வேலைகளைப் பற்றித் தான் தட்டிக்கேட்க அவருக்கு மனமில்லை. எங்கேயெல்லாம் தமிழருக்கிடையிலும் தமிழர்-முஸ்லிம்கள் இடையிலும் விலக்குப் பிடிக்க ராணுவத்தை அனுப்ப முடியுமோ அங்கேயெல்லாம் ஜனாதிபதிக்கு அக்கறை கட்டாயமாக இருக்கும்.

## ஹக்கீமுக்கு ஊக்குப் போனால் சரி

அமைச்சர் ரவூப் ஹக்கீமுடனான முஸ்லிம் தலைமைப் போட்டி இரண்டு முனைகளில் தொடருகிறது. ஒன்று பழைய குத்துவெட்டு. பேரியல் அஷ்ரப்பும் ஹிஸ்புல்லாவும் பொதுசன முன்னணி ஆதரவுடன் முஸ்லிம் காங்கிரஸைக் கவிழ்க்கிற வேலை நொண்டி நொண்டி நடக்கிறது. மறுபுறம் 'முஸ்லிம் தேசம்' என்ற பேரில் தமிழர் மீதான பகைமையையும் புலிகள் மீதான பகைமையையும் வளர்த்து அதேவேளை சிங்களப் பேரினவாதம் பற்றியும் கூச்சலிடுகிற ஒரு குழுவின் செயற்பாடு.

தமிழர்-முஸ்லிம்கள் மோதலால் அமைதிக்கான முயற்சிகளுக்குப் பாதிப்பு. தமிழர்-முஸ்லிம்களின் ஒற்றுமைக்குப் பாதிப்பு. புலிகளுடன் சமரசம் செய்யும் அமைச்சர் ஹக்கீமுக்கு சங்கடம். இதனால் யாருக்கு நன்மை? ரவூப் ஹக்கீமை விமர்சனம் செய்கிறதில் பிழை இல்லை. ஆனால் வீடு எரிகிறபோது விறகு பொறுக்குகிற வேலை செய்யலாமா? இன்றைய தேவை என்ன? தமிழர்-முஸ்லிம்கள் நடுவே பொதுசன மட்டத்தில் புரிந்துணர்வு வேண்டாமா? அதைக் குழப்பிப் பகைமையை வளர்க்கிறவர்களின் நோக்கம் என்னவாக இருந்தாலும் நல்லதாக மட்டும் இருக்காது.

## தமிழ் ஏடு. தமிழருக்குக் கேடு

தமிழ் ஏடு என்று ஒரு புதிய வார ஏடு. அதிலே யூஎன்.பி. மீதும் த.வி.கூட்டணி மீதும் கடுமையான கண்டனத்துக்குக் குறையில்லை. இடையிடையே விடுதலைப் புலிகளுக்கு மேலே ஓரிரண்டு சில்லறைச் சொறிதல்கள். என்றாலும் நேரடியாக ஒன்றும் இல்லை. ரவூப் ஹக்கீம் மீது கடுமையான விமர்சனம். பார்ப்பனிய எதிர்ப்பு. ஏகாதிபத்திய எதிர்ப்பு என்று முற்போக்கான சில விடயங்களும் வெவ்வேறு இடங்களில் உண்டு. ஆனாலும் பொதுசன முன்னணி பற்றிக் குறைபாடாக ஒரு சொல்லைக் காண முடியாது. இது எப்படி?

முன்னர் ஏரிக்கரையின் மேலே 'அமுது' படைக்கிறேன் என்று பொதுசன முன்னணிக்காகப் பிரசாரம் பண்ணினவரே தான் இப்போது ஏடெடுத்திருக்கிறார் என்று சொல்கிறார்கள். யார் எசமான் என்று ஊகிப்பது கடினமா? கூலி தருகிறவன் சொல்லுகிறபடிதானே கூத்தாடி பாடி ஆடுவான். நாளைக்கு ஒப்புக்கு பொதுசன முன்னணி. ஸ்ரீல.சு.க.ஆகியவை பற்றி அடிக்குமாப் போல் ஒரு அடி விழும். ஆனாலும் எசமான் அழுமாப்போல் அழுது. உள்ளே மகிழ்வுடன் இன்னும் வாரி வழங்குவார்.

## அனுமாரின் எடுபிடிக்கு அதிஷ்ட்டம் இல்லை

அனுமாரின் அற்புதங்கள் பற்றி துண்டுப்பிரசுரம் அடித்து விடுகிறவர்களுக்கு அனுமார் அருளால் வீட்டில் தங்க நாணயங்களும் லொட்டரியில் கோடிக்கணக்கில் பரிசும் கிடைக்கிறதாம். துண்டுப்பிரசுரங்களைக் குப்பையில் போட்டவர்களை நோய், பொருள் நட்டம். சாவு என்பன பீடித்தனவாம். இப்படி ஒரு துண்டுப்பிரசுரம். இன்னும் பிறரையும் இப்படி அடித்து விநியோகிக்க வற்புறுத்தும் பிரசுரம். இதை பொது இடத்தில் கொண்டுபோய் வைக்கிற பையன் மட்டும் பழையசைசிக்கிளும் கந்தல் உடுப்புமாகவே காரியம் பார்க்கிறான். அனுமார் அருள் அவனுக்கு என்று கிட்டுமோ, அனுமாரும் முதலாளிமாருக்கே இரங்குகிறாரா? அனுமார் கோவில் கட்டியெழுப்பி வருகிறவர்களைப் பார்த்தால் புரியும்!.

## சங்கரியாரின் தாய் நாடு

30.06.2002 சண்டே ஐலண்ட நேர்காணலில் ஆனந்த சங்கரியார் உதிர்த்த முத்துக்களில் ஒன்று : இந்தியா நமது தாய்நாடு. இந்தியா என்றுமே நமக்குத் தீங்கு செய்யாது. இந்த 'நாம்' யாரென்று அவருக்குத் தான் தெரியும். அவரும். சம்பந்தர். சிவசிதம்பரம், அமிர்தலிங்கம், சந்திரகாசன் போன்றவர்கள் இந்தியாவின் செல்லப் பிள்ளைகள். சாதாரணத் தமிழர்கட்கும் தமிழக அகதி முகாம்களில் உள்ளவர்களுக்கும் இந்தியா இரக்கமற்ற மாற்றாந்தாய். ஈழத்து அரசியலை விட்டு. சங்கரியார் தனது 'தாய்நாட்டுக்கே' போனாரென்றால் அவருக்கும் நல்லது ஈழத்தமிழருக்கும் நல்லது.

## ஒற்றுமையே இவர்க்கு உயிர்நாடி

மாவை சேனாதிராஜாவுக்கும் ஆனந்த சங்கரிக்கும் உள்ள முறுகல் யாழ்ப்பாணத்துச் சாதிச் சண்டைகளை நினைவூட்டுகிறது. மாவை தன்னுடைய தமிழரசுப் பாரம்பரியம் பற்றிப் பேசி ஆள் திரட்டவும் சங்கரி தன்னுடைய தமிழ் காங்கிரஸ் அடையாளத்தை மூடிக் கூட்டணி அடையாளத்தை வலியுறுத்தவும். வேடிக்கைதான். போதாதற்கு யூஎன்.பி. குடும்ப மரபில் வந்த சம்பந்தருக்கும் சங்கரியாருக்கும் இன்னமும் சிவசிதம்பரத்துக்கு வாரிசு தேடிப் போட்ட சண்டையின் சூடு ஆறவில்லை. இப்படியே ஆளுக்காள் கூட்டணிக்குள் குத்துப்பட்டால். நாலு கட்சி ஐக்கியத்தின் நிலை எப்படியிருக்கும்? அது சுத்தப் பம்மாத்து என்பது முன்னமே விளங்கிய சங்கதிதானே.

## பேர் தெரியாத தீய சக்திகள்

கிழக்கில் தமிழ்-முஸ்லிம் மோதலைக் கிளறி விட்டவர்கள் சமாதானத்தை விரும்பாத தீய சக்திகள் என்று எல்லாருமே அடித்துக் கூறுகிறார்கள். ஆனால் யாருமே இந்தத் தீய சக்திகள் யாரென்று அடையாளம் கூறத் தயங்குகிறார்கள். அவை இன்னொரு கிரகத்திலிருந்து வந்தவையா?

## யார் காதில் இந்தப் பூ?

சங்கரியார் உதிர்த்த இன்னொரு முத்து : வடக்குக் கிழக்கில் புலிகளைச் சீண்டிவிடும் வேலையில் கீழ் மட்டப் படையினர்தானாம் ஈடுபட்டு உள்ளார்கள். ஏனென்றால் போர் நிறுத்தத்தால் அவர்கட்குப் பொருள் நட்டமாம். உயர் அதிகாரிகள் அமைதிக்கான முயற்சிகளை முற்றுமுழுதாக ஆதரிக்கிறார்களாம்.

சங்கரியாருக்கு அரசியல் விளங்காமலிருக்கலாம். ஆனாலும் பிழைக்கத் தெரிந்தவர். எங்கெங்கே எப்படி எப்படி நுழைய வேண்டும் என்பதைத் தெரிந்தவர். எந்தெந்த இடங்களில் கை வைக்க வேண்டும். வைக்கக் கூடாது என்பதை நன்கு அறிந்தவர். இலங்கையின் யூஎன்.பி. மீதோ இந்தியாவின் தலைவர்கள் மீதோ குற்றம் சாட்டப்படுவதை விரும்பாதவர். அப்படி யாராவது கைவைத்தால் சீறிப் பாய்வார்.

படிப்பகம்

www.padippakam.com



# ஜே.வி.பி.யின் கொடி எழும்ப மறுக்கிறது

ஜே.வி.பி. அப்பட்டமான பேரின வாதக் கட்சி என்பதை நடைமுறையில் மெய்ப்பித்து வந்துள்ளது. அதன் மூலம் அதனது கொள்கை மார்க்ஸியம் அல்லவென்றும் அவர்களது நிறம் உண்மையான சிகப்பு அல்லவென்றும் மீண்டும் மீண்டும் நாம் ஏலவே எடுத்துரைத்து வந்துள்ளோம். ஆனால் சிலர் அதனிடம் ஏதாவது இடதுசாரிக் கொள்கை எஞ்சியிருக்கும் என நம்பி வந்தனர். அவர்கள் இப்போது இஞ்சி தின்ற குரங்கு போல் விழித்து நிற்கிறார்கள்.

அதேவேளை முழுமையான மார்க்ஸிய எதிர்ப்பிலும் இடதுசாரிக் காழ்ப்புணர் விலும் இருந்து வருவோர் இடதுசாரி களைத் தாக்குவதற்கு ஜே.வி.பி.யை உதாரணம் காட்டிப் பேசுவதை நிறுத்தவில்லை. அவர்களது நோக்கம் ஜே.வி.பி.யை எதிர்ப்பதல்ல. அதனைக் காட்டி நேர்மையான சகல மார்க்ஸிய வாதிகளையும் தாக்குவதற்கேயாகும்.

இது ஒருபுறத்தில் நடைபெற ஜே.வி.பி. தனது பேரினவாதப் பாதையில் தொடர்ந்து செல்கின்ற போதிலும் அவர்களது கொடி எழும்ப மறுக்கிறது. பாராளுமன்றத்தில் 15 ஆசனங்கள் உண்டு. அதில் இராமலிங்கம் சந்திரசேகரம் என்ற தமிழரும் அஞ்சான் உம்மா என்ற முஸ்லீம் பெண்மணியும் அங்கம் பெறுகின்றனர். அதனால் தாங்கள் கூறுகின்ற சகல இனவாதச் சாக்கடைக் கொள்கையையும் மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்றே ஜே.வி.பி. தப்புக்கணக்குப் போட்டு சுவர்கள் நிறைய இனவாத வாந்தி எடுத்து போஸ்ரர் ஒட்டி அரசியல் நடாத்து கின்றனர்.

இவர்கள் ஏதோ ஏதோ எல்லாம் கூறித் தமது கொடியை எழுப்பப் பார்த்த போதிலும் அது எழும்புவதாக இல்லை. இறுதியில் இப்போது அனுரா பண்டாரநாயக்காவையும், தினேஷ் குணவர்த்தனாவையும் அக்கப் பக்கத் துணைக்கு சேர்த்து நிற்கின்றனர். அண்மையில் அவர்களது வழமையான ஆட்கள் திரளும் இடமான நுகேகொடவில் பிரிவினையை எதிர்த்தும் தாய் நாட்டைப் பாதுகாத்தும் கூட்டம் நடாத்தினர். இதற்காக ஜே.வி.பி.யினர் சிகப்பு-நீல வர்ணச் சுவரொட்டிகளை கொழும்பு நகரம் முழுவதும் அலங்கரித்தனர். அனுராவும் வீரவன்சவும் மிக மிக நெருங்கி இருந்து இனவாதிகளுக்கு நம்பிக்கை அளிக்க முற்பட்டனர். ஆனால் மக்கள் இந்த ஐக்கியத்தில் அக்கறை காட்டவில்லை. ஜே.வி.பி. வழமையாகக் கொண்டு வந்து இறக்கி விடும் தொகையினர் மட்டுமே ஆங்காங்கே சிகப்புகளுடன் காணப்பட்டனர். ஆனால் இப்போது தலைவர்கள் அதிகம் சிகப்பு உடைகள் பயன்படுத்துவது இல்லை. முன்பு ஒரு தடவை குறிப்பிட்டது போன்று அவர்களது நிறம் மஞ்சள் என்பதாக மாறி உள்ளது. ஏனெனில் அவர்களது தற்போதைய போட்டியாளர்கள் சிஹல உறுமய கட்சிதான். அவர்களது நிறம் மஞ்சள் காவியேயாகும். அத்துடன் அடிக்கடி ஜே.வி.பி. தலைவர்கள் மலர்த் தட்டுகளுடன் தலதா மாளிகை செல்வதுடன் பௌத்த பீடத் தலைவர்க ளான மகா நாயக்க தேரர்களின் கால்களின் கீழ் வீழ்ந்து வணங்கி ஆசீர் வாதம் வாங்கி ஆலோச னைகளும் பெற்று வருகின்றனர்.

அவர்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு இருக்கும் கிராமியச் செல்வாக்கையும் வாக்கு வங்கியையும் தமதாக்கிக் கொள்ளும் போக்கிலேயே சென்று கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. அதன் பிரதான போக்கு இனவாதமேயாகும். அதனால் தான் தெற்கில் மகிந்த ராஜபக்ஷ போன்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்கள் ஜே.வி.பி.யுடன் ஐக்கியம் கொள்வதை எதிர்க்கின்றனர். எதிரிக்கு எதிரி நண்பன் என்ற அடிப்படையில் அனுரா ஜே.வி.பி.யுடன் ஐக்கியம் பூண்டு பேரினவாதம் உரைத்து நிற்பதுடன் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையையும் எதிரித்து வருகின்றனர்.

பாராளுமன்ற வாதச் சாக்கடை அரசியலில் யார் யார் எங்கே நிற்க முடியுமோ அங்கங்கே இருந்து வருவது போன்று ஜே.வி.பி.யும் தனது இடத்தில் நின்று தனது சுயரூபத்தைக் காட்டி வருகின்றது. இவ்வேளையில் தான் குறைந்தபட்சமாவது நெஞ்சிக்கு நேர்மை செலுத்தி மக்கள் சார்பாக வெறும் குரலைத்தானும் இடதுசாரி என்ற பெயரில் கொடுக்க ஒருவரும் இல்லாத ஒரு அவல நிலை பாராளு மன்றத்தில் காணப்படுகின்றது. அந்தளவுக்கு மக்கள் பாராளுமன்றப் பாதையாலும் ஆளும் வர்க்க அரசிய லாலும் ஏமாற்றப்பட்டிருப்பதைக் கண்டு நொந்து நிற்க வேண்டியதாக உள்ளது.

# அணு விஞ்ஞானி ஜனாதிபதியாக்கப்பட்டார்

எதிர்பார்த்தபடியே இந்திய அணு விஞ்ஞானி ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். இந்துத்துவ ஆட்சியாள ருக்கு – உலகிற்கு மதசார்பின்மையை பறை சாற்றுவதற்காக ஒரு முஸ்லிம் தேவைப்பட்டார். அரசியலைப் பற்றியே சிந்திக்காதிருந்த அணுவிஞ்ஞானியைப் பிடித்து ஜனாதிபதியாக்கி விட்டனர். இந்தியாவில் வேளாவேளை முஸ்லிம்களுக்கெதிராக கட்டவிழ்த்து விடும் வன்முறைகளைப் பற்றி புதிய ஜனாதிபதி கேள்வி எழுப்பமாட்டார் என்பது மட்டும் நிச்சயம். முன்பொரு தடவை டாக்டர் சாகிர் குசேன் ஜனாதிபதியாய் இருந்து எதையும் சாதித்து விடவில்லை. புதியவரும் புதிதாய் எதையுமே செய்யமாட்டார்.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் 147 பேரின் வாக்குகள் செல்லுபடியற்ற தாக அறிவிக்கப்பட்டுள்ளது. 42 எம்.பி.களுக்கும் 132 எம்.பி.களும் எப்படி வாக்களிப்பதென்று தெரியாத நாடாளு மன்ற உறுப்பினர்கள். இந்த 147 பேரையும் தெரிவு செய்த இந்திய மக்கள் பரிதாபத்திற்குரியவர்கள்.

கல் தோன்றி மண் தோன்ற முன்பு இருந்த தமிழர்கள் ஆறு பேரும் தமது வாக்குகளைச் சரிவர செலுத்தாமை யால் அவை நிராகரிக்கப்பட்டன.



# எரிபொருள் விலைகுறைப்பால் யாருக்கு நன்மை

மண்ணெண்ணையின் விலை 80 சதத்தால் மட்டும் குறைக்கப்பட்டதால் சாதாரண மக்களுக்கு எவ்வித நன்மை யுமில்லை. அண்மையில் எரிபொருள் விலை குறைக்கப்பட்டுள்ளதால் பெரும் பாலான மக்களுக்கு நிவாரணம் எதுவும் கிடைக்கவில்லை.

டீசல், பெற்றோல் என்பனவற்றின் விலை குறைக்கப்பட்டுள்ளதால் பஸ் கட்டணங் கள் குறைக்கப்பட்டதாக இல்லை. யூஎன்.பி. அரசின் எரிபொருள் விலைக் குறைப்பானது சமூகத்தில் வசதியுடைய வர்களுக்கே மேலும் சலுகை வழங்குவ தாக அமைந்துள்ளது. நாட்டில் 51%மானவர்களுக்கு மட்டுமே மின்சார வசதியுள்ளது. 49% மானவர்கள் தங்கள் தேவைகளுக்கு மண்ணெண்ணெய் பயன்படுத்துகிறார்கள். நாட்டின் 49%மானவர்கள் பயன்படுத்தும் மண்ணெண்ணெய் விலையில் 80 சதம் மட்டுமே குறைக்கப்பட்டது. அதே சமயம் டீசலின் விலை மூன்று ரூபாவினாலும், பெற்றோலின் விலை ஏழு ரூபாவினாலும் குறைக்கப்பட்டது. சாதாரண மக்கள் வாழ்க்கைச் செலவிற்கு ஏற்ற வகையில் அன்றாட ஊதியத்தைப் பெறுவதில்லை. அப்படியிருந்தும் மண்ணெண்ணெய் விலையானது பெயரளவிலேயே குறைக்கப்பட்டதை அவதானிக்கலாம். 49% மக்கள் மின்சாரமின்றி இருப்பதால் அவர்களுக்கு மட்டும் மண்ணெண் ணெய் தேவையென்ற முடிவுக்கு வர முடியாது. வடபகுதியை எடுத்துக் கொண்டால் மின்சாரம் இருக்கும் இடங்களிற் கூட தோட்ட வேலைக்கு மண்ணெண்ணெய் பயன்படுத்தப் படுகிறது. நாட்டின் அரைப்பங்கினருக்கு மேல் மண்ணெண்ணெய் தமது அன்றாட தேவைக்கு பயன்படுத்து கின்றனர். எனவே எரிபொருள் விலைக் குறைப்பானது நாட்டின் அரைப்பங் கினருக்கு எதுவித நன்மையையும் கொடுக்கப்போவதில்லை.

# வட பிராந்திய போக்குவரத்துச் சபை

வடபிராந்திய போக்குவரத்துச் சேவையில் மாதாமாதம் இளைப்பாறும் ஊழியர்கள் அவர்களது சேமலாப நிதியை மீளப் பெறுவதில் பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றனர். வடபிரதேச போக்குவரத்துச் சபையின் சேமலாபநிதி கொழும்பில் மத்திய போக்குவரத்துச் சபையிடமே உள்ளது.

மீளப்பெறும் இளைப்பாறும் ஊழியர் 5000 ரூபா. லஞ்சம் கொடுத்தால் மட்டுமே மீளப்பெறக் கூடியதாகயுள்ளது. புதிய தலைவர், புதிய ஆளணி முகாமையாளர் என்ற போதும் லஞ்சமும் ஊழலும மத்திய போக்கு வரத்துச் சபையில் தொடர்கிறது. ஊழியர் களின் பதவி உயர்விலும் பாராபட்சமே காட்டப் படுகிறது. மத்திய போக்கு வரத்துச் சபையின் தற்போதைய தலைவர் முன்னாள் எம்.பியாவார். அவர் ஒரு வர்த்தகப் பிரமுகருமாவார்.

## இலங்கை அமெரிக்கா..

1ம் பக்க தொடர்ச்சி..

ரணிலின் அமெரிக்க விஜயமும், புஷ்ஷுடனான சந்திப்பும் பேச்சு வார்த்தையும் ஆகும்.

ரணில் விக்கிரமசிங்கஹ பிரதமராக பதவியேற்றது முதல் நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க முடியாது எடுத்துவரும் நடவடிக்கைகள் நாட்டின் பொருளா தாரத்தை மேலும் அதள பாதாளத்திற்கு தள்ளுவனவாகவே அமைந்துள்ளன. குறிப்பாக சமாதான நடவடிக்கைகளில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை கட்டுப்படுத்துவதற்கும் போராட்டத்தின் முதன்மை சக்தியாக இருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை கட்டுப்படுத்துவதற்கும் ஏற்ற, தனக்கு சாதகமான வெளி விவகார நிலைமைகளை ஏற்படுத்திக் கொள்வதிலும் அக்கறை செலுத்தி வருகிறார். அவரின் இந்திய விஜயத் திற்குப் பிறகு இந்தியாவில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் அவரின் இராஜதந்திரத் தின் உள் நோக்கங்களை நன்கு உணர்த்தியுள்ளன.

உலக நாடுகளின் சமாதானம், சுதந்திரம், தேசிய இனங்களின் விடுதலை, உலகப் பொருளாதாரம் என்பன அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அக்கறைகளுக்குட்பட்டதாக இருக்க வேண்டும் என்ற உலக ஒழுங்கை உறுதிப்படுத்துவதில் அமெரிக்கா உறுதியாக செயற்படுகிறது. அதற்கு ஒத்திசைவாக இலங்கையின் இறைமை சுதந்திரம், தேசிய இனங்களின் விடுதலை குறிப்பாக தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டம் என்பன கட்டுப்படுத்தப்பட்டதாக முதலாளி வர்க்க, பேரினவாத ஆளுகைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இருக்க வேண்டும் என்றெ ரணிலின் தலைமையிலான ஐ.தே.மு. அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

இலங்கைத் தமிழ் மக்களில் மேட்டுக் குடியினர் இந்திய ஆளும் வர்க்கத்தின ரையும், இந்திய மேலாதிக்க சக்தி களையும் நம்பியது போன்று அல்லது அவர்களுக்கு

தொடர்ச்சி 11ம் பக்கம்...

# அதிரடி இடமாற்றத்தின் உள் நோக்கம் என்ன?

வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் 14.06.2002 தொடக்கம் திடீரென வவுனியா வடக்கு வலயத் துக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். கிராமப்புறக் கல்வியை வளர்க்க சர்வாதிகாரி பேல நிர்வாகம் நடாத்திய இப் பெண்மணியை விழுத்துவதற்கு மற்றொரு கல்விப் பணிப்பாளர் ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே திட்டமிட்டுச் செயற்பட்டதாக அப் பெண்மணி கூறுவதில் உண்மை உண்டு.

தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் பதவி வகிப்பதற்கு சம்பளத்தை விட பல்வேறு மேலதிகக் கடமைகள் காரணமாக மேலதிக அலவன்ஸ் சம்பளத்தை விடக் கூடுதலாகக் கிடைக்கும். அதனால் அந்த ஐயா அக் கதிரையைப் பிடிக்கச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தார்.

ஆசிரியர்களின் இடமாற்றங்கள் சிலவற்றை செய்து தரும்படி வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கேட்பதுண்டு. அப்போது அவை கேட்பதை எல்லாம் இப் பெண் பணிப்பாளர் செய்து கொடுக்கவில்லை. அதனால் பாராளுமன்ற உறுப்பினர்கள் இப் பெண்மணியை பதவியில் இருந்து அகற்றி தங்களுக்கு மதிப்பளிக்கும் ஒருவரை இப் பதவியில் அமர்த்த வேண்டிய தேவை இருந்தது. இச் சந்தர்ப்பத்தை பெரிய பணிப்பாளர் பயன்படுத்திக் கொண்டார்.

அடுத்து வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளராகப் பதவியேற்று அண்மையில் வந்த முஸ்லீமானவருக்கு 01.07.2002 அன்றுடன் 60 வயது பூர்த்தியடைந்து ஓய்வு பெற வேண்டும். அவருக்கும் பதவி ஆசை பிறந்தது. 61வது வயதிலும் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்து இரண்டு சம்பளம் எடுக்க விரும்பினார். இவர் இவ்வாறு தொடர்ந்து இருப்பதாயின் வவுனியா பெரிய பணிப்பாளர் மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு போட்டியிடக் கூடாது. எனவே முஸ்லீமானவர் வவுனியா பெரிய பணிப்பாளரிடம் ஒரு இரகசிய ஒப்பந்தத்தை செய்து கொண்டார். அதன்படி வவுனியா மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவியுடன் தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் பதவியும் அந்த தமிழருக்கு வழங்கப்படும். அதே நேரம் அந்த தமிழ் அதிகாரி முஸ்லீமானவர் 61வது வயதிலும் கடமையாற்றுவதை எதிர்க்கக் கூடாது. மனித உரிமைச் சங்கத்திற்குச் சென்று முறைப்பாடு செய்யக் கூடாது. இதன்படி இப்போது இவர்கள் செய்து கொண்ட 'புரிந்துணர்வு ஒப்பந்தம்' வெற்றிகரமாக அமுல்படுத்தப்படுகிறது.

இதனால் பாதிக்கப்பட்டவர்கள் பலர். அந்தப் பெண் பணிப்பாளரின் முதல் நியமனம் தொடக்கம் இன்றுவரை தனது மாவட்டத்திலேயே வவுனியா நகரப் புறத்திலேயே பெரும்பாலும் சேவையாற்றியுள்ளார். சிலகாலம் செட்டிகுளப் பாடசாலைகளையும் மேற்பார்வை செய்துள்ளார். இப்போது இப் பெண்மணியை மிக மிகக் கஸ்டப் பிரதேசமான வவுனியா வடக்கு கல்வி வலயத்திற்கு தள்ளியுள்ளனர். இவர் வவுனியா வடக்கு கல்வி வலயத்திற்கு வந்தபடியால் அங்கு பணிப்பாளராக இருந்தவர் இருக்கக் கதிரை இல்லாத நிலையில் திருகோணமலை மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு ஓடிவிட்டார். இவரும் பென்சனும் சம்பளமும் சேர்த்து மாதம் ரூபா முப்பதாயிரம் பெற்று அக் கரியாலயத்தில் உள்ள நிர்வாக அதிகாரிகளின் முன்னேற்றத்தை தடுத்து வந்த பெருமை உடையவராக இருந்தார். யூலை முதலாம் திகதி வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளராக அவ்வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராக இருந்து வந்தவர். பதவியேற்கவிருந்த சமயம் தெற்கு வலயத்தின் பண வருமானம் மிக்க கதிரைக்கான போட்டி வவுனியா வடக்கு வலயத்தில் உள்ள இளம் கல்வி நிர்வாக சேவையினரைப் பெரிதும் பாதித்துள்ளது.

பாவம் ஆசிரியர்கள், அதிபர்கள், பணிப்பாளர்கள் பதவிப் போட்டியை வேடிக்கை பர்த்துக் கொண்டிருக் கிறார்கள். கல்வியில் அபிவிருத்தியா? தனியார் வருமானத்தில் அபிவிருத்தியா? எது இன்று தேவை என அவர்கள் தமக்குள் பேசிக் கொண்டதுடன் தவறணைகளை அரசு மூடுவதற்கு முன்வந்ததையும் வரவேற்கின்றனர். அதன் மூலம் கடமை நேரத்தில் பணிப்பாளர்கள் மது அருந்தாமல் இருக்க முடியும் எனவும் நம்புகிறார்கள்.

2002ல் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு வந்த இலவச பாட நூல்கள் வவுனியா மேலதிகப் பணிப்பாளரது பணிமனையில் கவனிப்பாரற்றுக் கிடப்பதை யார் கவனிக்கப் போகின்றார்கள்? இதனைக் கவனிக்க இந்தப் போட்டியாளர்களுக்கு எங்கே நேரம்? நமது நாட்டுக் கல்வி அதிகாரியின் சேவைக்கான சித்து விளையாட்டுக்கள் மேலே செல்லச் செல்ல அதிகரித்தே செல்லும். அதிலும் தமிழ் உயர் அதிகாரிகள் என்றால் சொல் வேண்டியதே இல்லை.

படிப்பகம்

www.padippakam.com



# 'மலையகத் தமிழ்த் தேசிய இனமும்' தமிழ் மொழி வளர்ச்சியின் தேவையும்

**- ம. அழகேசன் -**

மலையத் தமிழ்த் தேசிய இனத்தின் மொழி தமிழ். அவர்களுடைய மொழிப் பிரயோகம், பேச்சுவழக்கு இலங்கைத் தமிழ் மக்களிலிருந்து வித்தியாசமான தனித்துவமான, பண்புகளை கொண்டதாகும். மலையத் தமிழர்களின் தேசிய அபிலாஷைகள் என்பது அவர்களின் சொந்த மொழியான தமிழில் அவர்களின் சொந்த விவகாரங்களை செய்து கொள்ளுவதற்கான, தொடர்பாடல்களை செய்து கொள்ளுவதற்கான உரிமையை உள்ளடக்கியதாகும்.

போராட்டங்களை முன்னெடுத்து தமிழ்மொழிப் பிரயோகம், தமிழ்மொழி வளர்ச்சி என்பவற்றுக்கான உரிமைகளை உறுதி செய்து கொள்வதுடன், மலையகத் தமிழ் சமூகம் உள்ளார்ந்தமாக தமிழிமொழிப் பிரயோகம், தமிழ் மொழி வளர்ச்சி என்பதை கவனத்தில் எடுப்பது தேசிய இனம் என்ற அடையாளத்தை முன்நிறுத்தும் முயற்சிகளில் பிரதானமானதாகும்.

1. பாடசாலை கல்வியில் தமிழ்மொழியை பூரணமாக கற்றுக்கொள்ளும் வழிமுறைகளை உறுதி செய்வது அவசியம். தாய் மொழிக்கல்வி அடிப்படைக் கல்விக்கு இன்றியமையாததாகிறது என்ற அடிப்படையில் கல்வியில் வேறு வேறு துறைகளில் முன்னேற்றமடைய தாய்மொழி அறிவு ஆழமானதாக இருக்க வேண்டும். இது வடக்கு கிழக்கில் தமிழ்மொழிப் பிரயோகம் பேச்சுவழக்கு என்பவற்றை பிரதி பண்ணுவது என்பதாகாது. சரியாக எழுதுவது சரியாக பேசுவது உச்சரிப்பது போன்றனவும் சுருக்கமாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்தும் ஆற்றலை வளர்த்துக் கொள்வதும் அடங்கும். இதன்மூலமே பிற மொழிகளை திறம்பட பிரயோகிக்கும் ஆற்றல் வளர இடமுண்டு.

2. காலனித்துவ காலத்தில் 'வெள்ளை எஜமானர்களை விழித்தும், அவர்களை தொழிலாளர்களை விழித்தும் கங்காணிகள் உட்பட பெருந்தோட்ட மேற்பார்வையாளர்கள் தொழிலாளர்களை விழித்தும் தொழிலாளர்களை அவர்களை விழித்தும் பிரயோகம் செய்யப்பட்ட எஜமானர்கள் - கூலிகள் என்ற வர்க்க உறவை எடுத்துக்காட்டும் சொற்களே மலையகத் தமிழ் மக்களின் தமிழ் மொழியில் பிரயோகத்தில் விஞ்சி இருக்கின்றன.

வெள்ளைக்காரன் மாதிரி, துரை, ஐயா. சார், சரிங்க. இல்லீங்க போன்ற பல சொற்களை உதாரணமாக கொள்ள முடியும்.

இன்று பழைய காலனித்துவ நிர்வாக முறை இல்லை. தோட்ட மேற்பார்வைகளின் தரத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தோட்டக் கம்பெனிகளுக்கும் தொழிலாளர்களும் தொழில் ஒப்பந்த அடிப்படையில் இணைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் அந்தளவுக்கு தோட்ட தொழிலாளர்குளின் உள்ளார்ந்த வளர்ச்சி ஏற்படவில்லை. இன்னும் குடிமக்களாக, கூலிகளாக வாழ்கின்ற மனோபாவம் பிரயோகிக்கும் மொழியில் நன்றாகவே உறுதி செய்யப்படுகிறது.

இன்று படித்தவர்கள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் இருப்பினும் அவர்களின் பின்தங்கிய, தயக்கமான நிலை அவர்களின் மொழியில் முத்திரை பதிக்கப்பட்டுள்ளது.

தோட்டத்தொழிலாளர்களை மேற்பார்வை செய்யும் தொழில் செய்வோர் பேச வேண்டிய மொழி என்று ஒன்று இன்னும் வழக்கில் இருக்கிறது.

இந்தியாவிலிருந்து அதே சாதி அடையாளங்களுடன் இங்கு வந்திருந்த போதும். சாதியடிப்படையிலான தொழில்கள் (சலவை. சலூன் தொழிலாளர்கள் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் தவிர) அப்படியே இங்கு பேணப்படவில்லை. தீண்டாமை சாதியமைப்பின் மையமாக இருக்க முடியவில்லை. மலையகத் தமிழ் மக்களின் பண்பாடு (சாதிய பாதிப்புகள் இருந்தபோதும்) சாதிய அடிப்படையில் கட்டி வளர்க்கப்படடதாக இல்லை.

இவ்வாறிருந்தும் சாதிய சமூகத்தின் மொழிப்பிரயோகம் இன்னும் அப்படியே இருப்பதை அவதானிக்க முடிகிறது. உதாரணமாக 'நம்மவர்கள்' என்று சுட்டுவதும் 'எங்களது வழக்கம்' என்பதும் சாதியத்தைக் குறிப்பதாகும். சாதியின் பெயரால் குணங்களை பார்ப்பதும் போற்றுவதும் இகழ்வதும் இன்னும் நடைமுறையில் இருக்கின்றன.

பிற மொழி பேசுபவர்களை உயர்வானவர்களாக கொள்ளுகின்ற தாழ்வு சிக்கல் மொழிப் பிரயோகத்தில் இருக்கிறது. தமிழ் ஆசிரியர்கள். அதிபர்களுக்கான கூட்ட நிகழ்ச்சியை சிங்கள மொழியில் நடத்துவதை அங்கீகரிப்பதுடன். அதில் சிங்கள மொழியிலே பேச எத்தனிப்பது என்பன இன்னொரு மொழியின் ஆளுகையை ஏற்பதாகிறது. அங்கு மொழி சமத்துவத்திற்கு இடமே இல்லை.

பெண்களை இழிவாக குறிக்கும் சொற்களின் பிரயோகம் இன்னும் அப்படியே இருக்கின்றன. பொருளாதார ரீதியாக சமத்துவமா பொறுப்பையும். பங்களிப்பையும் பெண்கள் செய்தும் இன்னும் இந்நிலை தொடர்கிறது. இன்று படித்த பெண்களின் எண்ணிக்கை கணிசமாக இருந்த போதும் பிரயோகத்தில் மொழியின் பிரயோகத்தில் பெண்களின் நிலை தாழ்த்தப்பட்டதாகவெ இருக்கிறது.

பிறமொழிகளைப் படிப்பது. பேசுவது. தெரிந்து கொள்வது விஷேட தகமைகள் தொடர்பாடலுக்கும் மிகவும் தேவையானது. தமிழ் மொழியை தவிர்த்து சிங்களம். ஆங்கிலம் ஆகிய மொழிகளின் தேவை ஏற்படாத போதும் வலிந்து எழுதுவதும், பேசுவதும். அவ்வாறு செய்வதை பெருமையாகக் கொள்வதும் ஒரு தேசிய இனத்தின் வட்சணமாகாது. தம் மொழியை பேசுவதை தரக்குறைவாக எண்ணுவதும் அதற்கு பதிலாக ஏனைய மொழிகளை பேசுவதை பெருமையாக கொள்வதும் பேரினவாத அடக்கு முறையும். ஒடுக்கலும் நிறைந்த சூழலில் அடிமைத்தனமாகும். மொழி உரிமையை மறுக்கும் பேரினவாதத்திற்கு இசைந்து போவதாகவே கொள்ளப்பட முடியும்.

தொழிலாளி வர்க்க உணர்வு இன. மத மொழி வரையறைகளை கடந்துதான் ஆனால் ஏகாதிபத்திய முதலாளித்துவ. பேரினவாத மொழிக்கொள்கைகளுக்கு இசைந்து கொடுப்பது தொழிலாள வர்க்க மொழிக் கொள்கை ஆகாது. தோட்டத் தொழிலாளர்கள் பெரும்பான்மையானோர் தமிழையே மொழியாக கொண்டுள்ளனர். அவர்கள் அவர்களின் வர்க்க அடையாளத்தை, புரட்சிகர தன்மையை அம்மொழியின் மூலம் பதிக்க வேண்டும். இலங்கை பேரினவாத முதலாளித்துவம் சிங்களத்தையும். ஏகாதிபத்திய உலகமயமாதலின் மூலம் ஆங்கிலத்தையும் ஆதிக்க மொழிகளாக்கும் நடவடிக்கைக்கு அதுவே சரியான எதிர் நடவடிக்கை ஆகும்.

மலையகத்தைச் சேர்ந்தவர்களின் இலக்கிய முயற்சிகள் மலையக இலக்கியம் என்ற ஒன்றை அடையாளம் காட்டியுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. அவை மலையகத் தமிழ் மக்களில் ஆகப் பெரும்பான்மையானோரின் அல்லது கல்வி கற்றோரில் பெரும்பான்மையானோரின் மொழிப்பிரயோகம். மொழி வளர்ச்சி என்பவற்றுக்கு எந்தளவுக்கு உதவியுள்ளன.

எனவே மலையகத் தமிழ் மக்களிடையே தமிழ் மொழியின் பன்முகப் பயன்பாடு விருத்தி செய்யப்பட மொழியின் தரம் உயர்த்தப்பட வேண்டும். ஒப்பீட்டு ரீதியில் தமிழ் மொழியின் பிரயோகம் தாழ்ந்த நிலையிலேயே இருக்கிறது. இந் நாட்டுக்கு 200 வருடங்களாக எல்லாம் மறுக்கப்பட்டவர்களாகவும், மறக்கப்பட்டவர்களாகவும் நடத்தப்பட்டதன் விளைவே அது. அதனாலேயே பிரத்தியேகமாக அடையாளப்படுத்தி தம்மை வளர்த்தெடுக்க வேண்டிய நிலையில் மலையகத் தமிழ் மக்கள் இருக்கின்றனர். ஒப்பீட்டு ரீதியிலான பின்தங்கிய நிலையை போக்க தமிழ் மொழியை பேசும் ஏனையோரை பிரதி பண்ணுவது தீர்வாகாது. பிரத்தியேக சூழ்நிலையின் குறிப்பினை வளர்ச்சி, புதிய சூழல். பரிமாற்றல் என்பவற்றில் ஒன்றை ஒன்று தவிர்க்காத அணுகு முறையால் மொழியின் வளர்ச்சியையும். பிரயோகத்தையும் நோக்கல் வேண்டும்.

மலையகத் தமிழ் மக்களின் தேசிய இனத்துவத்தின் ஒரு லட்சனையாக தமிழைக் கொள்வது என்பது ஏனைய மொழிகளுக்கு கதவடைப்பு செய்வதோ, அவற்றை தாழ்த்துவதோ ஆகாது. மாறாக அறிவைப் பெற தமிழ் மொழிப் பிரயோகமும் தமிழ் மொழி வளர்ச்சியும் முக்கியத்துவம் பெற்றதாகும். தேசிய அபிலாஷைகளை நிறைவு செய்து கொள்ள மொழி வலிமையுடையதாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும். அப்போதே பிற தொடர்பாடலினூடான விருத்தியையும் முறைப்படி சேர்த்துக் கொள்ள முடியும்.

# சண்முகதாசனின் பெயராலும் பிழைப்பு

தோழர். என். சண்முகதாசனின் நினைவாக நடாத்தப்பட்ட நினைவு நிகழ்வில் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர்களை பேச அழைப்பதில்லை என்பதில் அந்தனி ஜீவா மிக கறாராக இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

மலையக கலை இலக்கியப் பேரவை என்ற அமைப்பும் புதிய செங்கொடிச் சங்கமும் இணைந்து சில நூல்களுக்கான வெளியீட்டு விழாவையும் சி. வி. வேலுப்பிள்ளை, தோழர். என். சண்முகதாசன் ஆகியோருக்கான நினைவு பேருரைகளையும் ஹட்டன் நகரில் நிகழ்த்தியுள்ளன.

அந்நிகழ்வில் புதிய-ஜனநாயகக் கட்சிக்கு பேசுவதற்கு அழைப்பு விடுக்கலாமா என்று கலந்துரையாடப்பட்ட போது புதிய ஜனநாயகக் கட்சியில் இருக்கும் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்படமாட்டாது என்று அந்தனி ஜீவா ஆணித்தரமாக கூறிவிட்டாராம்.

தோழர். என். சண்முகதாசனும் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பதை அந்தனி ஜீவா அறியாமலில்லை. இருப்பினும் அவர் இலக்கிய வியாபாரம் செல்வது போன்று தொழிற் சங்க வியாபாரத்திலும் இறங்கிவிட்டார். மலையக கலை இலக்கியப் பேரவையை கொண்டு நடத்தும் அந்தனி ஜீவா புதிய செங்கொடிச் சங்கத்தின் தலைவர் என்று கூறிக் கொள்கிறார். அரசாங்கத்தின் பேரிலேயே தமிழர் விடுதலைக் கூட்டணியின் காலஞ் சென்ற தலைவர் மு. சிவசிதம்பரத்தின் இறப்பின்போது அனுதாப அறிக்கையை வெளியிட்டிருந்தார். புதிய செங்கொடிச் சங்கத்தின் ஸ்தாபக தலைவர் என். சண்முக தாசனை நினைவு படுத்திக் கொண்டு, மறுபக்கம் பிரதேசவாதம் பேசிக் கொண்டும்தான் அச்சங்கத்திற்கு அங்கத்தவர்களை சேர்த்துக் கொள்ளலாம் என்று நம்புகிறார் போல் தெரிகிறது.

கம்யூனிஸ்டுகளுக்கு இனம், மதம், மொழி, பிரதேசம். சாதி என்பன வரையறுகளுமல்ல. தடைகளுமல்ல. கம்யூனிஸ்ட் தலைமைத்துவத்தை புதிய செங்கொடிச் சங்கத்திற்கும் வழங்கிய தோழர் சண்முகதாசனை அதன் உறுப்பினர்களாக இருந்த ஒரு லட்சம் தோட்டத் தொழிலாளர்களோ, மலையகத் தமிழ் மக்களோ. சிங்கள மக்களோ, யாழ்ப்பாணத் தமிழர் என்று நோக்கவில்லை. கொள்கை ரீதியான முரண்பாடுகள் என்பது வேறு பிரதேச வாதம், இனவாதம் என்பது வேறு. பிழைப்பிற்காக சண்முகதாசனை நினைவு கூருவது என்பது வேறு. கொள்கைக்காக சண்முகதாசனை நினைவு கூருவது என்பது வேறு.

பொதுவாக யாழ்ப்பாணத்துக்கு எதிரான துவேசம் பேசிக்கொண்டு எவ்வாறு புரட்சிகர கம்யூனிஸ்டான தோழர் சண்முகதாசனை நினைவு கூர முடியும் என்பதை அந்தனி ஜீவாவிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இவர் இலக்கிய வியாபாரம் செய்யும் போது ஈழத்து தமிழ் எழுத்தாளர் என்று கூறிக்கொண்டு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு என்று வேறுபாடின்றி வியாபாரம் செய்வார்.

புரட்சிகர கம்யூனிஸ்ட் ஒருவரினால் ஆரம்பிக்கப்பட்ட புதிய செங்கொடிச் சங்கத்திற்கு பிரதேச வெறி பிடித்த ஜந்துக்களால் எப்படி தலைமை தாங்க முடிகிறதோ தெரியவில்லை. அரச சார்பற்ற நிறுவனங்கள் என்ற பேரில் பணத்தை வாரி வழங்க வெளிநாட்டு ஏஜன்டுகள் இருக்கும்வரையும், தலையாட்ட சிலபேர் இருக்கும் வரை }ஜந்துக்களும் தலைவராகலாம். ஜந்துக்களால் தொழிற்சங்க வியாபாரம், இலக்கிய வியாபாரம் என்பவற்றை ஜோராக செய்யவும் முடியும்.

அதேபோன்று ஹட்டன் நகரில் நடைபெற்ற நிகழ்வில் சண்முகதாசன் நினைவு பேருரை நிகழ்த்திய ஒ. ஏ. இராமையாவும் ஒன்றும் குறைந்தவரல்ல. ஒரு தேர்தலின் போது புதிய-ஜனநாயகக் கட்சி வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டு பிரதேச வாதத்தை கக்கியிருந்தார்.

புதிய-ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பதால் வாக்களிக்கக் கூடாது என்று கேட்டுக் கொண்டாராம்.

அதேவேளை சண்முகதாசன் நிகழ்வுப் பேருரையில் விடுதலைப் புலிகள் இயக்கமே மிகவும் கட்டுக்கோப்பான இயக்கம் என்றும், அதன் தலைமை தகுதியானது என்றும் அவர் குறிப்பிட்டதாக செய்திகள் வெளியாகி இருந்தமை கவனிக்கத்தக்கது.

அந்தனி ஜீவாவிடமும், இராமையாவிடமும் கம்யூனிஸ் இருப்பதாக நம்பிக்கொண்டு இக் கருத்துக்கள் இங்கு எழுதப்படவில்லை. அவர்களின் நடிப்பு மேலும் அம்பலமாகட்டும் என்ற நல்ல நோக்கமே காரணம்.

**என். ராஜன்**
ஹட்டன்

# நன்றி கெட்ட மலையக மக்கள் முன்னணி

மறைந்த வி. டி. தர்மலிங்கத்தின் புதைகுழியில் கல்லறை கட்டப்பட்டுள்ளது. அதனை அவரின் சகோதரர் ஒருவர் அவரின் சொந்த செலவிலேயே கட்டியதாக பரவலாகப் பேசப்படுகிறது. வி. டி. தர்மலிங்கம் மலையகத்தின் முக்கிய கல்விமான்களில் ஒருவராக திகழ்ந்தவர். ம.ம.மு.யின் உப தலைவராகவும், மத்திய மாகாண சபையின் உறுப்பினராகவும் இருந்தவர். பல் வெகுஜன அமைப்புகளில் அங்கம் வகித்ததுடன் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர். சிறையில் கூட சில வருடங்கள் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அவரின் இறுதிக்காலத்தில் அவர் மலையக மக்கள் முன்னணியின் சொத்தாகவே இருந்து அதன் வளர்ச்சிக்காக அர்ப்பணித்து வேலை செய்தவர். அவருக்கு கல்லறையை அவரின் சகோதரன் அவரின் செலவிலேயே கட்டினார் என்று பரவலாகப் பேசப்படுவது உண்மையாக இருந்தால் அவரின் மீது ம. ம. முன்னணி தலைமை கொண்டிருக்கும் மதிப்பையும் நன்றிக் கடனையும் விளங்கிக் கொள்ள முடியும்.

சூடுபட்டு உயிர் நீத்த சிவனுலெட்சுமணனையே தியாகியாக ஏற்றுக் கொள்ளாத ம. ம. மு. தலைமை சந்திரசேகரனுக்காக சந்திரசேகரனுடன் சிறையில் இருந்தவர் என்பதற்காக மட்டும் தர்மலிங்கத்தை மதிப்பதற்கு நியாயம் இருக்க முடியாதுதானே. மலையக மக்கள் முன்னணியிலும் அதன் தலைவர் சந்திரசேகரனாலும் தர்மலிங்கம் போன்றவர்கள் வெறுமனே பயன்படுத்தப்பட்டவர்கள் மட்டுமே.

# தியாகிகளின் விபரங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன

ஒரு சமூகத்தின் இருப்பிற்கும் வளர்ச்சிக்குமான போராட்டங்களில் போராடுகிறவர்களின் பக்கத்தில் உயிர் துறக்கின்ற, கொல்லப்படுகின்றவர்களை நினைவு கூர்வது என்பது அடிப்படையில் புரட்சிகரமானதாகும்.

அந்த வகையில் மறக்கப்பட்டிருந்த மலையக. தோட்டத்தொழிலாளர் வர்க்கத்தின் தியாகிகள் மீண்டும் ஆங்காங்கு பல வழிகளில் நினைவு கூரப்படுகின்றனர்.

அண்மையில் பொகவந்தலாவையில் பிரான்சிஸ் - ஐயாவு நினைவு தின நிகழ்வுகளும் டயகமையில் ஏபிரகாம் சிங்ஹோ நினைவு தின நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன. அவை பொது ஊடகங்களில் இடம்பிடிக்காமல் போனதால் முக்கியத்துவமற்றதாக்கப்பட முடியாது.

முல்லோயா கோவிந்தன் முதல் பிந்துனுவெவை படுகொலைகளுக்கு எதிரான போராட்டத்தில் கொல்லப்பட்டவர்கள் வரை மதிக்கப்பட வேண்டிய தியாகிகள் பலர் நினைவு கூரப்பட வேண்டும். அத் தியாகங்களின் ஊடாகவே தோட்டத் தொழிலாளர்களின் வர்க்க வளர்ச்சியும். மலையகத் தமிழ் தேசிய இனத்தின் வளர்ச்சியும் சமைக்கப்பட்டுள்ளன.

எனவே அத் தியாகிகளின் பெயர்கள். அவர்களின் பங்களிப்பு போன்ற விபரங்களை தொடர்ச்சியாக வெளியிடுவதற்காக வாசகர்களின் பங்களிப்பை புதியபூமி தொடர்ந்து எதிர்பார்க்கிறது. அவ் விபரங்களை எமக்கு எழுதி அனுப்பவும்.

படிப்பகம்

www.padippakam.com



புதிய பூமி
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
PUTHIYA POOMI
சுற்று 09 ஆகஸ்ட் 2002 பக்கம் 12 விலை 10/- சுழற்சி 49

எஸ்.47. 3ம் மாடி. கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி. கொழும்பு 11. இலங்கை. தொ.பே.: 435117. 335844 பாக்ஸ்: 01-473757

## வடக்கு கிழக்கை சூறையாட அந்நிய மூலதனமா?

சமாதானம் என்ற பேரில் பலவிதமான மக்கள் விரோத நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. திருகோணமலையிலுள்ள எண்ணெய்க் குதங்கள் இந்தியாவுக்கு கொடுக்கப்பட்டுவிட்டன. இலங்கையின் வாகன பரப்பில் அமெரிக்க ஏகாதிபத்தியம் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பாவிலிருந்து இலங்கை அகதிகளை திருப்பி அனுப்புவதற்கும் உடன்பாடு காணப்பட்டுள்ளது. இலங்கையின் ஆழ்கடல் மீன்பிடி சீன கம்பெனியொன்றுக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

இதைவிட வடக்கு-கிழக்கில் தனியார் முதலீடுகளையும். வெளிநாட்டு முதலீடுகளையும் குவிப்பதற்கு முன்னேற்பாடுகள் நடைபெறுகின்றன. ஜனாதிபதி பிரேமதாஸவுடன் நெருக்கமாக இருந்த பாஸ்கரலிங்கம் என்ற உயர் நிர்வாக அதிகாரியின் தலைமையில் பல கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளன. அக் கலந்துரையாடல்களின் முடிவில் வடக்கு-கிழக்கில் வெளிநாட்டு முதலீடுகளையும். உள்நாட்டு தனியார் முதலீடுகளையும் மேற்கொள்ள இணக்கம் காணப்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியின் மூலம் சில திட்டங்களும் வடக்கு-கிழக்கில் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

புலம்பெயரந்துள்ள தமிழர்களில் சிலர் முதலீடுகளைச் செய்ய முன்வந்துள்ளதாகவும் வுசுசுழு என்ற அரசசார்பற்ற நிறுவனமும் முதலீடுகளைச் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது. வுசுசுழு என்பது தமிழ்மக்கள் புனர்வாழ்வை நோக்கமாகக் கொண்டு அவுஸ்திரேலியாவில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கி வந்த இலங்கைத் தமிழர்களின் அரசசார்பற்ற நிறுவனமாகும். அவ்வமைப்பு கொழும்பில் காரியாலயம் ஒன்றைத் திறந்து இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அவ்வமைப்பின் பிரதிநிதியொருவர் வடக்கு-கிழக்கு அபிவிருத்தி பற்றிய அரசாங்கத்தின் திட்டங்களுடன் இணைந்து செயற்பட அனுமதிக்கப்பட்டுள்ளார். புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகளும் அவ்வமைப்புக்கூடாகவே அனுமதிக்கப்படவுள்ளதாக தெரிகிறது. அதைவிட அவ்வமைப்பும் பெருமளவில் முதலீடுகளைச் செய்யவிருக்கிறது.

சமாதான பேச்சுவார்த்தைகளினூடாக தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்ற அதேவேளையில் வடக்கு-கிழக்கில் இயல்புவாழ்க்கை ஏற்பட வேண்டும். அந் நோக்கில் புனர்நிர்மாணங்களும் புனரமைப்புகளும் மேற்கெள்ப்பட வேண்டும். இதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை.

பேச்சுவார்த்தையின் மூலம் ஏதோ ஒரு இணக்கப்பாடு காணப்படுகின்ற வேளையில் அதன் மூலம் தமிழ்மக்களின் ஆகக் குறைந்த தேசிய அபிலாசைகளாவது உறுதி செய்யப்படுமாயின் அவற்றை நடைமுறைப்படுத்த முடியாத அளவிற்கு தேசிய அபிலாசைகளுக்கு மாறான ஏகாதிபத்திய உலகமயமாக்கலின் பொருளாதார நிகழ்ச்சி நிரலும். அமெரிக்க ஏகாதிபத்திய அக்கறைகளும். இந்திய மேலாதிக்க நலன்களும் வடக்கு-கிழக்கில் மேலோங்கி விடுமா என்ற அச்சம் ஏற்படுகிறது. அவ்வச்சத்தை நோக்கியே எல்லாம் நிகழ்கின்றன.

வடக்கு-கிழக்கில் தனியார் வெளிநாட்டு முதலீடுகள் பற்றி ஐ.தே.மு.அரசாங்கத்தின் சார்பில் பொறுப்பாக இருந்து செயற்படுபவர் பாஸ்கரலிங்கம். இவர் ஏற்கனவே ஐ.தே.கட்சியில் பல முக்கிய பதவிகளை வகித்தவர். குறிப்பாக தாரளப் பொருளாதாரம். தனியார் மயமாக்கல், வெளிநாட்டு முதலீடுகள் பற்றி அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கியவர். ஜனாதிபதி பிரேமதாசாவின் ஆலோசகராக இருந்தார். ஜனாதிபதி பிரேமதாசாவின் மறைவிற்குப் பிறகு நாட்டை விட்டு வெளியேறியளிருந்தார். பல அரசாங்க கூட்டுத்தாபனங்களும். தொழிற்துறைகளும். வளங்களும் தனியார் மயமாக்கப்பட முக்கிய காரணமாக இருந்தவர். ஏகாதிபத்திய உலகமயமாக்கல் பொருளாதார நிகழ்ச்சி நிரலை ஏற்றுக்கொண்டு பல்தேசியக் கம்பெனிகளுக்கு சார்பாகச் செயறபட்டவர். தற்போதைய ஐ.தே.மு.அரசாங்கம் பதவிக்கு வந்த பிறகு மீண்டும் இலங்கைக்கு வந்து தற்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹவின் பொருளாதார ஆலோசகராக செயறபடுகிறார். இவர்தான் வடக்கு-கிழக்கில் பொருளாதார அபிவிருத்திக்கு பொறுப்பான அதிகாரியாக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒரு தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை என்பது அடிப்படையில் பொருளாதார வளங்களை கட்டுப்படுத்தும் உரிமையாகும். பொருளாதார வளங்கள் தமிழ் தேசிய இனத்திற்கு உரிய முறையில் பங்கிடப்படவில்லை என்பதன் அடிப்டையிலேயே சுயநிர்ணய உரிமை என்ற கோரிக்கை வலுப்பெற்றது.

பொருளாதாரத்தின் மீதான கட்டுப்பாடு வேறு ஏகாதிபத்திய மேலாதிக்க சக்திகளின் கையில் இருக்கும் போது அரசியல் பிரதிநிதித்துவத்தால் மட்டும் சுயநிர்ணய உரிமையை உறுதி செய்ய முடியாது. ஏகாதிபத்திய உலகமயமாக்கல் பொருளாதார நிகழ்ச்சி நிரலுடன் தேசிய இனத்தில் பொருளாதார கோரிக்கை சரசம் செய்து கொள்ள முடியாது.

ஏகாதிபத்திய உலகமயமாக்கலே இன்றைய யதார்த்தம். என்று கூறிக்கொண்டு ஒரு தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை கைவிடப்படலாகாது. இலங்கை முதலாளித்துவ பேரினவாத சக்திகளிடமிருந்து விடுதலை பெறுவதாக நினைத்துக் கொண்டு ஏகாதிபத்திய. பிராந்திய மேலாதிக்க சக்திகளின் அக்கறைகளுக்கு அடிபணிவதும். சமரசம் செய்வதும் சுயநிர்ணயமாகாது.

தமிழ்த் தேசிய இனத்தின் தேசிய அபிலாஷைகள் என்பது அதன் சிறு முதலாளித்துவ. தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களையும் உள்ளடக்கியதுதான். ஆனால் விவசாயிகளும். தொழிலாளர்களும். சுரண்டலில் ஈடுபடாத. அடக்குமுறையில் ஈடுபடாத வர்க்கங்களும் தான் தமிழ்த் தேசிய இனத்தின் பெரும்பான்மையானோர் என்பதை மறந்துவிட்டு பேரினவாதத்துடனும். பெரு முதலாளித்துவத்துடனும். ஏகாதிபத்தியத்துடனும். பிராந்திய மேலாதிக்க சக்திகளுடனும் அனுசரித்துப் போதல் என்ற பெயரிலான சிறு முதலாளித்துவ. தேசிய முதலாளித்துவ அக்கறைகள் மலோங்குவது சுயநிர்ணய உரிமைச் கோரிக்கைக்கு முரணானதாகும். இது புலம்பெயரந்த தமிழர்களும். அவர்களின் அமைப்புகளுக்கும் பொருந்தும்.

வடக்கு-கிழக்கில் இயல்பு வாழ்க்கை என்ற பேரில் மேற்கொள்ளப்படவுள்ள தனியார். வெளிநாட்டு முதலீட்டுத்திட்டங்களால் தமிழ் மக்களால் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை அர்த்தமற்றதாக்கப்படலாம். தமிழர்களும் முதலீடுகளிலும், பொருளாதாரத் திட்டங்களிலும் பங்கெடுக்கிறார்கள் என்ற நியாயப்பாட்டுடன் வடக்கு-கிழக்கில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் ஏகாதிபத்திய உலகமயமாதலை அடிப்படையாகக் கொள்ளும்போது ஆரோக்கியமானதாக இராது. இது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுப்பதுடன் போராட்டத்தை திசை திருப்பும் நிகழ்ச்சி நிரலாகவே அமையும். இது குறித்து தமிழ் மக்களுக்கும் போராடும் சக்திகளும் முன்னெச்சரிக்கையுடன் இருப்பது அவசியம்.

- ஆசிரியர் குழு-

# பொருளாதார வீழ்ச்சி பற்றிய உரையும் நாட்டை முழுமையாக விற்கும் திட்டமும்

கடந்த 04.07.2002 அன்று பிரமதர் ரணில் விக்கிரமசிங்கா நாட்டின் பொருளாதார நிலைமை பற்றி நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அந்த உரையில் இலங்கையின் பொருளாதாரம் மிக மோசமான நிலையில் வீழ்ச்சியடைந்திருப்பதைச் சுட்டிக் காட்டி அதனை மீட்டெடுக்க அடுத்த பத்தாண்டுகள் தேவை எனவும் எதிர்வு கூறி இருந்தார். அண்மையில் வர்த்தக அமைச்சர் ரவி கருணாநாயக்க ஒரு ஆங்கில வார இதழுக்கு வழங்கிய பேட்டியில் 'பொதுசன முன்னணி அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தை அவசரசிகிச்சைப் பிரிவில் விட்டுச் சென்றது. நாமோ கடந்த ஆறு மாதங்களில் அதனை வார்ட்டுக்கு கொண்டு வந்திருக்கின்றோம்' என்று கூறியிருந்தார். இப்போது பிரமதரின் கூற்றுப்படி அடுத்த பத்தாண்டுகளும் நாட்டின் பொருளாதாரம் சிகிச்சைக்காக மருத்துவமனையில் தான் கிடக்கப் போகின்றது. இதன் அர்த்தம் மேன் மேலும் பொருளாதார நிலைமைகள் மோசமடைந்து செல்லப் போகின்றது என்பதேயாகும். பிரதமரின் உரையில் நாடு எதிர்நோக்கி நிற்கும் உள்நாட்டு. வெளிநாட்டுக் கடன்கள் பற்றிய கணக்கு வாசிக்கப்பட்டுள்ளது. இவ் வருடத்தில் செலுத்தப்பட வேண்டிய கடன் தொகை 32.700 கோடி ரூபாய் எனவும் 27.800 கோடி ரூபாவை மட்டுமே வருமானமாக எதிர்பார்ப்பதாகவும் அக்கணக்கில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதில் யுத்தத்தால் பெற்ற கடன் 1360 கோடி ரூபா எனக் குறிப் பிடப்பட்டுள்ளது. கடன்களை அடைக்க மேன்மேலும் கடன்கள் பெற வேண்டிய அவல நிலையையும் அவ் உரையில் பிரதமர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் அவ் உரையில் அரசாங்க வங்கிகளில் இருந்து பெறப்பட்ட கடன் இப்போது 26.000 கோடி ரூபா இருப்பதை எடுத்துக் காட்டிவிட்டு ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி ஆகியவற்றில் 98 வீதத்தை அரசாங்கம் கடனாகப் பெற்றதையும் குறித்துக் காட்டியுள்ளார். இவையெல்லாவற்றையும் பட்டியல் படுத்தி விட்டு இலங்கையர் ஒவ்வொருவரும் வசதி வாய்ப்பு வர்க்க வேறுபாட்டிற்கு 83,000 ரூபாவிற்கு கடனாளியாகி நிற்கின்றனர் என்று எல்லோர் தலையிலும் கடனைச் சுமத்தியிருக்கிறார் பிரதமர். இதில் வேடிக்கையென்னவெனில் இக்கடன்கள் மற்றும் பொருளாதார மோச நிலை யாவும் கடந்த பொதுசன முன்னணி அரசாங்க காலத்தில் மட்டுமே ஏற்பட்டதென்ற தோற்றத்தையே ரணிலின் உரை உரத்துக் கூற முறபட்டுள்ளது. அதேவேளை நாட்டின் பொருளாதாரம் இவ்வாறு நாசமடைந்து குற்றுயிராகவும் குறையுயிராகவும் கிடப்பதற்கு அடிப்படைக் காரணம் எவை என்றோ தாங்களும் அதற்கு பங்குதாரர்கள் என்பதையோ கூறிக் கொள்ளாது கடன் புலம்பல் நடாத்தியுள்ளார் ரணில் விக்கிரமசிங்கா.

இன்றைய பொருளாதார நாசத்தின் தொடக்கம் 1977ல் ரணிலின் மாமனாரும் அமெரிக்க விசுவாசியுமான ஜே. ஆர். ஜெயவர்த்தனாவால் ஆரம்பித்து வைக்கப்பட்டதுதான். அவர் பேரினவாதத்தையும்-யுத்தத்தையும், அதேவேளை தாரளமயம்-தனியார் மயத்தையும் சமாந்தரமாக முன்தள்ளி ஓடவைத்தவர். அதன்மூலம் ஒரு புறத்தில் பௌத்த சிங்கள பேரினவாத யுத்த வெறியர்களை மகிழ்வித்து அதன் மறைவில் பலவித தேட்டங்களுக்கு வழி காட்டப்பட்டது. ஆனால் யுத்தமுனையில் மடிந்து கொண்டவர்களோ சாதாரண சிங்களத் தொழிலாளர்கள். விவசாயிகளின் பிள்ளைகளாகவே காணப் பட்டனர். மறுபுறத்திலே தாரளமயம்-தனியார் மயத்தால் அந்நிய பல்தேசியக் கம்பெனிகளும் உள்நாட்டுப் பெருமுதலாளிய சக்திகளும் தமது தங்கு தடையற்ற சுரண்டல் கொள்கைகளை நடாத்த ஆரம்பித்துக் கொண்டனர்.

யுத்தம் வடக்குக் கிழக்கில் வருடா வருடம் ஆயிரக் கணக்கில் மக்களது



உயிர்களைக் குடித்து சொத்துக்களை அழித்து இடம்பெயரவைத்த அதே வேளை யுத்த வெறியர்களுக்கு சொத்தைச் சேர்ப்பதற்கும் சுக போகத்தை அனுபவிப்பதற்கும் வழி வகுத்துக் கொடுத்தது. அதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் நாசமடைந்து வந்தது.

**வெகுஜனன்**

அவ்வாறே தாரளமயம்-தனியார் மயத்தின் மூலம் நாட்டின் மனிதவளம் உட்பட சகல வளங்களும் நாட்டிலிருந்து உறுஞ்சி எடுக்கப்படும் திட்டங்கள் புகுத்தப்பட்டன. பல்தேசிய முதலாளிகளும் நம் நாட்டுப் பெருமுதலாளிகளும் வர்த்தகப் பெருச்சாளிகளும் கூட்டுச் சேர்ந்து நாட்டின் பொருளாதாரத்தை சூறையாடிக் கொண்டனர்.

இத்தகைய நிலை கடந்த இருபத்தெட்டு ஆண்டுகளாக நீடித்து இடையிறாது முன்னெடுக்கப்பட்டு வந்தமைக்கு யார் காரணம்? யார் பொறுப்புதாரிகள்? இந்நாட்டின் சாதாரண உழைக்கும் மக்களான

**தேர்தல் மேடைகளில் பல வாக்குறுதிகள் வழங்கிய ரணில் பிரதமராக வந்ததும் அற்புதங்கள் பற்றிய வாக்குறுதிகள் எதையும் வழங்க மாட்டேன் எனக் கூறுகிறார்.**

தொழிலாளர்களோ. விவசாயிகளோ, தேசிய இனங்களோ அல்ல. அரசாங்க ஊழியர்களோ. ஆசிரியர். மாணவர்களோ அல்லர். யுத்தத்தை மூட்டியவர்களோ. தாராளமயத்தை தனியார் மயத்தை வரவழைத்தவர்களோ மக்கள் அல்லர். அந்நியரிடம் மண்டியிட்டு ஆலோசனை பெற்றவர்களும் மக்கள் அல்லர். முழுப்பொறுப்புதாரிகளும் காரணகர்த்தாக்களும் சொத்துசுகம் பெற்ற உயர் மேட்டுக்குடி வர்க்கத்தினரும் அவர்களது அரசியல் பிரதிநிதிகளான ஆளும் வர்க்கக் கட்சியினருமேயாகும். இன. மொழி. மத பேதமற்று நாட்டின் பொருளாதாரத்தையும் மக்களின் உழைப்பையும் சூறையாடிக் கொள்ளையிட்டுக் கொண்ட பெருமுதலாளிகளும் வர்த்தக வியாபாரத் திமிங்கலங்களுமேயாகும்.

இத்தகைய முதலாளித்துவ முதலைகளுக்கு ஆலோசனைகளை வழங்கி வழிகாட்டியர்கள் யார்? உலக வங்கி. சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி. உலக வர்த்தக மையம் போன்றனவேயாகும். தமது உலகமயமாக்கல் திட்டத்தை தாராள மயம் - தனியார் மயம் மற்றும் பண்பாட்டு ஊடுருவல்களால் நடைமுறைப்படுத்திய ஏகாதிபத்திய வாதிகளே நமது நாட்டுப் பொருளாதார நாசத்தின் சூத்திரதாரிகள்.

இவற்றை அரசாங்கத்தில் இருந்து கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுசன முன்னணியும் தலைமை தாங்கி வழி நடாத்தி வந்துள்ளனர். இவ் இரு ஆளும் வர்க்க சக்திகளுமே இன்றைய பொருளாதார நாச நிலைமைக்குரிய பொறுப்புதாரிகள். ஒருவரை ஒருவர் சாட்டுதல் செய்து தங்களைத் தாங்களே மறைத்துக் கொள்ளவும் இயலாது.

பிரதமர் ரணிலின் உரையில் நலிந்து குலைந்துள்ள பொருளாதாரத்தை மீட்பதற்கு புதிதாக எதுவும் கூறப்படவில்லை. தொடர்ந்தும் தனியார் மயப் படுத்துவதையும் தாராள மயத்தை ஊக்குவிப்பதையும் தான் சுட்டிக்காட்டி நிற்கிறார். அதற்கான சட்டங்களை கொண்டுவரப் போவதாகவும் அறிவித்துள்ளார். தனியார் மயமாக்கலின் மூலம் 2.100 கோடி ரூபா பெறமுடியும் என்று கனவு காண்கிறார். அதன் அர்த்தம் என்ன. எஞ்சியுள்ள பொதுத் துறைகளை அடிமாட்டு விலைக்கு அந்நியப் பல்தேசியக் கம்பனிகளுக்கு விற்றுப் பிழைப்பு நடாத்தப் போகிறார் என்பதேயாகும். இது பொருளாதார அழிவுப் பாதையே அன்றி வேறெதுவும் இல்லை.

மூன்றாமுலக நாடுகளில் யுத்தம்-தாராள மயம்-தனியார் மயம் ஒன்றுக் கொன்று ஊட்டமளித்து ஏகாதிபத்திய உலகமயமாக்கலை சாத்தியமாக்கி வந்துள்ளன. இதனால் சுயபூர்த்தி தேசிய பொருளாதாரத் திட்டத்தில் வழி நடந்த அந்நாடுகள் யாவும் குப்புற வீழ்த்தப் பட்டன. அந்த நாடுகளின் பொருளாதாரச், சமூக, பண்பாட்டுத் துறைகள் அனைத்துமே ஏகாதிபத்தியத்தினால் முற்றுகையிடப்பட்டு வரும் சூழலையே இன்று காண முடிகின்றது. இதனை நமது நாட்டின் கடந்த கால் நூற்றாண்டு கால அனுபவங்களின் மூலம் காண முடிந்துள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் பிரதமர் ரணில் நாட்டின் பொருளாதாரம் பற்றிய உரையில் தான் அற்புதங்கள் பற்றிய வாக்குறுதியை வழங்க மாட்டேன் என்று கூறி மக்களை முட்டாள்களாக்கியுள்ளார். தேர்தல் காலத்தில் வழங்கிய அற்புத வாக்குறுதிகளை மக்கள் மறந்திருப்பார்கள். ஏனெனில் மாறி மாறிப் புள்ளடி போடப் பழக்கப்பட்டதால் கடந்த காலத்தை இலகுவில் மறப்பது நாட்டு மக்களிடையே வழக்கமாகி விட்டது.

ஆனால் மோசமடைந்துள்ள பொருளாதாரத்தின் பாரிய தாக்கங்கள் மக்களை நாளாந்தம் அமுக்கி திணற வைத்து வருகின்றன. அதன் மூலம் இதற்கான காரணங்களையும் அதற்குரிய ஆளும் வர்க்க சக்திகள் யார் என்பதையும் மக்கள் உணர்ந்து கொள்ளக் கூடிய காலம் வரவே செய்யும். மக்கள் மாற்றத்திற்கான மாற்று வழிகளை அரசியல் ரீதியாகச் சிந்திக்காத வரை ஐயா. அம்மா என்ற இரண்டு ஆளும் வர்க்க ஆண்ட பரம்பரைச் சக்திகள் தமது ஏமாற்றைத் தொடரவே செய்வார்கள். அதன் தற்போதைய காட்சியே பிரதமரின் பொருளாதார நிலைமை பற்றி உரையாகும்.

படிப்பகம்

www.padippakam.com



# ஐரோப்பாவிற்கு புலம்பெயர்ந்த தமிழரின் வாழ்வும் வர்க்க நிலையும்

**ஐரோப்பாவிலிருந்து ஆசியன் எழுதுகிறார்,**

இலங்கையில் இருந்து ஈழப்போர் காலகட்டத்தில் வெளியேறி ஐரோப்பிய. அமெரிக்க நாடுகளில் தஞ்சம் புகுந்த தமிழர்களில் பலர் அவ்வவ் நாடுகளிலேயே நிரந்தரமாக வாழத் தொடங்கி விட்டனர். அவர்கள் தாம் குடியேறிய நாடுகளிலும் சிறுபான்மை இனமாகவே வாழ வேண்டியுள்ளது. இதனால் அவ்வவ் அரசுகள் தமிழரையும் தமது நாட்டில் வாழும் சிறுபான்மை இனங்களில் ஒன்றாகவே கருதும் பட்சத்தில், எல்லா நாடுகளிலும் உள்ளது போல் சிறுபான்மை இனத்தவரின் பிரச்சினைகளுக்கு தமிழரும் முகம் கொடுத்தே ஆக வேண்டும்.

**நம்மவர்களின் கடின உழைப்பை ஐரோப்பிய முதலாளித்துவம் உறிஞ்சுகிறது.**

எல்லோரையும் விட புதிதாக வரும் அகதிகளின் நிலை மிகவும் பரிதாபம். "முகவரியில்லாதவர்கள்" எனக் கூறப்படுவதற்கு ஏற்றவர்களாக வாழும் இவர்களை இந்த நாடுகளின் "சிறுபான்மை இனத்தவர்", "வெளிநாட்டவர்", "குடியேறிகள்" என்ற எந்தப் பிரிவுக்குள்ளும் சேர்க்கப்படுவதில்லை. இவர்களுக்கு அகதி அந்தஸ்து அல்லது நிரந்தர வதிவிட அனுமதி கிடைத்த பின்னர் தான் மேற்குறிப்பிட்ட பிரிவுகளில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். "சட்டத்தின் முன்பு எல்லோரும் சமன்" என்ற அரசியல் நிர்ணயச் சட்டத்தின் முதல் வசனம் இந்தப் புதிய அகதிகள் விஷயத்தில் மீறப்படுகிறது. சட்டச் சலுகைகள் குறைக்கப்பட்டு அல்லது சட்டத்தை அரசுக்கு சாதகமாக மாற்றிக் கொள்வதால் பாதிக்கப்படும் இவர்கள் அதிக பட்சம் நாட்டை விட்டு வெளியேறுவதில் போய் முடிகின்றது. ஐரோப்பிய அரசுகள் தமது அடக்கு முறைக்கு தற்போது அகதிகளில் இருந்து ஆரம்பித்துள்ளதை இது எடுத்துக் காட்டுகிறது. உள்ளூர் மக்கள் ஏன் இதைப்பற்றி வாய்திறப்பதில்லை? அதற்குக் காரணம் ஐரோப்பிய அரசுகள் கையாளும் பிரித்தாளும் சூழ்ச்சி தான்.

உள்ளூர் மக்கள், அதாவது வெள்ளையின ஐரோப்பியர், சுதேசிகளாக ஒரு பிரிவாகவும்; உலகம் முழுவதிலும் இருந்து வந்து இந்த நாடுகளில் குடியேறி வாழும் பல்லின மக்கள் வெளிநாட்டவர் என்ற இன்னொரு பிரிவாகவும் வகுக்கப்பட்டுள்ளனர். புதிதாக வரும் அகதிகள் இதில் எந்தப் பிரிவிலும் சேர்க்கப்படாமல் "தீண்டத்தகாதவர்களாக" உள்ளனர். இவ்வாறாக ஐரோப்பாவில் நவீன "சாதியசமுதாயம்" அமைக்கும் முறை வெளிநாட்டுக் குடியேறிகளை என்றென்றும் கட்டுப்படுத்தி தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்கும் நோக்கிலேயே ஐரோப்பிய மைய அரசுகளால் நடைமுறைப்படுத்தப் படுகின்றது. இதைப்பற்றி அரசிடம் யாராவது கேள்வியெழுப்பினால். எமது சமுதாயம் அப்படியிருக்கிறது என மக்கள் மீது பழியைப் போட்டு தப்பிக் கொள்வார்கள். சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு வெள்ளை நிறத் தோலுடைய யூதர் மற்றைய ஐரோப்பியர் ஆகியோரே வெளிநாட்டுக் குடியேறிகளாகவிருந்தனர். இவர்கள் மிக விரைவிலேயே தாம் குடியேறிய நாடுகளின் மொழி. கலாச்சாரம் என்பனவற்றை உள்வாங்கிக் கொண்டதால் இவர்கள் இன்று சுதேசிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்! இரண்டாம் உலகப்போரின் பின்னர் குடியேறியவர்கள் குறிப்பாக ஆசியர். ஆபிரிக்கர் இலகுவில் வித்தியாசம் காணக்கூடிய தோல் நிறம், மொழி. மதம். கலாச்சாரம் என்பனவற்றை கொண்டிருந்ததால் வெளிநாட்டவர் என்ற பிரிவுக்குள் தள்ளப்பட்டு இன்று வரை அந்நிலை நீடிக்கிறது. மேலும் உள்ளூர் "சுதேசி" மக்கள் தெற்காசிய. ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து வருபவர்களை "கறுப்பர்கள்" என வெகுசன மொழியில் அழைப்பதால் இந்த வகுப்புப் பிரித்தல் இன்னும் இலகுவாகின்றது. ஐரோப்பாவில் நிலவும் இத்தகைய சமூக கட்டமைப்பானது புதிய நாசிகளின் நிறவாத அரசியலுக்கு வழி வகுத்துக் கொடுக்கின்றது. இதையிட்டு இங்கே மேற்கொண்டு அலசப்படவில்லை.

ஐரோப்பிய நாடுகளுக்கு வந்த ஈழத்தமிழர்கள் அகதி அந்தஸ்து. நிரந்த வதிவிட அனுமதி. தொழில் புரிய அனுமதி. போன்ற ஏதாவதொரு அனுமதிப் பத்திரம் பெற்றோ அல்லது குடும்ப இணைப்பு மீள் இணைப்பு என்ற திட்டத்தின் கீழ் வந்து சேர்ந்தவர்களாகவோ உள்ளனர் மற்ற நாடுகளில் இருந்து வரும் வேற்றினத்தவர்களுக்கும் இது பொருந்தும். நான் முன்பு குறிப்பிட்டபடி ஈழத்தமிழரும் வெளிநாட்டுக் குடியேறிகள் என்ற பிரிவுக்குள்ளேயே அடக்கப்படுகின்றனர். ஆகவே மொத்தமாக சிறுபான்மையினர் என அழைக்கப்படும் இம்மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் யாவும் அநேகமாக ஒரேமாதிரியானவை. விளங்கக் கூறின் இவர்கள் தரங்குறைந்த, உள்நாட்டு வெள்ளைக்காரர் செய்ய விரும்பாத, தொழில்களையே செய்கின்றனர். இதனால் முதலாளிகளுக்கும் குறைந்த ஊதியம் கொடுக்க முடிகின்றது. இவர்களின் பிள்ளைகள் யாவும் "கறுப்புப்பாடசாலைகள்" என அழைக்கப்படும் தரங்குறைந்த, குறைந்த வருமானம் பெறுபவர்களின் பிள்ளைகள் படிக்கும். அரசு பாடசாலைகளிலேயே படிக்கின்றனர். மேற்குறிப்பிட்ட உதாரணங்கள் புலம்பெயர்ந்த தமிழரும் ஐரோப்பிய சமூக அமைப்பில் மிகக் குறைந்ததும் இழிவானதாகவும் கருதப்படும் உழைக்கும் வர்க்கத்தில் வந்து சேர்ந்துள்ளதை எடுத்துக் காட்டுகின்றது. இவர்கள் இவ்வாறு ஐரோப்பிய வர்க்க அமைப்புக்குள் வந்து சேர்ந்ததற்கு உலகமயமாதலும் (Globalisation) ஒரு காரணம். இதையிட்டு பின்னர் வருவோம். அதற்கு முன்பு நவீன வர்க்க அமைப்புமுறை எப்போது உருவானது எனப்பார்ப்போம். அது தமிழ் அகதிகள் தற்போது ஏன் திருப்பி அனுப்பப்படுகிறார்கள் என்பதற்கும் விளக்கம் தரும்.

**தொலைக்காட்சி, குளிர்சாதனம், மோட்டார் கார் என்பன பணக்கார அந்தஸ்தின் அடையாளம் அல்ல.**

1945ம் ஆண்டு இரண்டாம் உலக யுத்தம் முடிவுக்கு வந்த போது, அது ஐரோப்பாவில் பேரழிவுகளை விட்டுச் சென்றது. ஐரோப்பிய அரசுகளின் முதல் பிரச்சினையாக அழிவிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டியிருந்தது. போர் பலகோடி மக்களை பலி கொண்டதால் மனிதவளப் பற்றாக்குறை ஏற்பட்டது. மறுபக்கத்தில் நிதியுதவியைப் பற்றிக் கவலைப்பட வேண்டியிருக்கவில்லை. ஏனெனில் 'மார்ஷல் உதவி' என்ற திட்டத்தின் கீழ் அமெரிக்கா ஐரோப்பிய நாடுகளுக்கு பல கோடி டொலர்களை நிதியுதவியாக வழங்கியது. இந்த மார்ஷல் உதவித்திட்டமே பின்னர் ஐ.எம்.எஃப் (IMF) தோன்றக் காரணமாகவிருந்தது.

இவ்வாறு நிதியுதவியை பெற்றுக் கொண்ட ஐரோப்பிய நாடுகளுக்கு இருந்த அடுத்த பிரச்சினை. தமது பொருளாதார கட்டுமாணப்பணிகளுக்கு தேவையான வேலையாட்களை எங்கேயிருந்து பெறுவது என்பதே. குறைந்த கூலிகளில் வேலையாட்களைப் பெறுவதற்காக குறிப்பாக துருக்கியுடனும். மொரோக்கோவுடனும் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. இவ்வாறாக பல்லாயிரக்கணக்கான துருக்கி, மொரோக்கோ ஒப்பந்தக் கூலியாட்கள் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு வந்தனர். இவர்கள் மிகக் கடினமான வேலைகளான கட்டிடங்கள் எழுப்புதல். சாலைகள் அமைத்தல். துப்புரவாக்கும் தொழில் போன்ற பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். இத்தகைய வேலைகளை கடினமானதாகவோ அல்லது இழிந்ததாகவோ கருதியதால் உள்ளூர் மக்கள் இந்தத் தொழில்களை செய்ய விரும்பவில்லை. இந்த நிலை இன்று வரை நீடிக்கிறது.

**உழைக்கும் வர்க்கமாக வாழ்ந்தும் வர்க்க சிந்தனைக்குள் நம்மவர் இல்லை.**

ஒப்பந்தக்கூலிகளின் உதவியினால் ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரம் வளர்ந்தது. இவை விரைவிலேயே பணக்கார நாடுகள் என்ற ஸ்தானத்தை அடைந்தன. அடுத்து வந்த தசாப்தங்களில் பொருளாதார வளர்ச்சிக்கு ஈடுகட்ட இன்னுமின்னும் மனிதவளம் தேவைப்பட்டது. இந்த மனித வளத்தை பெற்றுக்கொள்வது எப்படி? என்று யோசித்தவர்களுக்கு மூன்றாம் உலகநாடுகளில் இருந்து புதிதாக வரத்தொடங்கிய "அகதிகள்" கண்ணில் பட்டனர்.

முதலில் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் அகதிகளை வரவேற்று அங்கீகரிக்கும் திட்டம் ஏன்? எப்போது? உருவானது என்பதைப்பற்றி சிறிது மேலோட்டமாக பார்த்துவிட்டு வருவோம். இரண்டாம் உலக யுத்தம் முடிந்த பின்பு ஐரோப்பா கண்டம் இரு துருவங்களாக பிரிந்தது. மேற்கில் முதலாளித்துவ நாடுகள், கிழக்கில் சோஷலிச நாடுகள். இதில் மேற்கைரோப்பிய முதலாளித்துவ நாடுகள் தம்மை "சுதந்திரமான ஜனநாயக" நாடுகள் என அழைத்துக் கொண்டன. அவை கிழக்கைரோப்பிய நாடுகளை "சுதந்திரமற்ற சர்வாதிகார" நாடுகள் என அழைத்தன. இதனடிப்படையில் "சோஷலிச சர்வாதிகார" நாடுகளில் அடக்கப்பட்டு சுதந்திரம் மறுக்கப்பட்ட மக்கள்: அங்கிருந்து தப்பி வந்து மேற்கைரோப்பாவில் தஞ்சம் புகுந்து சுதந்திரக்காற்றை சுவாசிக்க வேண்டும் எனக் கூறியே அகதிகளை வரவேற்கும் முறை ஆரம்பமாகியது. அவர்கள் எதிர்பார்த்தபடியே பல்லாயிரக் கணக்கில் கிழக்கைரோப்பாவில் இருந்து வெளியேறி தஞ்சம் புகுந்த அகதிகளுக்கு சகல வசதிகளும் அளிக்கப்பட்டன. இவ்வாறு அகதிகளுக்கு தஞ்சம் அளிக்கும் முறையை தமது அரசியல் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாகவே கையாண்டனர்.

இருப்பினும் சோஷலிச நாடுகளின் அகதிகளுக்கு மட்டுமே தஞ்சமளிப்பது என்ற நடைமுறை எழுதப்படாத சட்டமாகவே இருந்து வந்தது. இந்நாடுகள் இதை பகிரங்கமாகச் சொன்னால் பாரபட்சம் காட்டுவதாக தம்மீது குற்றச்சாட்டு எழும் என்ற அச்சமும் இருந்தது. இந்நிலையில் எதிர்பாரா விதமாக மூன்றாம் உலக நாடுகளில் இருந்தும் அகதிகள் வரத் தொடங்கினர். இவர்களில் பலர் முன்னாள் ஐரோப்பிய கொலனிகளில் இருந்து தமது கொலனித்துவ எசமானர்களின் நாடுகளுக்கே வந்தனர். உலகில் கொலனித்துவம் முடிவுக்கு வந்த பின்னர் அந்த நாடுகளில் எழுந்த அரசியல், பொருளாதார பிரச்சினைகள் உள்நாட்டுப் போர்களை தோற்றுவித்தன. இதனால் தமது முன்னாள் கொலனிகளில் இருந்து வரும் மக்கள் தமது நாடுகளில் தஞ்சம் கோர உரிமை உண்டு என முன்னாள் ஏகாதிபத்திய அரசுகள் நன்றாகவே புரிந்து வைத்திருந்தாலும். அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல். புதிதாக "அகதிகள் பிரச்சினை"யை ஊருவாக்கி விட்டனர். இந்த அரசியல் இன்று வரை நீடிக்கிறது.

ஏதோ வேண்டா விருந்தாளிகளாக தமது நாடுகளுக்குள் நுழைந்து விட்டாலும், இந்தப் "பல்லின அகதிகளையும்" தமது பொருளாதார தேவைகளுக்கு பயன்படுத்தலாம் என மேற்கு ஐரோப்பிய அரசுகள் கண்டு கொண்டன. மேலும் மேலும் தொழிலாளர்கள் தேவைப்பட, இன்றுவரை கீழ்த்தர வேலைகள் என கருதப்படும் துப்புரவாக்கல் பணி. தோட்ட வேலை என்பனவற்றில் அகதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதன் மூலம் தொழிலாளர் பற்றாக்குறையை தீர்த்துக் கொண்டன. இதில் ஒரு வித்தியாசம் என்னவெனில் முன்பு ஒப்பந்தக் கூலிகளை அழைத்து வந்தபோது அவர்களின் பயணச் செலவுகளையும் பொறுக்க வேண்டியிருந்தது. ஆனால் இந்தப் "புதிய கூலிகள்" தாமாகவே வருகின்றனர். அகதிகளை வேலை செய்ய அனுமதிப்பது தமது பொருளாதார நன்மை கருதியே என்பதைப் புரிந்து கொள்ள கீழ்வரும் உதாரணம் போதும் என நினைக்கிறேன். நெதர்லாந்தில் அண்மைக்காலம் வரை தஞ்சம் கோரி விட்டு அங்கீகாரத்துக்காக காத்திருக்கும் அகதிகள் வேலை செய்ய முடியாது என்ற தடை அமுலில் இருந்தது. இரு வருடங்களுக்கு முன்பு பூந்தோட்டங்களிலும், பழத்தோட்டங்களிலும் வேலைக்கு அபரிதமாக தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்டது. இதனை ஈடுகட்ட அகதிகளை வேலை செய்ய அனுமதி வழங்குமாறு தோட்ட முதலாளிகள் அரசிடம் கோரினர். அவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அரசாங்கம், 3 மாதம் (இது அநேகமாக பழம் பிடுங்கும் காலம்) அகதிகள் வேலை செய்யலாம் என அனுமதி வழங்கியது.

**புலம்பெயர்ந்த தமிழர்கள் காலகதியில் உழைக்கும் வர்க்க அரசியலுக்குள் வந்தே கொள்வர்.**

இந்த ஐரோப்பிய நாடுகளில் இருக்கும் வசதி மற்றும் வேலை வாய்ப்புக்களை கேள்விப்பட்டு மேலும் மேலும் புதிய அகதிகள் படையெடுக்கலாம். இவர்கள் அநேகமாக வறிய நாடுகளிலிருந்தே வருவதால் இது இன்னும் சாத்தியம். இந்நிலையில் இந்த "அகதிகள் படையெடுப்பை" கட்டுப்படுத்த முடியாமல் போகலாம். அதற்கு என்ன செய்வது? என்ற கேள்விக்கும் ஐரோப்பிய அரசுகள் தயாராகவிருக் கின்றன. இதற்கும் ஒரு உதாரணம் காட்டலாம். சுவிற்சலாந்தில் 1990 ஆண்டுவரையில் வந்த அகதிகளில் எவரையும் திருப்பியனுப்பாமல். அதே நேரம் தகுந்த விசாரணையோ. முடிவோ எதுவுமில்லாமல் வைத்திருந்தனர். சுவிஸ் அரசின் இந்த "தாராள மனப்பான்மையை" எண்ணி வியந்து கொண்டிருந்தவர்களுக்கு வந்தது அதிர்ச்சி. 1990ற்கு பின்பு வந்த அகதிகள் உடனுக்குடன் விசாரிக்கப்பட்டு திருப்பியனுப்பப்பட்டனர். இந்த அதிர்ச்சி வைத்தியம் பலன் தரவே, அந்த நாட்டிற்கு செல்லும் அகதிகளி தொகை குறைந்தது. ஏன் இந் மாற்றம்? சுவிற்சர்லாந்து முழுவது பரவலாகக் காணப்படும் உணவக களில் அகதி உழைப்பாளர்கள் குறைந் ஊதியம் வழங்கப்பட்டு (சட்டபூர்வமாக சுரண்டலுக்குள்ளாகின்றனர் இருப்பினும் எண்பதுகளின் இறுதியி உருவான பொருளாதாரத் தேக்க வேலையற்றோர் விகிதத்தை அதிகரித் துடன், தொழிலாளர் குறைப்பு செய் வேண்டிய தேவையேற்பட்டது. தன நாடு பொருளாதாரச் சிக்கலில் சிக்கி தவிக்கையில் புதிதாக அக உழைப்பாளிகளை இறக்குமதி செய் சுவிஸ் அரசு தயாரில்லை. இதற் விஷயம் தெரியாது நாட்டுக்குள் புகுந் புதிய அப்பாவி அகதிகள் பலிய கின்றனர்.

**நிச்சயமற்ற எதிர்காலத்தில் புலம்பெயர்ந்த தமிழர்கள் அடுத்தடுத்த தலைமுறையினர் எப்படி வாழ்வார்கள்?**

இவையெல்லாவற்றையும் விட இன்னொரு பிரச்சினையும் மேற்கை ரோப்பிய நாடுகளுக்கு உண்டு அங்கீகரிக்கப்பட்ட அகதிகள் நிரந்த மாக இங்கேயே தங்கி விடுவார்கள் இவர்களின் இனமும் வருங்காலத்தி பல்கிப் பெருகி விடும். இப்படியே போனால் ஐரோப்பிய நாடுகள் பல்லின கலாச்சாரம் கொண்ட நாடுகளாக மாறிவிடும். இந்தப் பிரச்சினையை தீர்க்க இவர்கள் கையாளும் அரசியல் பயங்கர மானது. புதிய நாஸிகளை கொம்பு சீவ் விடுவதே அது. ஜெர்மனியில் வளர்ந்து வரும் நாஸிஸ பயங்கரவாதத்தை ஜெர்மன் அரசு கண்டும் காணாதது போல் இருக்கின்றது. இப்போதைக்கு இந்தப் பிரச்சினை அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்தாலும் எதிர்காலத்தில் பொருளாதாரப் பிரச்சினை மோசமடையும் காலத்தில் வெளிநாட்டவர் மீது நாஸிஸ பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்படும். அப்போது தான் புலம் பெயர்ந்த தமிழர்களும் தாங்கள் எந்த வர்க்கத்தில் உள்ளோம் என்ற உணர்வைப் பெறுவார்கள்.

புலம்பெயர்ந்த தமிழரிடம் வர்க்க உணர்வு இன்றுவரை எழாததற்கு காரணம் என்ன? உலகில் பொதுவாக தற்போது மொழி. இன உணர்வுகள் மேலோங்கியிருப்பதைக் காணலாம். இயல்பாகவே ஒரே மொழி பேசுவோர். ஒரே கலாசாரத்தை கொண்டோர். ஒரே தேசியத்தையுடையோர் ஒத்துப் போவது வழக்கம். இதில் தமிழரும் விதிவிலக்கல்ல. இந்த மொழி. தேசிய உணர்வுகள் கடந்த 200 வருடங்களுக்குள் உருவானவை என்பது பலருக்குத் தெரியாத விடயம். அதற்கு முன்பு மத உணர்வுகளே மேலோங்கியிருந்தன. அநேகமாக தேசியங்கள் மொழியடிப் படையில் ஒன்றுபடுகின்றன. இந்த தேசியத்தையும், மொழியையும் வளர்ப்பதில் கலாச்சார நிறுவனங்கள். மற்றும் தொடர்பூடகங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. ஆனால் இந்த ஊடகங்கள் இதற்கு மேலே போவதில்லை. இந்த ஊடகங்கள், கலாசார நிறுவனங்கள் என்பனவற்றின் முக்கிய நோக்கம் பணம் சம்பாதிப்பதாகும். சமூக அக்கறையல்ல. இதனால் தான் சினிமாவைப் பற்றி அலசும் நேரத்தில் நூற்றில் ஒரு பங்கைத்தானும் அகதிகள் பிரச்சினையைப் பற்றி அலச ஒதுக்குவதில்லை. இவை ஊட்டும் போதையில் மயங்கிக் கிடக்கும் மக்கள் தமக்கு வரும் வரப்போகும் பாதிப்புக்களைப் பற்றி கவலைப்படுவதில்லை. ஐரோப்பிய மொழியறிவு அதிகமில்லாத தமிழ் மட்டுமே தெரிந்த மக்கள் தகவல்களைப் பெறுவதற்கு இந்த தொடர்பு ஊடகங்களிலேயே தங்கியிருக்க வேண்டிய பரிதாபம், ஐரோப்பிய அரசியலைப் பற்றிய அறியாமையை ஏற்படுத்தி விடுகின்றது. கடலின் நடுவே உள்ள தனித் தீவுகள் போல வாழும் இவர்கள் தங்களைச் சுற்றி என்ன நடக்கின்றது.

(தொடர்ச்சு 7ம் பக்கம்)

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் ஊடகங்கள் பற்றி (4)

## லேக்ஹவுஸ் நிறுவனமும் தினகரனும்

ரரிக்கரைப் பத்திரிகை என்று நாற்பது ஆண்டுகட்கு முன் சுதந்திரனில் கேலியாகக் குறிப்பிடப்பட்டு வந்த தினகரன் ஒரு பலமான பத்திரிகை நிறுவனத்தின் மிகவும் பலவீனமான ஏடாகவே தன் இளமைக்காலத்தில் இருந்தது. ஆங்கிலத்தில் டெய்லி நியூஸ், மாலைச் செய்தி ஏடான ஒப்சேவர், தினமின ஆகியனவும் ஞாயிறு ஒப்சேவர், சிலுமின ஆகிய வார ஏடுகளை வெளியிட்டு வந்த டி.ஆர்.விஜேவர்த்தன குடும்பத்தின் சொத்தான லேக் ஹவுஸ் தமிழ்ப் பத்திரிகை ஒன்றை அறிமுகப்படுத்தினாலும் அதன் தரமும் விற்பனையும் மிகத் தாழ்வாகவே இருந்தன. லேக் ஹவுஸ் நிறுவனமும் அதற்குப் போட்டியாக இயங்கிய டைம்ஸ் நிறுவனமும் யூஎன்.பி. சார்பானவையும் தமிழ் வாசகர்களை ஆங்கில வாயிலாகவே பெரிதும் குறி வைத்தவையும் என்பதற்குத் தமிழ் மக்களிடையே செல்வாக்குள்ளவர்கள் அதிகளவில் செய்தி ஏடுகளை வாசிப்போராக இருந்த ஒரு சூழலும் ஒரு காரணமெனலாம்.

தமிழில் வந்த செய்தித் தாள்களில் வீரகேசரி இந்திய நலன் சார்ந்த இந்திய வம்சாவளி முதலாளிமாரின் ஆதிக்கத்திற்குக் கீழாக இருந்த ஒரு ஏடு. அதன் தரம் வெகு சராசரியாக இருந்த போதும் மலையகத்தில் அதற்கு ஒரு நல்ல விற்பனைத்தளம் இருந்தது. வடக்கு-கிழக்கில் தமிழில் பத்திரிகை வாசிப்போரிடையே அதற்கு அதிக செல்வாக்கு இருந்ததற்கு ஒரு வலிய மாற்றுப் பத்திரிகை இல்லாததே காரணம். தமிழ்க் காங்கிரஸ் தலைவர்களாக இருந்த ஜி.ஜி.பொன்னம்பலமும் எஸ்.ஜே.வி.செல்வநாயகமும் முதலிட்டு நடத்த முற்பட்ட சுதந்திரன் ஒரு சில ஆண்டுகளிலேயே வார ஏடாகிவிட்டது. ஏனெனில் அது அரசியற் பத்திரிகை என்பதை விட, ஒரு செய்தி ஏட்டை நிருவகிக்குமளவுக்கு வலிய பத்திரிகை நிறுவனம் சுதந்திரனுக்குப் பின்னால் இருக்கவில்லை.

லேக் ஹவுஸினைப் பொறுத்தவரை பொது வேலை நிறுத்தம், ஹர்த்தால், தேர்தல் போன்ற தருணங்களில் யூஎன்.பிக்குச் சாதகமான முறையில் செய்திகளை வழங்குவதும் பொது மக்களிடையே தொழிலாளர் போராட்டங்களை சமூகத்தின் அமைதியைக் குலைக்கும் விடயங்களாகக் காட்டுவதும் போதுமானதாயிருந்தது. அப்பட்டமான பிரசாரம் தேவையில்லாதளவுக்கு அன்றைய நிலவரங்கள் இருக்கவில்லை என்று கூற முடியாவிட்டாலும் ஒரு நடுநிலையான தோற்றப்பாட்டைச் செய்யக் கூடிய பண்பும் பயிற்சியும் பெற்ற பத்திரிகையாளர்களும் நிர்வாகிகளும் இருந்தனர்.

தினகரனைப் பொறுத்தளவில் அதை நல்ல விற்பனை உள்ள ஏடாக்குவதில் அரசியல் நோக்கை விட முக்கியமாக லாப நோக்கும் இருந்தது. இதன் காரணமாகவே தமிழில் எழுத்துத் திறமையும் சமூக-அரசியல் விடயங்களில் ஈடுபாடும் ஆளுமையும் உள்ள ஆசிரியர்களை லேக் ஹவுஸ் நாடியது. கைலாசபதி லேக் ஹவுஸின் தினகரனில் ஆசிரியப் பொறுப்பை ஏற்ற பின்பு தினகரனின் விற்பனை மிக உயர்ந்தது என்பதற்கு எத்தனை மாற்று விளக்கங்கள் தரப்பட்டாலும் கைலாசபதி தமிழ்ப் பத்திரிகைத் துறையின் எழுச்சிக்கு ஆற்றிய பங்கை யாரும் மறுக்க இயலாது.

தினகரனின் விற்பனையைக் கூட்ட அவர் கிளுகிளுப்பான செய்திகளையோ பரபரப்புத் தலையங்கங்களையோ நாடவில்லை. மாறாக நமது படைப்பாளிகளின் பல்வேறு ஆற்றல்களை ஊக்குவித்துச் சுவைபடவும் தரமாகவும் பொறுப்புடனும் செய்திகளை வழங்கும் ஒரு மரபை வளர்க்க முற்பட்டார். தினகரன் ஈழத்தின் தரமான பல எழுத்தாளர்களை ஊக்குவித்து ஈழத் தமிழ் ஆக்க இலக்கியத்துக்கு ஒரு அடையாளத்தைப் பெறுவதில் தினகரன் அன்று தொடக்கி வைத்த பணி, கைலாசபதிக்குப் பின் வந்த ஆசிரியர்கள் மூலமும் தொடர்ந்தது. இன்றும் தினகரனின் அரசியல் நிலைப்பாடு தலையங்கம் பக்கச் சார்பான தகவல்கள் என்பவற்றின் நடுவிலும் தினகரனில் நாம் காணும் எழுத்து நடையில் தரம் இருக்கிறது என்றால் அது என்றோ தொடங்கி வைக்கப்பட்ட ஒரு மரபின் தொடர்ச்சி என்றே கூற வேண்டும். தினகரனின் விற்பனையை எழுப்புவதில் கவனமாக இருந்த டி.ஆர்.விஜயவர்த்தன தினகரன் ஆசிரிய பீடத்திற்குக் கணிசமான அளவு சுதந்திரத்தை வழங்கினார். இந்தச் சுதந்திரம் தினகரனைத் தமது சொந்தப் பத்திரிகை போல தமது கருத்துக்களை வலியுறுத்தப் பாவிக்கும் சுதந்திரம் அல்ல. ஏனெனில் உலகில் எங்குமே பத்திரிகை முதலாளிகள் தமது இருப்பை மிரட்டுகிற கொள்கையைக் கடைப்பிடிப்பது இல்லை.

### யூ.என்.பியை வளர்த்த ஏரிக்கரை

அதேவேளை, யூ.என்.பி. அல்லது வலதுசாரி அரசியற் கட்சிகளும், தமிழ்க் காங்கிரஸ் மட்டுமன்றித் தமிழரசுக் கட்சியுங் கூடத் தங்களுக்கு இருந்த பெரிய இடத்து உறவுகளைப் பாவித்து அழுத்தங்களைக் கொடுத்து வந்துள்ளனர். 1956ம் ஆண்டுக்குப் பின் லேக் ஹவுஸ் அன்றைய ஆளுங்கட்சி நிறுவனமாக இல்லாத போதும், தமிழ்த் தேசியவாதத்தின் நலன்கட்கு விரோதமாக நின்றதில் வியப்பில்லை. ஆயினும் லேக் ஹவுஸ் ஏடுகளை ஏரிக்கரை ஏடுகள் என்று நக்கலாகச் சுதந்திரன் குறிப்பிட்ட அதேவேளை தமிழரசுக் கட்சி லேக் ஹவுஸின் தமிழ் ஏடான தினகரனில் இடதுசாரிகட்குச் சிறிதும் சார்பான முறையில் விடயங்கள் வராமற் தடுப்பதற்குத் தம்மாலான முயற்சிகளைச் செய்யத் தவறவில்லை.

1960ம் ஆண்டு நடந்த இரண்டு பொதுத்தேர்தல்களிலும் யூஎன்.பி.க்குச் சார்பாக லேக் ஹவுஸ் நிறுவனம் செயற்பட்டதுடன் 1960 ஜூனில் ஆட்சிக்கு வந்த ஸ்ரீல.சு.கட்சி ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான பிரசார முயற்சியில் மும்முரமாக இறங்கியது. தோல்வி கண்ட 1962 ராணுவச்சதி முயற்சிக்குப் பின் லேக் ஹவுஸ் போல ஒரு வலிய பத்திரிகை நிறுவனம் பிற்போக்குச் சக்திகளின் கையில் இருப்பதன் ஆபத்தை உணர்ந்த ஸ்ரீல.சு.கட்சி 1964ல் லேக் ஹவுஸ் நிறுவனத்தை அரச உடமையாக்கச் சட்டமியற்ற முயன்றது. லங்கா சமசமாஜக் கட்சியில் ஏற்பட்ட பிளவின் பின் பிரிந்த எட்மண்ட் சமரக்கொடி, மெரில் பெர்ணான்டோ ஸ்ரீல.சு.கட்சியினின்று யூஎன்.பி.யால் வாங்கப்பட்ட சி.பி.டி.சில்வா போன்றோர் தமிழரசுக் கட்சியினர் ஆகியோரது ஒத்துழைப்பால் லேக் ஹவுஸ் தேசிய மயம் தடுக்கப்பட்டதோடு ஸ்ரீல.சு.கட்சி ஆட்சி கவிழவும் நேர்ந்தது.

லேக் ஹவுஸ் மிகவும் விஷமமான முறையிலும் பழிவாங்கும் உணர்வுடனும் ஸ்ரீல.சு.கட்சிக்கு எதிராகப் பிரசாரம் செய்தது. அத்தோடு என்றாவது ஸ்ரீல.சு.கட்சி அதிகாரத்துக்கு மீண்டால் லேக் ஹவுஸ் அரசுடமையாகும் என்று எதிர்பார்த்து, லேக் ஹவுஸ் நிறுவனத்தின் பத்திரிகை வெளியீட்டுப் பகுதியை லாபமீட்டும் புத்தக வெளியீட்டு, விற்பனை நிறுவனங்களினின்று பிரித்து வெவ்வேறு கம்பனிகளாக்கியது.

படிப்படியாக லேக் ஹவுஸ் ஏடுகள் இன்னும் வெளிவெளியாகவே அரசியல் நோக்குடையவையாகத் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டன. 1974ல் லேக் ஹவுஸ் தேசியமயமாக்கலின் பின்பு ஒவ்வொரு ஆட்சி மாற்றத்துடனும் தனது நிலைப்பாட்டை மாற்றும் தன்மையை லேக் ஹவுஸ் ஏடுகள் பெற்றன. அது மட்டுமன்றி தினகரனில் முன்னர் இருந்த சுயாதீனமான ஆசிரிய பீடத்தின் இடத்தில் எசமானர்களின் மனமறிந்தும் காற்றின் திசையறிந்தும் தம்மை மாற்றிக் கொள்ளக் கூடியவர்களை உச்சத்திற் கொண்ட ஒரு ஆசிரிய பீடம் லேக் ஹவுஸின் மற்ற ஏடுகளை விடச் சிறப்பாகத் தினகரனுக்கு வாய்த்தது.

ஒரு வகையான அரசாங்க உத்தியோகத்தர் மனோபாவமும் அதிகாரத்தில் இருப்பவர்களின் மனக்கசப்புக்குத் தம்மை எந்த வகையிலும் ஆளாக்கிக் கொள்ளக் கூடாதென்ற கவனமும் பத்திரிகை ஆசிரியர்களிடம் ஏற்பட்டது. எனவே 'சீசரின் மனைவி சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவராக இருக்க வேண்டும்' என்ற நோக்கில் தம்மைப் பற்றி யாரும் வீண் சந்தேகத்தைக் கிளப்ப அற்ப வாய்ப்பு இருந்தாலும் அதைத் தவிர்க்கிற மனோ நிலை கடந்த தசாப்தங்கள் இரண்டிலும் காணப்படுகிறது.

இதன் விளைவாகத் தினகரன் ஆளுங் கட்சியின் எடுபிடிகளது நேரடியான அல்லது மறைமுகமான ஆதிக்கத்துக்குட்பட்டது. தினகரன் விற்பனையின் சரிவுக்கு இதுவே முக்கிய காரணம் அரசாங்க விளம்பரங்களும் லேக் ஹவுஸ் நிறுவனத்தின் விநியோக வசதிகளும் தினகரன் முழுகாமல் காப்பாற்றுகின்றன. தினகரனால் தனித்து நின்று மற்ற நாளேடுகளுடன் போட்டியிட முடியாது என்கிற அளவுக்கு அது நம்பகமற்ற ஒரு ஏடாகிவிட்டது.

இடையிடை வரும் கட்டுரைகளும் பிற ஆக்கங்களும் ஒப்பிடுகையில் தரமான இலக்கியப் பக்கங்களுமே இன்று தினகரனில் மக்களுக்குப் பயனுள்ள தாக்குகிறது. மற்றப்படி, தினகரன் இன்று ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் மாற்றுச் சிந்தனைக்காகவும் குரல் எழுப்புவதற்குத் தினகரனில் இடமே இல்லை. தினகரனின் சரிவுக்கு லேக் ஹவுஸ் நிர்வாகத்தை மட்டும் பழி சொல்ல முடியாது. தமக்குள்ள சிறிதளவு சுதந்திரத்தைக் கூடப் பயன்படுத்தி மக்கள் மத்தியில் தமது சமுதாயம் பற்றிய விழிப்புணர்வை வளர்க்கத் தயங்குகிற மனோபாவம் தினகரன் பத்திரிகையாளர்களிடையே அதிகளவில் உள்ளது. இவ்விடயத்தில் ஆங்கில, சிங்கள ஏடுகளின் பத்திரிகையாளர்கள் தமது சுதந்திரத்தைப் பயன்படுத்தும் அளவுக்குக் கூட ஏன் தமிழ்ப் பத்திரிகையாளர்களால் செய்ய முடியவில்லை என்பதையிட்டு நாம் கவனமாகச் சிந்திக்கும் போதுதான் பணிந்து குனிந்து சேவகம் செய்து தங்களைத் தக்க வைத்து வரும் போக்கினைக் கண்டு கொள்ள முடிகிறது.

---

## ஐரோப்பா..

*6ம் பக்க தொடர்ச்சி....*

### புலம் பெயர்ந்த நாடுகளில் நம்மவர்கள் தீண்டத்தகாதோரே!

என்பதை அதிகம் அறியாதவராகவே உள்ளனர். இதுவே புலம்பெயர்ந்த தமிழர்கள் தமது வர்க்கம் என்ன என்பதை அறியாதிருப்பதற்கும் காரணம்.

ஆனால் இந்த நாடுகளில் பிறந்து வளரும் பிள்ளைகள் தமது வர்க்கம் என்னவென்பதை ஓரளவேனும் அறிந்துள்ளனர். புலம்பெயர்ந்த நாட்டிலும் சாதி அமைப்பை பாதுகாக்க விரும்பும் சில பெற்றோர் தமது சொந்தப் பிள்ளைகளினாலேயே பரிகசிப்புக்கு ஆளாகின்றனர். இதே பிள்ளைகள் நாளை வர்க்கநிலை பற்றியும் இடித்துரைப்பார்கள். இது ஒருபுறமிருக்க, மறுபுறம் நிறவெறியால் பாதிக்கப்படும் தமிழர்கள் வேறுவழியின்றி ஐரோப்பாவின் முற்போக்குச் சக்திகளின் ஆதரவைத் தேடவேண்டி நேரிடும். இப்போது மெல்ல மெல்ல உருவாகி வரும் இந்தநிலை, இனிவருங் காலத்தில் பெரிதாக வளரும் சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன. இதையே ஒரு சிலர், புலம்பெயர்ந்த மக்களை 'நாளை வரவிருக்கும் புரட்சியின் சேமிப்புச் சக்திகள்' எனக் குறிப்பிடுகின்றனர். மக்கள் அரசியலைப் பற்றிக் கொள்வதில்லை, அரசியல் மக்களைப் பற்றிக் கொள்ளும்.

புலம் பெயர்ந்த தமிழ்மக்களை வர்க்க போராட்டத்தை நோக்கி தள்ளிவிடும் உந்துசக்தியாக வறுமை இருக்கும். இந்நாடுகளில் வறுமை எங்கே இருக்கின்றது எனக் கேட்பவர்களுக்கு ஒரு உதாரணம்: வேலையில்லாமல் சமூகநல ஊதியம் பெறுபவர்கள் அல்லது மிகக்குறைந்த வருமானம் பெறுபவர்கள் யாவரையும் வறியவர்களாகவே ஐரோப்பிய அரசாங்கங்கள் கணக்கெடுக்கின்றன. இவர்கள் பொதுவாக உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவினால் கஷ்டப்படுகிறார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் பாவித்த பொருட்கள் விற்கும் கடைகளை நாடிச் செல்வது வறுமையின் அறிகுறி. சிலர் நினைப்பது போல தொலைக்காட்சி, குளிர்ச்சாதனப்பெட்டி மற்றும் கார் ஆகியவற்றின் உபயோகம் பணக்கார அந்தஸ்த்தைக் காட்டும் ஆடம்பரப் பொருட்களாக இந்நாடுகளில் பார்க்கப் படுவதில்லை. நுகர்பொருள் கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம் அனைவரும் இவற்றை வாங்கிப் பாவிக்க வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றது. இதற்காக குறைந்த வருமானம் பெறும் சாதாரணக் குடிமகனும் வாங்கக்கூடியவாறு கடன் வழங்குதல், தவணைமுறையில் பணம் செலுத்துதல் போன்ற "நிதி உதவிகள்" செய்யப்படுகின்றன. இந்த மாயவலையில் சிக்கி பொருட்களை வாங்கிக்குவித்தவர்கள் பின்னர் நிரந்தரக் கடனாளியாகப் போனவர்கள் ஏராளம். சிலர் சாகும் வரை கடன்வழங்கிய வங்கிகளுக்காக உழைக்க வேண்டிய அவலநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். பல புலம்பெயர்ந்த தமிழரும் இந்த நுகர்பொருள் கலாசாரத்துக்கு அடிமையாகியுள்ளனர் என்பது இரகசியமல்ல.

"உலகமயமாதல்" ஏழைநாடுகளில் மட்டுமல்ல, பணக்கார நாடுகளிலும் புதிய ஏழைகளை உருவாக்குகிறது. உதாரணத்திற்கு இன்று பல ஜேர்மனிய பன்னாட்டுக் கொம்பனிகள், ஜெர்மனியில் உற்பத்திச் செலவு அதிகம் என்பதால் அங்கே தமது தொழிற்சாலைகளை மூடிவிட்டு, அயல்நாடான போலந்தில் தொழிற்சாலைகளை திறந்து அங்கே குறைந்த ஊதிய தொழிலாளரை வைத்து உற்பத்திச் செலவுகளை குறைத்துக் கொள்கின்றன. இதனால் ஆயிரக்கணக்கான ஜேர்மனிய தொழிலாளர்கள் வேலையிழந்தனர். இப்படி வேலையற்ற மக்கள் காலப்போக்கில் வாழ்க்கைச் செலவை ஈடுகட்ட முடியாததால் ஏழைகளாகின்றனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களின் கோபத்தை புதிய நாஸிகள் வெளிநாட்டுத் தொழிலாளருக்கும், அகதிகளுக்கும் எதிராகத் திசை திருப்பி விடுகின்றனர். புதிய நாஸிகள் மட்டுமல்ல தற்போதைய அரசாங்கங்களும் இதனால் அரசியல் ஆதாயம் பெறுகின்றனர்.

புதிய நாஸிகளுக்கு தங்கள் பக்கம் ஆட்களை சேர்த்துவிட்ட திருப்தி; அரசாங்கத்திற்கோ உள்நாட்டு வெளிநாட்டுத் தொழிலாளர்களை பிரித்து விட்ட திருப்தி. இந்த நிலை எவ்வளவு தூரத்திற்கு வளர்ச்சியடையப் போகின்றது என்பதிலேயே புலம் பெயர்ந்த தமிழரின் (நிச்சயமற்ற) எதிர்காலமும் தங்கியுள்ளது. மக்கள் மேலும் இனரீதியாகப் பிளவுபடின், அது மீண்டும் பாஸிஸ கொலைகளுக்கே இட்டுச்செல்லும். ஐரோப்பிய தொழிலாளர்கள் பாஸிஸ திசைதிருப்பல்களுக்கு மயங்காது உறுதியாக நிற்பின், அவர்களுடன் வெளிநாட்டுத் தொழிலாளர்களும் வர்க்க அடிப்படையில் இணைந்து போராடுவர்.

ஏற்கனவே ஐரோப்பாவில் வர்க்க வித்தியாசம் இன வித்தியாசமாவும் உள்ளது. இது எப்படி ஏற்பட்டது என்பதை ஆரம்பத்திலேயே சுட்டிக் காட்டியுள்ளேன். அதாவது உலக யுத்தத்திற்கு முன்பு ஏழைத் தொழிலாளராக விருந்த ஐரோப்பிய மக்களின் கீழ்மட்ட வர்க்க நிலை யுத்தத்தின் பின்னர் மத்தியதர வகுப்பாகியது. ஏழை விவசாயிகள் அரசு மானிய உதவியால் பண்ணைகளின் உரிமையாளரானார்கள். கல்வியறிவில்லாத மக்களுக்குக்கூட அதிக சம்பளத்துடன் வேலைவாய்ப்பளிக்கப்பட்டது. இத்தகைய மாற்றத்தால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்ப வெளி நாட்டுத் தொழிலாளர்கள் வரவழைக்கப்பட்டனர். இவ்வாறுதான் வர்க்க வித்தியாசம் இனரீதியாக மாறியது. இந்த வித்தியாசத்தை அப்படியே வைத்திருக்க அரசு பலவாறும் முயல்கின்றது. இவற்றில் ஒன்றுதான் "கறுப்பு & வெள்ளை" பாடசாலைகள். அதாவது அதிக வருமானம் பெறும் (பெரும்பான்மையாக வெள்ளைக்கார ஐரோப்பியர்) பெற்றோர் தமது பிள்ளைகளை சிறந்த கல்வித்தரம் வாய்ந்த, அதிக பணம் கேட்கும், தனியார் பாடசாலைகளுக்கு அனுப்புகின்றனர். இவை "வெள்ளைப் பாடசாலைகள்" என அழைக்கப்படுகின்றன. குறைந்த வருமானம் பெறும் (பெரும்பான்மையாக பல்லின வெளிநாட்டுத் தொழிலாளர்கள்) பெற்றோர் தமது பிள்ளைகளை அரசுப் பாடசாலைகளுக்கே அனுப்ப வேண்டிய நிர்ப்பந்தம். இவை "கறுப்பு பாடசாலைகள்" என அழைக்கப்படுகின்றன. ஐரோப்பாவில் அரசு தவிர்ந்த அனைத்துத் துறைகளும் தனியார் மயப்படுத்தப்பட்டு வரும் காலத்தில் இது போன்ற பிரிவினைகள் இன்னும் அதிகமாகலாம்.

கடந்த 50 வருடங்களாக ஐரோப்பாவில் "வர்க்கச் சமரசம்" நிலவுகின்றது. அதாவது வர்க்க முரண்பாடுகள் வளர்ந்து மோதாமல் தடுக்கப்பட்டு அனைத்து வர்க்கங்களும் சமாதானமாக வாழும் வகை செய்யப்பட்டுள்ளது. "நலன்புரி அரசின்" நோக்கமும் இதுதான். ஆனால் வரவிருக்கும் ஐரோப்பிய ஒன்றிய அரசு இதுவரை மக்கள் அனுபவித்து வந்த சலுகைகளை ஒன்றன்பின் ஒன்றாக பறிக்கவிருக்கின்றது. இதனால் மக்கள் பரம ஏழைகளாகும் போது வர்க்க முரண்பாடுகளும் விரிவாகும். இதனால் பெருமளவில் வெளிநாட்டவரை கொண்ட உழைக்கும் வர்க்கம் பாதிக்கப்படும். இத்தகைய நிலையில் புலம்பெயர்ந்த தமிழ் மக்களும் உழைக்கும் வர்க்க அரசியலுக்குள் தள்ளப்படுவதை யாராலும் தவிர்க்க முடியாது.

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்-முஸ்லீம் உறவின் எதிர்காலம்?

அண்மையில் கிழக்கு மாகாணத்தின் மூதூரில் ஆரம்பித்து அம்பாறை வரை மோசமாக வீசிய இன வன்முறைச் சூறாவளி மீண்டும் ஒருமுறை தமிழ் முஸ்லிம் உறவில் பிளவை உண்டாக்கியிருக்கிறது. உயிர் குடிப்பும், ரத்தம் சிந்தலும், கடைகள் வீடுகள் எரிப்பும், உடமைகள் அழிப்பும் இரு பக்கத்திலும் இடம்பெற்றிருக்கின்றன. இவை திட்டமிடப்பட்டவையா? அல்லது தற்செயலானவையா? அறுதியிட்டுக் கூற முடியாதுவிட்டாலும் நிச்சயம் இந்த தமிழ் முஸ்லிம் இன வன்முறைச் சூறாவளிக்குப் பின்னால் மறைமுகங்களும் கரங்களும் இருந்துள்ளன என்பது மட்டும் உண்மை. காலாகாலத்தில் அவற்றின் உண்மை வெளிவரவே செய்யும்.



கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் தான் வடக்கு கிழக்கில் தமிழ் முஸ்லீம் உறவுகள் மோசமடைந்து விரிசல் கண்டன. காத்தான் குடிப் படுகொலைகள் முதல் வடக்கிலிருந்து முஸ்லீம்கள் விரட்டப்பட்டது உள்ளிட்ட பல சம்பவங்கள் துயர் மிகுந்தவையும் கறை படிந்தவைகளும் ஆகும். மேற்படி ஒவ்வொரு சம்பவங்களும் தமிழ் முஸ்லீம் உறவை உடைத்து கீழே வீழ்த்திய அதேவேளை பேரினவாத யுத்த வெறிபிடித்த சக்திகளுக்கு மகிழ்வூட்டி நின்றன. அதுமட்டுமன்றி வடக்கு கிழக்கில் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு பலவீனங்களையும் ஏற்படுத்திக் கொண்டன. பேரினவாத யுத்த வெறியர்கள் மட்டுமன்றி வெளிநாட்டு ஆதிக்க சக்திகளும் கூட வடக்கு கிழக்கின் தமிழ் முஸ்லீம் உறவைக் குலைத்து அதன் ஊடாகத் தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முயன்று வந்திருக்கின்றன.

எவ்வாறாயினும் தமிழ் முஸ்லீம் உறவில் ஏற்பட்ட கறைபடிந்த சம்பவங்களும் குற்றம் சுமத்தப்படுகின்றது. பிரபா-ஹக்கீம் புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல விடயங்கள் மீறப்பட்டுள்ளதாக அமைச்சர் ஹக்கீம் ஆதங்கப்பட்டுள்ளார். முஸ்லீம்களிடம் வரி உட்பட பல வழிகளில் பணம் வாகனங்கள் பலவந்தமாகப் பெறப்பட்டு வந்துள்ளதாகவும் கூறப்படுகின்றன. அத்துடன் மிரட்டல் ஆட்கடத்தலும் இடம்பெற்றதாகவும் முஸ்லீம் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றன.

அதேவேளை முஸ்லீம்கள் மத்தியில் சில குழுக்கள் திட்டமிட்டு செயற்பட்டு வருவதாகவும் வன்முறையைத் தூண்டி வந்துள்ளதாகவும் தமிழர் தரப்பில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. குறிப்பாக மூதூரில் புலிகளின் காரியாலயம் தாக்கப்பட்ட சம்பவத்திலிருந்தே கிழக்கின் வன்முறைகள் ஆரம்பமாகின என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான குற்றச்சாட்டுதல்கள் பரஸ்பரம் சுமத்தப்பட்டுள்ள போதும் நடந்து முடிந்த சம்பவங்களின் பின்னால் சில அரசியல் சக்திக்ளின் கரங்கள் மட்டுமன்றி ஆயுதப் படைகளினதும் பொலிசாரினதும் தூண்டுதல்கள் இருந்துள்ளதாக அறிய முடிகின்றது. சில இடங்களில் இவர்கள் பாராமுகமாக இருந்துள்ளமையம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவற்றுக்கும் அப்பால் தற்போதைய சமாதான முயற்சிகளை விரும்பாத அந்நிய சக்திகளும் வெவ்வேறு வழிகளில் சம்மந்தப்பட்டிருப்பதாகவும் பேசப்படுகின்றது. ஏனெனில் இன்றைய சூழலில் மிக இலகுவாக வன்முறையை இரு இனங்கள் மத்தியில் மூட்டி விடக் கூடிய இடமாக கிழக்கு மாகாணம் இருந்து வருவதை சகல தீய சக்திகளும் அறிந்தே வைத்திருக்கின்றன. இவ்வாறான சகல முனைச்சக்திகளுக்கும் அண்மைய கிழக்கு மாகாணச் சம்பவங்கள் வாய்ப்பானதாகவும் உவப்பானதாகவும் ஆகிக் கொண்டன.

ஆனால் இவ்வேளையில் அடிப்படையானதாக அவதானிக்க வேண்டிய விடயங்கள் சிலவற்றைக் கண்டு கொள்வது அவசியமாகும். தமிழ்த் தேசிய இனமும் முஸ்லீம் தேசிய இனமும் ஒரே பிரதேசத்திலும் ஒரே மொழியைப் பேசியும் வாழ்ந்தும் வருகின்றார்கள் என்ற யதார்த்தத்தை எல்லோரும் ஏற்றுக் கொண்டே ஆக ஒடுக்கப்பட்டு வரும் நிலைமையைக் காணுதல் வேண்டும்.

அவ்வாறே முஸ்லிம் தரப்பில் தமிழ் விரோதப் போக்கு வளர்க்கப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். தமிழ்ப்பேரினவாதம் என்றும் முஸ்லிம் தேசம் எனவும் முஸ்லிம் தேசியவாதத்தைக் கிளப்பி அதன் மூலம் புதிய அரசியல் சக்திகள் ஆதாயம் பெற நிற்கின்றன. முஸ்லிம்கள் தனித்துவமானவர்கள் என்றும் உலகம் பரந்தவர்கள் என்பதாகவும் ஒருவகை உற்சாகமூட்டி தேசியவாத வெறி நிலைக்கு முஸ்லிம்கள் தள்ளப்படுவது எவ்வகையிலும் பலன் தரப் போவதில்லை.



தேசியவாதம் என்பது இனஒடுக்குமுறைகளுக்கும் பாகுபாடு புறக்கணிப்புக்களுக்கும் எதிரான நிலைப்பாட்டில் நின்று எதிர்க்கும் வரை அதற்கு ஒரு இடம் இருக்கவே செய்யும். ஆனால் அதே தேசியவாதம் மற்ற தேசிய இனங்களுக்கு விரோதமான வெறியாக்கப்படும் போதே இன, மத, மொழி என்பனவற்றின் பெயரால் மனித அழிவுகள் ஏற்படுகின்றன. இதனை உலக வரலாற்றிலும் நம் நாட்டு அனுபவத்திலும் நிறையக் கண்டிருக்கின்றோம். அதுமட்டுமன்றி இத்தகைய தேசியவாத வெறியூட்டல்களால் அந்தந்த தேசிய இனங்களினது உயர் வர்க்க சக்திகளும் அவர்கள் ஆதரவு கொடுக்கும் ஆளும் வர்க்க சக்திகளுமே தங்களைத் தக்க வைத்து வளம் பெற்றுக்கொண்டனர். எவ்வளவிற்கு இனம், மதம், மொழி பற்றிப் பேசினாலும் அடிப்படையில் மனிதர்கள் எல்லோருமே சொத்து-சுகம், வாய்ப்பு-வசதிகள் என்ற நிலையில் வர்க்கங்களாகி ஏற்றத் தாழ்வுகளுடன் ஒடுக்குமுறைகளின் கீழ் வாழ்ந்துவரும்

## தீர்மானிக்க வேண்டியவர்கள் யார்?

கசப்புணர்வுகளும் கடந்த காலத் துடன் கழிந்து போனவைகளாக இருக் கட்டும். இனிமேல் அவ்வாறு இடம்பெறுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது என்றே இரு தரப்பிலும் மக்கள் நம்பிக் கொண்டனர். அந்த நம்பிக்கையானது ரணில்-பிரபா புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின் ஏற்பட்ட பிரபா-ஹக்கீம் புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் துளிர் விட்டிருந்தது. அத்தகைய துளிர்கள் கருகிக் கொள்ளும் அளவுக்கு கிழக்கில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் நடந்து முடிந்துள்ளன.

இச் சம்பவங்கள் பற்றி பிரேத பரிசோதனை அவசியம் இல்லாவிட்டாலும் நீதியான ஒரு விசாரணை இருக்க வேண்டும். எந்தவொரு சம்பவமும் மூடி மறைக்கப்படக் கூடாது. அவ்வாறு மறைக்கப்பட்டால் அவை போன்றவை மீண்டும் மீண்டும் இடம் பெறவே செய்யும். கடந்த காலத்தின் அனுபவங்களும் அத்தகையவைகளே.

முஸ்லிம்கள் தரப்பிலிருந்து புலிகளின் மீது வேண்டும். ஒருவரை ஒருவர் நிராகரித்தோ அல்லது ஒருவரது உரிமையை மற்றவர் பறித்தோ எவரும் வாழுதல் சாத்தியமற்றதாகும். அல்லது இருவருக்கும் பொது எதிரியான பேரினவாதத்திற்கும் அந்நிய ஏகாதிபத்தியத்துக்கும் துணை போய்க் கொண்டும் எந்த வொரு தேசிய இனமும் தங்களது உரிமைகளை நிறுத்திக் கொள்ளவியலாது.

இவ்விடத்திலே தமிழ்த்தேசிய ஆதிக்க அரசியல் பார்வையின் ஊடாக முஸ்லிம் மக்களை நோக்குவது கைவிடப்படல் வேண்டும். நாங்கள் பெரும்பான்மை அல்லது சகல வழிகளாலும் பலமானவர்கள் என்பதால் நாம் சொல்வதை முஸ்லிம் மக்கள் கேட்டேயாக வேண்டும் எனத் தமிழர் தரப்பில் நியாயம் கூறப்படுமானால் அது மிகத் தவறான ஒரு கண்ணோட்டமாகும். அத்தகைய நிலை முற்றாக கைவிடப்பட்டு முஸ்லிம் தேசிய இனம் சகோதர இனம் என்பதையும் பேரினவாதத்தாலும் ஏகாதிபத்தியத்தாலும் குறிவைக்கப்பட்டு அடிப்படை நிலையைப் பலர் உணர்ந்து கொள்வதில்லை. இதனை தேசியவாதம் பேசுவோர் மறைத்துக் கொள்கின்றனர்.

தமிழர்களும் முஸ்லீம்களும் இந்நாட்டில் ஒடுக்கப்படும் இரண்டு தேசிய இனங்களாகவே உள்ளனர். அவர்கள் இன, மதத்தால் பிளவுண்டு மோதிக் கொள்வது பொது எதிரிக்கே நன்மை கொடுப்பதாகும். ஆகவே வடக்கு கிழக்கின் தமிழ் முஸ்லீம் உறவின் எதிர்காலம் உறுதியான சில அடிப்படைகளில் உறுதிப்படுத்த வேண்டியது அவசியமாகும். அதனைத் தீர்மாணிக்க வேண்டியவர்கள் சாதாரண தமிழ் முஸ்லீம் மக்களேயாவர். அவர்கள் தூர நோக்குடனும். யதார்த்த நிலைகளுடனும் சிந்தித்துச் செயல்பட முன்வரல் வேண்டும். தேசியவாதத்தைக் கிளறி அரசியல் ஆதாயமும் வர்க்க வளர்ச்சியும் பெற நிற்கும் இருபுறத்து சக்திகள் பற்றியும் தமிழ் முஸ்லீம் மக்கள் மிக விழிப்பாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

• • • • • • •



# மாக்ஸியத்தின் போதாமைகள் பற்றி

## 2. மாக்ஸியமும் பெண்ணுரிமையும்

பெண்ணுரிமை இயக்கத்தின் வளர்ச்சிப் போக்கில் உருவான பெண்ணியக் கோட்பா இருவேறு போக்குகளைக் கொண்டிருந்தது. ஒன்று, பெண்ணுரி மையை மற்றச் சமூ உரிமைகளுடன் சேர்த்துக் கண்டது. பெண்கள் மீதான அடக்குமுறைக்கு எதிரா போராட்டத் தைப் பிற அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களுடன் தொடர் படுத்த முற்பட்டது. இரண்டாவது, பெண்ணுரிமையை மற்றப் பிரச்சினை களிலிருந்த பிரித்துப் பார்த்தது. மற்ற ஒடுக்குமுறைகள் பற்றி அக்கறை காட்ட மறுத்தது.

எந்த ஆராய்வும், அறிவும், நிலைப்பாடும் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட முறையி உருவானதல்ல. நடைமுறை மூலமே அணுகுமுறை செழுமை யடைகிறது. அறிவு ஆழமும் விரிவும் பெறுகிறது. நிலைப்பாடு தெளிவும் உறுதியும் பெறுகிறது. எனினும் சில அடிப்படையான விடயங்கள் தவிர்க்க முடியாமலே மனிதச் சிந்தனைகளைக் குறிப்பிட் திசைகளில் ஏவிவிடுகின்றன. பெண்ணுரிமை பற்றிக் கூறுவதாயின், பெண்கள் பற்றிய திட்டவட்டமான வரையறுக்கப்பட்ட கொள்கை களையுடை யவையான மதங்களா இன்னமும் ஆண்-பெண் சமத்துவத்தை நடைமுறையிலோ கொள்கை அளவிலோ ஏற்க முடியாமல் உள்ளது. ஒரு மதச் சூழலில் ஆண்-பெண் சமத்துவம் ஏற்கப்பட்டதாயின் அது அந்த மதத்தின் அடிப்படைகள் சிலவற்றைத் தகர்த்ததன் மூலமே நிகழ்ந்துள்ளது

மாக்ஸியமோ ஆண்-பெண் வேலைப் பிரிவினையே மனித இனத்தின் முதலாவது வேலைப் பிரிவினையும் ஆணாதிக்கத்தின் தோற்றத்துக்கு வழி வகுத்ததும் என்று அடையாளங் காட்டியது. மாக்ஸுக்கும் ஏங்கல்ஸுக்கும் முன்னம் ஆண்-பெண் சமத்துவம் பற்றித் தெளிவாகவும் உறுதியாகவும் பேசப்படவில்லை. ஆண்-பெண் ஏற்றத்தாழ்வின் அடிப்படை தேடப்படவுமில்லை.

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உருவான பெண்ணியம் நடுத்தர வர்க்கத்தின் நலன்சார்ந்த பெண்ணிய மாகவே இருந்தது. தொடக்க நிலையில் நிற வெறி, தொழிலாளர் உரிமை என்பன பற்றிய அக்கறைகள் காணப்பட்ட போதும், பெண்களின் வாக்குரிமைப் பிரச்சினை தீர்ந்த பிறகு அதன் பிற சமூக அக்கறைகள் சரிவு கண்டன. அத்துடன் பெண்ணுரிமை இயக்கமும் சரிவு கண்டது.

சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஏற்பட்ட பெண்ணிய எழுச்சி முதலில் இடதுசாரிகளின் நடுவிலிருந்தே தோன்றியது. அது வியற்னாம் போருக்கு எதிர்ப்பு, நிறவாத எதிர்ப்பு, சமூக நீதி வேண்டல் போன்ற விடயங்களினின்று தன்னை விலக்காமல் நின்றது. ஆயினும் நடுத்தர வர்க்கச் சிந்தனையின் ஆதிக்கம் ஓங்கியதோடு அதன் சமூக அக்கறையும் போராட்ட வீச்சும் மழுங்கின. பிற சமூக ஒடுக்குமுறைகள் பற்றிய அக்கறையே இல்லாத ஒரு பெண்ணியம் முதலாளிய நிறுவனத்தின் ஆசிகளுடன் வளர்ந்தது.

இந்தப் பெண்ணியப் போக்கு ஒருபுறம் பெண்ணுரிமையைப் பிற மனித உரிமைகளினின்று விலக்கி நோக்குவது மட்டுமன்றிப் பெண்ணுரிமைக்கு மாக்ஸியச் சிந்தனையினதும் நடைமுறையினதும் பங்களிப்புகளை மூடி மறைப்பதிலும் திரிப்பதிலும் பெரும் கவனங் காட்டியது. இரண்டு விதமாக இந்தப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒன்று, மிகவும் சிறு பிள்ளைத்தனமாக, மாக்ஸ் தொடத் தவறிய ஒவ்வொரு நுணுக்கமும் பற்றிப் பட்டியல் போடும். எனவே மாக்ஸியம் பெண்ணுரிமையைப் பற்றிக் கவனிக்கத் தவறிவிட்டது என்று வாதிக்கும். பெண்ணுரிமையைக் கையாள மாக்ஸியத்தில் இடமில்லை என்று வாதிக்கும்.

மற்றது மாக்ஸிய நடைமுறை இயக்கத்தில் ஏற்படும் நடைமுறைப் பிரச்சினைகள், தனிப்பட்ட மனிதர்களின் குறைபாடுகள் முதல் திசை தவறிய இடதுசாரிக் கட்சிகளின் தலைமைகளின் தவறுகள் வரை, பட்டியலிட்டு அவற்றை மாக்ஸியத்தின் போதாமை என்று சித்தரிக்கும்.

இந்த இரண்டு போக்குகளுமே திட்டமிட்ட முறையில மேற்கொள்ளப்படு கின்றன. எந்தவொரு சமூகச் சிந்தனை பெண்ணுரிமைக்கு மிக நெருக்கமாயும் உறுதியான ஆதாரமாயும் இருக்கக் கூடுமோ அந்தச் சிந்தனையையும் அதை ஏற்கும் சமூக அரசியல் இயக்கத்தையும் ஒரு பெண்ணியப் போக்கு எதிர்க்கிறதாயின் அதன் நோக்கம் என்னவாயிருக்கும்?

மேற்கூறிய குற்றச்சாட்டை, மாக்ஸியர் கள் கவனிக்க வேண்டிய விடயங்கள் பற்றிச் சுட்டிக்காட்டும் எண்ணத்துடனும் மாக்ஸியத்தைச் செழுமைப்படுத்தும் நோக்குடனும் முன்வைக்கிறவர்கள் மீது நான் கை வைக்கவில்லை. மாறாக இத்தகையவர்களது வாதங்களையும் மாக்ஸிய எதிர்ப்பு நோக்கத்துக்காகப் பயன்படுத்துகிறவர்கள் பற்றியே நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்கிறேன்.

கூலி, விலை, லாபம் என்பனவற்றிடை யிலான உறவு கூலி, உழைப்பு, மூலதனம் என்பனவற்றிடையிலான உறவையும் விவரித்த மாக்ஸ் குடும்பத் துக்கான பெண்களின் உழைப்பைப் பற்றிக் கணக்கிலெடுக்க வில்லை என்று ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. பெண்ணுரிமை பற்றிய அக்கறையே இல்லாத புலம்பெயர்ந்த ஆய்வறிவாளர்கள் கூட இதைக் கிளிப்பிள்ளை கள் போல் ஒப்புவித்தார்கள். குடும்பம் என்ற அமைப்பும் ஆண்-பெண் வேலைப் பிரிவினையும் ஆணாதிக்கத்தின் தேவையை ஒட்டியே இருப்பதை மாக்ஸியமே முதலில் சுட்டிக்காட்டியதை மறந்துதான் இவர்கள் பேசினார்கள். ஏனென்றால் அவர்களுடைய தேவை அப்படி.

ஒருவர் கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தை ஏற்பதாலோ கட்சியில் உறுப்பினராகி யோ நல்ல கம்யூனிஸ்ட்டாக முடியாது. ஒருவரது வளர்ச்சி நடைமுறையின் மூலமே இயலுமாகிறது. சமூகத்தில் ஆதிக்கம் செலுத்துகிற சிந்தனை பால் வேறுபாடின்றியும் வர்க்க வேறுபாடின்றியும் நம் ஒவ்வொருவரதும் சிந்தனை மீது தாக்கம் செலுத்துகிறது. ஒருவர் தொழிலாளியாகப் பிறந்ததால் வர்க்க உணர்வும் பாட்டாளி வர்க்கச் சிந்தனையும் தானாகவே வந்துவிடாது. இது போலவே, பெண்ணாகப் பிறந்தால் பெண்ணிய உணர்வு தானாகக் குடிகொண்டு விடாது. சமூகத்தில் ஆதிக்கம் செய்யும் சிந்தனையினின்று விடுபட்டு விடுதலைக்கான சிந்தனை யை வந்தடைய நீண்டகாலம் எடுக்கும். எனவே ஒவ்வொரு தனி மனிதரிலும் குறைபாடுகள் இருப்பது இயல்பானது. நாம் கவனிக்க வேண்டியது ஏதென்றால், ஒரு குறிப்பிட்ட சித்தாந்தம் மனிதரது அணுகுமுறையை எந்தத் திசையில் உந்திவிடுகிறது என்பதே.

மாக்ஸிய நடைமுறையும் சிந்தனையும் பெண்ணியம் உட்பட வேறெந்தச் சிந்தனை முறையையும் விட ஆழமாக ஆண்-பெண் சமத்துவத்துக்குப் பணியாற்றி உள்ளன. அரைகுறையான இடதுசாரிச் சிந்தனைகள், சந்தர்ப்ப வாதம் போன்றவை மனித விடுதலைக் குத் துரோகம் செய்திருக்கின்றன. மாக்ஸியம் என்ற பேரில் இன்னமும் குறுகிய தேசியவாதமும் சீர்திருத்த வாதமும் உலாவருகின்றன. தம்மை மாக்ஸியர்கள் என்று சொல்வோர் பலரிடம் ஆண்ஆதிக்கம் நிறைந் திருக்கிறது.

பெண்ணுரிமை தொடர்பாக நமது பொறுப்பு என்ன? ஆணாதிக்கத்தை அடையாளங்கண்டு தவறான சிந்தனையைத் திருத்துவதா அல்லது தவறு செய்தவர் மாக்ஸியவாதி என்று சொல்லப்படுவதால் அதை மூடி மறைப்பதா அல்லது எல்லா ஆண் மாக்ஸியவாதிகளும் ஆணாதிக்கக்காரர் என்றும் மாக்ஸியம் பெண்விடுதலையை மறுக்கிறது என்றும் அப்படியே நிராகரிப்பதா?

நிச்சயமாக, பெண்விடுதலை பற்றி உண்மையான அக்கறையுடையோர் பெண்விடுதலைக்கு மிக ஆதரவான சிந்தனை மாக்ஸியம் என்று அறிவார்கள். அதை வலிந்து மறுக்கிறவர்கள் பற்றி நாம் அதிகம் செய்ய முடியாது. ஆனாலும் பாட்டாளி வர்க்கப் போராட்டம் பெண்விடுதலைக்கு ஆற்றிய சேவை பற்றி நாம் முழு அறிவோடும் தெளிவோடும் இருக்க வேண்டும். பாட்டாளி வர்க்கப் புரட்சி ஏற்படும் வரை பெண்களின், குறிப்பாக உழைக்கும் பெண்களின் உரிமைப் போராட்டம் காத்திருக்க வேண்டும் என்பது மாக்ஸிய நிலைப்பாடல்ல என்பதில் மாக்ஸியவாதிகள் உறுதியாக நிற்பதோடு அதைத் திரும்பத்திரும்பத் தெரியப்படுத்தவும் வேண்டும்.

– இமயவரம்பன் –

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும் [ 5 ]

## அந்நியர் தயவிலும் ஆயுத முதன்மையிலும் தங்கியிருத்தலே தலைவிதி!

### செண்பகன்

தமிழ்த்தேசிய அரசியலின் வரலாற்றை அதன் வளர்ச்சியையும் நாம் நோக்கும் போது ஊற்றுமூலம் ஒன்றானபோதும் ஒன்றாகியும் வேறாகியும் மீண்டும் ஒன்றாகியும் மீண்டும் வேறாகியும் செல்லுகின்ற திசை மார்க்கத்தை நாம் அவதானிக்கலாம்.

சட்டசபை காலத்தில் கொலனித்துவ ஆட்சியுடன் ஒன்றாகியும் பாராளுமன்ற மாற்றத்தின்பின் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் என ஒன்றாகியும். பின்னர் தமிழரசுக்கட்சி என வேறாகியும், மீண்டும் தமிழர் விடுதலைக் கூட்டணி என 'தமிழ் ஈழ' சுலோகத்துடன் ஒன்றாகியும் தேர்தல் காலத்தில் செயற்பட்டனர்.

தேர்தல் விளையாட்டில் சலிப்பேற்பட்டதும் எல்லோரும் ஒன்றாகவே 1984ல் அரசியலமைப்புச் சட்டத்தின் ஆறாவது திருத்தத்துக்கமைய தமிழீழத்துக்கு விரோதமாகச் சத்தியப் பிரமாணம் செய்ய மறுத்து பாரதத்துக்கு பாய்ந்தோடினர் பாராளுமன்ற பதவிகளைத் துறந்து!

1976-ல் தமிழீழப் பிரகடனத்தை வட்டுக்கோட்டை மாநாட்டில் முன்மொழிந்த போது 1977-ல் வரப்போகும் தேர்தல் கனவுகளில் அவர்கள் அனைவரும் ஒன்றாகச் சங்கமித்திருந்தனர்.

1971-ல் பங்களாதேஷ் பிறந்தபோது இந்தியப் படையின் உதவியுடன் முஜிபர் றஹ்மான் தலைவரான காட்சிகளில் 1970- தேர்தலில் தோல்வியுற்ற தளபதி அண்ணன் அமிர்தலிங்கமும் அவரது தம்பியரும் தம்மை மறந்தனர்.

பாரதத் தாயகத்தின் உதவியுடன் யாழ்தேஷ் அல்லது தமிழ் ஈழம் மலரும் என நம்பினர். அல்லது நம்ப வைக்கப்பட்டனர்.

இதற்கு முன்னர் 'சமஷ்டி' என்ற நினைப்பில் 'தமிழரசு' என உச்சரித்து மக்களைத் 'தனிநாடு' பற்றிய கனவுகளில் மூழ்க வைத்த 'காற்சட்டை காந்தி' என வர்ணிக்கப்பட்ட எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தனது தாயகநாடாக 'இஸ்ரேல்' நாட்டின் உதயம் பற்றி தேர்தல் காலங்களில் உச்சாடனம் செய்வித்தார். இதில் முதன்மையாகச் செயற்பட்டவர் யாரெனில் 'தமிழரசு' உதயமாகாதவரை எனது தாடியை வழிக்க மாட்டேன் என வீரசபதம் பூண்டு மறைந்த சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் வீ.என். நவரத்தினம் .உலகமெலாம் வாழ்ந்த யூதர்கள் ஒருமுகமாக இரண்டாம் உலகப் போருக்குப்பின் வரவழைக்கப்பட்டு இஸ்ரேல் நாடு உருவானது. பாலை வனம் எவ்வாறு சோலைவனமாக்கப் பட்டதோ அதே போல யாழ்ப்பாண வரண்ட பூமியையும் பூத்துக் குலுங்கும் பொன் விளையும் பூமியாக்குவோம். என்று இஸ்ரேல் பிறப்பின் முன்னு தாரணம் சிலாகிக்கப்பட்டது.

இஸ்ரேல் என்ற நாட்டின் யூத வெறி மிக்க சியோனிச ஆதிக்க அம்சத்தையோ. ஏற்கனவே இருந்த பாலஸ்தீன மக்களை பரதேசிகளாக்கி - அகதிகளாக அலைய வைத்து - அவர்களது மண்ணைப் பறித்து ஆக்கிரமித்த அடாவடித்தனத்தையோ, உலகச் சண்டியனாக விளங்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மத்திய கிழக்குப் பிராந்தியத்தின் அடியாளாக விளங்கும் இஸ்ரேலின் முழுமையோ தமிழரசால் வசதியாகவே மறைக்கப்பட்டது.

தமிழரசின் வீ.என். நவரத்தினம் இஸ்ரேலின் விருந்தாளியாக அதிகமாக அங்கு சென்று வந்தாரென்பது வரலாறு.

வியட்நாம் மீது ஆக்கிரமித்த அமெரிக்காவின் ஆயுதப்படை வியட்நாமில் நீண்டகாலமாகவே 'ஜனநாயகத்தை மீட்பதற்காக. அந்நாட்டு மக்களின் விடுதலைப் போரை நசுக்கி வந்தபோது தமிழரசுக் கட்சியினரில் எவராவது வியட்நாமுக்கு ஆதரவு வழங்காதது மட்டுமல்ல. அமெரிக்காவின் ஜனநாயக மீட்புக்கான பணியை வாயாரப் புகழ்ந்தது மட்டுமன்றி. வியட்நாம் வெற்றி பெற்று அமெரிக்க விசுவாசிகள் வெளியேற்றப்பட்டபோது எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் சுதந்திரன் பத்திரிகையும் கோவை மகேசனும், வட்டிக்கடைக்காரரும் முதலாளிகளுமான இந்தியத் தமிழர்களின் வெளியேற்றம் பற்றி மட்டுமே மிக வேதனைப் பட்டுக் கட்டுரை தீட்டியது. தமிழ் மக்கள் மத்தியில் மாக்ஸிஸ்டுகள் மட்டுமே வியட்நாம் விடுதலையை வாழ்த்தி வரவேற்றனர்.

தமிழரசுக் கட்சித் தலைவர்களின் கூட்டும் குழைவும் அமெரிக்காவுடனும்- இஸ்ரேலுடனும்- இந்தியாவுடனுமே இருந்ததேயன்றி சொந்தநாட்டில் வாழும் விவசாய-தொழிலாளத் தமிழ் மக்களுடனோ- பிறதேசிய இனஞ் சார்ந்த முஸ்லீம்-மலையக-சிங்கள மக்களுடனோ ஒட்டும் உறவுமில்லாமல் மிகக் கவனமாகவே சகல இனங்களிலுமுள்ள வசதி படைத்த தலைவர்களான முதலாளித்துவ சக்திகளுடன் தமது உறவைப் பேணிவந்தனர்.

சாதாரண சாமானிய விவசாயிகள் - தொழிலாளர் என வாழும் மக்களைவிட அந்நியரின் அரவணைப்பை மிக அதிகமாகவே விரும்பினர். விரும்புகின்றனர். ஆங்கில மோகமும் அமெரிக்க அடிமை விசுவாசமும் இன்றுவரை தொடர்கிறது.

தமிழர்களின் தாயகம் இலங்கை என்பதை இவர்கள் ஒப்புக்கொள்வதைவிட இந்தியாவே தமது தாயகமெனப் பெருமிதம் கொள்வர். இந்தியாவைத் தாய் நாடாகவோ தந்தையர் நாடாகவோ கொள்வதில் புளங்காகிதமடையும் தமிழ்த் தேசியவாதிகள் இலங்கையை சேய்நாடாகவே இன்றும் உணர்ந்து உள்ளம் மகிழ்வர்.

தேசிய நீரோட்டத்தில் கலந்து வரும் அனைத்து ஆயுத இயக்கங்களும் இந்தியாவை இன்றுவரை இரட்சகராக கருதும் போக்கு இல்லாது அகன்று விடவில்லை. ஏனெனில் 1983ன் பின்னர் சகல விடுதலை இயக்கங்களும் இந்தியாவுக்கு இழுக்கப்பட்டு இந்திய 'றோ'வினால் போஷிக்கப்பட்டு ஏ.கே. 47 முதல் பல நவீன ஆயுதங்கள் வழங்கப்பட்டு. பயிற்சிகள் வழங்கப்பட்டு, முகாம்கள் அமைக்கப்பட்டு வளர்க்கப் பட்டமை வரலாறு. உப்பிட்ட வரை உள்ளளவும் நினைக்கின்ற நன்றி மறவாத் தமிழ்மரபு பேணுதல் எல்லோரதும் கடனே!

தமிழீழப் பிரகடனத்தை தொடர்ந்து 1977 தேர்தல் முழக்கங்களில் மிகப்பிரபலமானவர் வண்ணை ஆனந்தன் என்ற சிறை மீண்ட செம்மலாவார். இவர் தனது தேர்தல் மேடைகளில் 'இலுப்பை பழுத்தால் என்னவரும்' என்று கேட்பார். பின்னர் தானே சொல்வார்.' வெளவால்கள் வரும். தமிழீழம் தரும்' என்பார். கரகோசம் வானைப் பிளக்கும். அவர் கருதியது தமிழ்த்தேசிய இலுப்பையில் வாக்குகள் சிதறாமல் பாராளுமன்ற கதிரைகள் நிறைந்து பழுத்தால் அந்நிய வல்லூறுகள் வந்து நாட்டைப் பிரித்துத் தரும் என்ற நப்பாசையேயாகும். இது பங்களாதேஷ் உருவாக்கத்தில் இந்திய தலையீட்டின் தயவிலேனும் தமிழீழம் மலரும் என்ற போதையேயாகும்.

வண்ணை ஆனந்தன். 'வெளவால் ஆனந்தன்' என்று வடபுலத்து கொம்யூனிஸ்ட் மேடைகளில் கிண்டல் செய்யப்பட்டார். இந்திய வெளவால்கள் வந்தன. போயின. மீண்டும் 2002 தேர்தலில் 'தமிழர் கூட்டமைப்பு' என்று ஒன்றாகித் தேர்தலில் ஒட்டிப்பிறந்தது.

அதன் தலைவர் ஆனந்த சங்கரியார் வெளிப்படையாகவே வெளிநாட்டு தூதுவர்களும் தலைவர்களும் கேட்டுக் கொண்டதன் படியே கூட்டமைப்பு தேர்தலில் ஒன்றுபட்டதென்றார்.

ஜெயலலிதா விடுதலைப்புலிகளை இந்தியாவுக்கு நாடு கடத்த வேண்டுமெனச் சட்டசபையில் பிரேரணை கொண்டு வந்தபோது இலங்கைத் தமிழர்கள் எதிப்பார்ப்பாட்டங்களை நடாத்தியபோது ஆனந்தசங்கரியார் தமிழகத் தலைவர்களைக் கோபமூட்ட வேண்டாம் என்று கடிந்து அறிக்கை விட்டு தனது அந்நிய விசுவாசத்தை வெளிப்படுத்தினார்.

தமிழ் விடுதலை இயக்கங்கள் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தமை சரியானபோதும் மக்களை மதிக்காமலும் மக்கள் மீது ஆயுதங்கள் திணிக்கப் பட்டமையும் பேரழிவுகளை ஏற்படுத்தும் யுத்தப் பிரியர்களாக இயக்க வரலாறுகள் அமைந்தமையும் சகோதரப் படுகொலைகளும் துரோகிகளின் பட்டியலின் தொடர்ச்சியும் நீட்சியுமே தமிழ்த்தேசிய வரலாற்றின் துயராகும்.

விடுதலை போராட்டம் ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பானது. மக்களுக்கெதிராக எச்சந்தர்ப்பத்திலும் துப்பாக்கி நீளமுடியாது. குறுநிலமன்னர்களாகி மக்களை ஆளநினைப்பது விடுதலைப் போராட்டம் சார்பானது அன்று.

யுத்தத்தை முன்னெடுப்பதும் மனிதர்களே ஆயுதங்களாக மாறி மரிப்பது என்பதும் தற்செயலாகவும் தற்காலிகமாகவும் அமையாமல் அதுவே நிரந்தர நிகழ்ச்சி நிரலாக மாறுவதும் ஏகாதிபத்திய ஆயுத வியாபாரிகளின் நவீன ஆயுதங்களிலேயே தங்கியிருந்து டொலர்களைச் சேர்ப்பதும் குவிப்பதும் சிந்துவதும் விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்குப் பலம் சேர்ப்பதற்குப் பதிலாக ஊறும் கேடும் விளைவிப்பதுடன் ஆயுத வியாபாரிகளை வழிநடத்தும் ஏகாதிபத்திய வலைகளிலே வீழவும் வாழ்வைத் தொலைக்கவுமே முடியுமே தவிர மக்களின் மீட்சியைக் காணமுடியாதென்பதே வரலாறு கற்றுத் தரும் பாடமாகும்.

மீளவும் திருமலையில் இந்திய வெளவால்கள்! வானத்திலும் கடலிலும் அமெரிக்க வெளவால்கள்! வெளவால்களின் வரவுக்காக வாசலைத் திறந்து காத்திருப்போம்! மாலையிட்டு வரவேற்க போட்டி போட முனைவோம். இது தான் தமிழ்த் தேசியத் தலைவிதியா?

# வை. கோ. சிறை வைப்பும்

## பின்னணியும் முன்னணியுன்

கடந்த யூலை 10ம் திகதி தமிழ்நாடு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரான வை. கோ. எனப்படும் வை. கோபாலசுவாமி சென்னையில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அடிக்கடி அமெரிக்கா சென்று வரும் வை. கோ. வழமை போன்று அமெரிக்காவிலிருந்து திரும்பிய வேளையில் சென்னை விமான நிலையத்தில் வைத்து போடோ (Poto) சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு வேலூர் மத்திய சிறையில் விஷேட பிரிவில் வைக்கப்பட்டுள்ளார். 'நான் சிறையில் அடைக்கப்பட்டால் சகல வழிகளிலும் எனக்கு ஆதாயமே' எனப் பத்திரிகைகளுக்கு கூறிய வை. கோ. இப்போது அந்த ஆதாயத்தைப் பெற முயன்று கொண்டிருக்கிறார்.

அரசியல் தலைவர்களாயினும் சரி அப்பாவிப் பொதுமக்களாயினும் ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் இயற்றும் பயங்கரச் சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவதை எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஜனநாயகம். மனித உரிமை பற்றிப் பேசும் எவரும் இவ்வாறு நடந்து கொள்வதை அனுமதிக்க முடியாது.

ஆனால் வை. கோ.வின் சிறை வைப்பின் பின்னணியை ஆராயும் போது சுவை மிக்க அரசியல் அந்தரங்கங்களைக் காண முடியும். முதலாவதாகக் காண வேண்டிய சுவை தரும் செய்தி என்னவென்றால் வை. கோ.வின் ம. தி. மு. க. அங்கம் வகிக்கும் இந்துத்துவ பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான அரசாங்கமே சில மாதங்களுக்கு முன்பு (Poto) பயங்கரவாதத் த்டைச் சட்டத்தை நிறைவேற்றியது. அதற்கு வை. கோ. தலைமையில் முழுமையான ஆதரவு வழங்கப்பட்டது. வை. கோ. உட்பட அவரது ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களும் கை உயர்த்தினார்கள். இவர்களில் இருவர் மத்திய அமைச்சர்கள் என்பதைச் சில பத்திரிகைகள் மறைத்தும் சிலர் அடக்கி வாசித்தும் வருகின்றனர். ஏனையோருக்கு ஏவி விடக் கொண்டு வந்த கடி நாய் கொண்டு வந்தவர்களில் ஒருவருக்கு முதல் தடவையாகக் கடித்திருக்கிறது.

இந்தப் போடோ சட்டம் கொண்டு வரப்பட்ட வேளை கூறப்பட்ட சப்பை நியாயம் என்னவெனில் 'இஸ்லாமியத் தீவரவாதம்' 'இடதுசாரித் தீவர வாதம்' ஆகியவற்றுக்கு எதிராகவும் நாட்டின் அமைதி. ஐக்கியத்திற்காகவும் என்றே கூறப்பட்டது. அப்படியானால் வை. கோ.வை எந்த வகைக்குள் வைக்கிறார்கள் என்பதே பலரது கேள்வியாகும்.

அடுத்த நகைச்சுவை என்னவென்றால் போடோ சட்டத்தை வை. கோ. மீது பாயவிட்டவர் ஜெயலலிதா என்பதால் மத்திய அரசில் வை. கோ.வுக்கும் அவரது கட்சிக்கும் கோபம் இல்லையாம். ஆனால் அத்வானியோ அன்றி வாஜ்பாயோ தனது அரசாங்கத்திலும் அமைச்சரவையிலும் அங்கம் பெறும் கட்சி ஒன்றின் தலைவருக்கு ஏற்பட்ட கதி பற்றி கவலைப்படவே இல்லை.

இதேநிலை ஒரு சிவசேனையின் தலைவருக்கோ அன்றி விஷ்வ ஹிந்து பரிசத் தலைவருக்கோ இடம் பெற்றிருந்தால் என்ன நடந்திருக்கும். அரசே கவிழும் அளவிற்கு புயல் வீசி இருக்கும்.

ஆனால் இது நடந்திருப்பது தமிழ் நாட்டுக் கட்சிக்கு குறிப்பாக திராவிட இயக்கப் பாரம்பரியம் பற்றிப் பேசி வரும் கட்சிக்கு என்பதால் மத்தியில் யாரும் கவலை கொள்ளவில்லை. ஏனெனில் அவர்களுக்கு நன்கு தெரிந்த விடயம். தமிழ் நாட்டின் திராவிடப் பாரம்பரியத்தை பிராமணிய இந்துத்துவ தலைமையிடம் பலி கொடுத்துவிட்டு, அடிமை விசுவாசமாக சேவகம் செய்து வருபவர்கள் இந்தத் திராவிடக் காரர்கள் என்பதாகும்.

அதுமட்டுமன்றி கருணாநிதி இச் சிறை வைப்புப் பற்றி தெளிவாக எதனையும் எதிர்த்துக் கொள்ளாது நழுவி நழுவி அறிக்கை வெளியிட்டுள்ளார். அவருக்குரிய மிகப் பெரிய கவலை தனக்குப் பின் தனது மகனுக்குப் போட்டியாக வை. கோ. வந்துவிடக் கூடாது என்பதேயாகும்.

இவை ஒரு புறமிருக்க வை. கோ. புலிகளுக்கு ஆதரவாகப் பேசியதன் விளைவு தான் இக் கைதும் சிறையும் என்று உரத்துக் கூறுகிறார்கள். உண்மையாகவே வை. கோ. இவ்வாறு பேசியது முதல் தடவை அல்ல. அவரது அரசியல் பலத்தின் அடிப்படையே புலிகளுக்கு ஆதரவும் ஈழத் தமிழ் மக்களுக்கான ஆதரவு என்ற நிலைப்பாடுமேயாகும். இவை இரண்டும் அவர்களின் அரசியல் இருப்புக்கான விடயங்களேயாகும்.



உண்மையாகவே வை. கோ. ஈழத் தமிழர்களுக்காக நேர்மை யாக நின்று குரல் கொடுப்பின் அது வரவேற்க வேண்டிய தாகும். ஆதலால் வை. கோ. இந்திய மக்களுக்கு விரோதமான இந்துத்துவ ஆட்சிக்கு ஆதரவு கொடுப்பதும், இலங்கை தமிழருக்கு எதிரான பிராந்திய மேலாதிக்க வல்லரசிற்கு முண்டு கொடுத்து வருவதும் ஏற்கக் கூடியதொன்றல்ல.

வை. கோ. சிறை வைப்பிற்கு புலி ஆதரவுப் பேச்சு கூறப்படும் காரணமாக்கி காட்டப்படுகிறதே ஒழிய வெளியே கூறப்படாத பல காரணங்கள் அரசாங்க நிர்வாக -அமைச்சர்கள் மட்டங்களில் இருந்து வருகின்றன. ஜெய லலிதாவின் சுய பிரச்சினைகளும் அதிகார நிலைப்பிற்கான தேவைகளுமே வை. கோ.வினது சிறை வைப்பின் உண்மையான பின்னணியாகும். அதனாலேயே ஜெயலலிதாவின் நடவடிக்கையை தேசிய ஜனநாயக முன்னணி உள்ளுர ஆதரிப்பது போன்றே தெரிகின்றது.

இலங்கையில் நம்மிடையே தமிழ் தலைவர்கள் ஆரவாரப்படுவது போன்று அங்கே ஒன்றுமே இல்லையென்பது தெளிவானதாகும். வை. கோ. வும் சரி ராமதாசும் சரி இப்போது புதிதாகத் திருமாவளவனும் இலங்கைத் தமிழர்களுக்காக புலிகளுக்காக குரல் வைப்பது தத்தமது அரசியல் ஆதாயத்திற்கேயாகும். அவர்களது அரசியல் நேர்மையை கடந்த கால சமகால இந்திய-தமிழக அரசியல் நடைமுறைகளில் உரைத்துப் பார்த்தால் உண்மை புரியும்.

• • • • • •

### நில உச்சப்பயன்..

1ம் பக்க தொடர்ச்சி..

பரப்பளவு கொண்ட இலங்கையின் வளமான நூற்றுக் கணக்கான மைல் பரப்பள வான நிலங்களை பியோசன மற்ற வகையில் நீரில் மூழ்கடிப்பது பற்றி அவர்களுக்கு எவ்வித கவலையிலும் இருக்காது.

மனித உயிர் வாழ்வுக்காக நிலத்திலிருந்து உச்சப் பயன்பாட்டை பெற வேண்டும் என்பதில் நம்பிக்கை கொண்டவர்கள் நிச்சயமாக மேல் கொத்மலை திட்டத்துக்கு ஆதரவளிக்கமாட்டார்கள்.

குறுகிய அரசியல். பொருளதார நோக்கங்களுக்காக. உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் உதவி வழங்கும் நாடுகளும் முன்மொழியும் அறிவு பூர்வமான திட்டங்கள் நடைமுறைப்படுத்துவது எமது நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் இழைக்கும் துரோகமாகும்.

படிப்பகம்

www.padippakam.com



# தென் ஆசியாவை சூழும் ஆபத்து

இந்தியா - பாகிஸ்தான் மீதான யுத்த மேகங்கள் தொடர்ந்தும் இருந்து வருகின்றன. இந்த மேகங்களில் இருந்து எப்போது குண்டு மழை பொழியும் என்பதும் தெரியாது. யுத்தம் மூண்டால் அணுவாயுதங்கள் பாவிக்கப் படுமா என்பதும் எல்லோர் முன்னும் உள்ள கேள்வி. அப்படி பாவிக்கப்பட்டால் இலட்சக்கணக்கில் மக்கள் கொல்லப் படுவர் என மேற்குலக மக்கள் அஞ்சும் அளவிற்கு இந்திய. பாகிஸ்தானிய மக்கள் அணுகுண்டினால் உண்டாகப் போகும் அழிவைப் பற்றி உணர்ந்ததாகத் தெரியவில்லை. சக்தி மிக்க சர்வதேச நாடுகள் இந்தியாவையும், பாகிஸ் தானையும் யுத்தத்தை தவிர்க்குமாறு அழுத்தம் கொடுத்து வருகின்றன. இந்தியாவிலும். பாகிஸ்தானிலும் உள்ள ஆளும் வர்க்கங்கள் ஒரு யுத்தத்தை ஆவலோடு எதிர்பார்க்கலாம். யுத்தத்தால் கிடைக்கக்கூடிய அரசியல், பொருளாதார லாபங்கள் அவர்களை சும்மாவிருக்க விட மாட்டாது. மேற்குலக ஆயுத விற்பனை நிறுவனங்களைப் பொறுத்தவரையில் இப்போதுள்ளதைப் போன்ற பதற்றநிலை நீடித்தாலே போதும் பெருமளவு ஆயுதங்களை விற்றுத்தள்ளி விடலாம். மறுபக்கத்தில் தெற்காசிய பிராந்தியத்தில் யுத்தம் மூண்டால் தமது பொருளாதார நலன்கள் பாதிக்கப்படுமே என அமெரிக்க. ஐரோப்பிய நாடுகள் கவலைப்படுகின்றன. இவையெல்லா வற்றையும் விட இந்தியாவையும் பாகிஸ்தானையும் முழுமையான யுத்தத்திற்குள் இழுத்து விட்டுவிட்டு அதன் விளைவுகளை தமக்கு சாதக மாக்கிக் கொள்ள சிலர் காத்திருக் கின்றனர். யார் அவர்கள்?

பனிப்போர் காலத்தில் இந்தியா சோவியத் யூனியனின் கூட்டாளியாக விருந்த போது, எண்பதுகளின் இறுதியில், எழுந்த காஷ்மீர் விடுதலைப் போராட்டத்திற்கு அமெரிக்கா மறைமுக ஆதரவு வழங்கியது உண்மைதான். காஷ்மீரிகளுக்கு மட்டுமல்ல பஞ்சாப்பின் சீக்கியரின் போராட்டக் குழுக்களுக்குக் கூட அமெரிக்க சி.ஐ.ஏ.யுடன் தொடர்பிருந்தது. அதெல்லாம் சோவியத் யூனியனின் கூட்டாளியான இந்தியாவை பலவீனப்படுத்தும் என்று நினைத்ததால் வந்த உறவு. ஆனால் இன்று உலகம் மாறிவிட்டது. பனிப்போர், சோவியத் யூனியன் எல்லாம் இப்போது சரித்திரப் புத்தகங்களில் மட்டுமே காணப்படும் சொற்களாகி விட்டன. இந்துத்துவ தேசியவாத பி.ஜே.பி.யினால் தலைமை தாங்கப்படும் இந்திய அரசாங்கம் அமெரிக்காவின் கூட்டாளியாகிவிட்டது. அதற்கும் மேலாக அமெரிக்க-இஸ்ரேலிய-இந்திய கூட்டணி கூட உருவாகி விட்டது.

முன்னர் மதச்சார்பற்ற தேசிய விடுதலைப் போராட்டமாகவிருந்த காஷ்மீரிகளின் போராட்டத்தை அடக்கி, உடைத்து, சீர்குலைத்த இந்திய அரசு தேசியவாதிகளை அழித்த பின்னர்தான் அங்கே இஸ்லாமிய மதவாதிகள் தோன்றினார்கள். "தேசியவாதம் அடைய முடியாத பிழையான பாதை. பரந்துபட்ட மதவாதத்தின் ஓர் அங்கமாகச் சேருவதே சரியான பாதை" என இவர்கள் மக்களை நம்ப வைத்தனர். தொண்ணூறுகளில் அவர்களின் செல்வாக்கு காஷ்மீர் பள்ளத்தாக்கில் அதிகரித்தது. ஆகவே காஷ்மீரில் மதஅடிப்படைவாதிகள் வளர்ந்ததற்கு தேசியவாதிகளை அங்கீகரிக்க மறுத்த இந்திய அரசின் நிலைப்பாடும் ஒரு காரணம். காஷ்மீரில் மக்கள் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு இந்துக்களாகவிருந்து முஸ்லிம்களாக மாறியவர்களாதலால் பல புராதன பழக்கவழக்கங்களை இப்போதும் பின்பற்றி வருகின்றனர். இதனால் காஷ்மீரியம் என்ற தனித்தன்மை வாய்ந்த கலாச்சாரமும் அங்கே நிலவி வருகின்றது. மதஅடிப்படைவாதிகளைப் பொறுத்தவரையில் இது இஸ்லாமிற்கு முரணானது. எல்லா மதத்திலும் உள்ள தூய்மைவாதிகளைப் போலவே இவர்களும் ஒரு முஸ்லிம் குர்-ஆனில் உள்ளபடிதான் வாழ வேண்டுமென எதிர்பார்ப்பவர்கள். இதனை பெரும் பான்மை காஷ்மீர் மக்கள் விரும்ப வில்லை. ஆனால் நிலைமை கைமீறிப் போய்விட்டது.

பாகிஸ்தானின் அரச உளவு நிறுவன மான ஐ.எஸ்.ஐ.யில் நிறைய இஸ்லாமிய மதஅடிப்படிடைவாதிகள் பதவி வகிக் கின்றனர். 'இஸ்லாமிய சர்வதேசியம்' உருவாக வேண்டுமென்ற அபிலாஷைக ளோடு இவர்கள் காஷ்மீரிய மதவாதக் குழுக்களுக்கு உதவி வருகின்றனர். நீண்டகால மாகவே அரசு மட்டத்தி லான தொடர்பு இருந்து வந்தது. ஆனால் 11 செப்டம்பர் 2001ற்குப் பின்னர் நிலைமை தலைகீழாக மாறியது.

பயங்கரவாதத்திற் கெதிரான போரிற்கு ஆதரவளித்த முஷாரப்பின் அரசு தாலிபானை மட்டுமல்ல காஷ்மீரிய இயக்கங்களையும் கைவிட வேண்டி யேற்பட்டது. அமெரிக்காவின் உத்தரவு களுக்கு கீழ்ப்படிந்த முஷாரப் காஷ்மீரிய, மற்றும் பாகிஸ்தானிய மதவாத இயக்கங்களை தடைசெய்து தலைவர் களை சிறையிலடைத்தார். இவர்களுக் காதரவான பல ஐ.எஸ்.ஐ. அதிகாரி களும் கைது செய்யப்பட்டமை குறிப் பிடத்தக்க செய்தி. முன்பு ஆப்கானிஸ் தானில் தாலிபானுக்கும், இந்தியாவில் காஷ்மீர் போராளிகளுக்கும் ஆதரவளிப் போம் என மக்களை அணிதிரட்டிய அதே பாகிஸ்தான் அரசு இன்று அவர்களை பயங்கரவாதிகள் என அழைப்பதை பெரும்பான்மை மக்களால் ஜீரணிக்க முடியவில்லை. இன்னமும் எஞ்சி யிருக்கும் சில ஐ.எஸ்.ஐ. மதஅடிப்படிடை வாதிகளும் இதை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை. காஷ்மீரிய இயக்கங்களுக் கான உதவியையும் நிறுத்த விரும்பவில்லை. அதற்கு மாறாக மிகத் தீவிரமான மதவாத இயக்கங்களுக் கான அவர்களின் உதவி தொடர்ந்தது.

## இந்திய பாகிஸ்தான் முரண்பாடும் யுத்தமும் அமெரிக்காவிற்கு தேவையானதாகும்.

இதனைத் தெரிந்து கொண்ட அமெரிக்கா 'பயங்கரவாதத்தை அடக்குமாறு' தொடர்ந்தும் முஷாரப் பிற்கு அழுத்தம் கொடுத்து வருகின்றது. உண்மையில் பயங்கர வாதத்திற் கெதிரான போரின் எதிர்விளைவு களை த்தான் சந்திக்கி றோம் என அமெரிக்கா இன்றுவரை உணரவில்லை.

'லஷ்கர்-ஏ-தொய்பா' (Lashkare-e-Toiba) என்ற இயக்கம்தான் இந்தியப் பாராளுமன்றம் மீதான தாக்குதலுக்கு பொறுப்பு என இந்திய அரசு குற்றஞ்சாட்டியது. 'மர்காஸ் டாவா அல் இர்ஷாட்' என்ற இயக்கத்தின் இராணுவப்பிரிவுதான் 'லஷ்கர்-ஏ-தொய்பா'. இந்த இயக்கம் முன்பு ஆப்கானிஸ்தானில் சோவியத் இராணுவத்திற்கெதிரான போரில் அமெரிக்க சி.ஐ.ஏ.யினால் பயன்படுத்தப் பட்டது. சோவியத் இராணுவம் வெளியேறிய பின்பு சி.ஐ.ஏ.யினால் இனி தேவையில்லை எனக் கைவிடப்பட்ட குழுக்களில் லஷ்கர்-ஏ-தொய்பாவும் ஒன்று. அதனால் அவர்கள் பின்லாட னோடு கூட்டுச் சேர்ந்து கொண்டார்கள். பரந்துபட்ட இஸ்லாமிய சர்வதேசியத்தின் போராட்டக் களமாக காஷ்மீரை தேர்ந்தெடுத்தனர். இந்த இயக்கத்தின் ஆயுதந்தரித்த உறுப்பினர்களில் பெரும்பான்மையா னோர் பாகிஸ்தானியரும், அரேபியரும் என்பது உண்மைதான். இவர்களின் அரசியல் கொள்கை சுதந்திர காஷ்மீர் அல்ல. அந்த மாறாக அனைத்திந்திய முஸ்லிம்களின் எழுச்சிக்கு தலைமை தாங்குதல். உலகில் மிக இரகசியமான அமைப்பைக் கொண்ட ஆயுதபாணி இயக்கங்களில் இதுவும் ஒன்று. இந்த இயக்கத்தின் உறுப்பினர்கள் உயிருடன் எதிரி இராணுவத்தில் பிடிபடக்கூடாது என்பதும் உறுப்பினர்களுக்கிடப் பட்டிருக்கும் உத்தரவு. அத்தோடு நன்கு திட்ட மிடப்பட்ட கெரில்லாத் தாக்குதல் களை முன்னெடுப்பதில் கைதேர்ந்தவர்கள்.

கடந்த வருடம் இந்தியப் பாராளுமன்றத் தருகில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்திற்கு பின்பு இந்தியா பாகிஸ்தான் மீது போர்ப் பிரகடனம் செய்தது. பின்பு இவ்வருடம் காஷ்மீர் இராணுவ முகாமருகில் நடந்த தாக்குதலின் பின்பும் போர் அறிவிப்புக்கள் வந்தன. இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையில் போர் மூள வேண்டும் என்பது தாக்குதல் நடத்தியவர்களின் நோக்கமாகவும் இருக்கலாம். ஏனெனில் அப்படி போர் மூளும் பட்சத்தில் அது பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பிற்கு சோதனைக் காலமாகவிருக்கும். இந்தியா போர் தொடுக்கும் பட்சத்தில் கடுமையாக எதிர்த்துப் போரிட வேண்டிய நிலையிருக்கும் முஷாரப்பினால், போர் நிலைமை தீவிரவாதிகளுக்கு சாதகமாக மாறுவதையும் தவிர்க்க முடியாது.

பெரும்பான்மை மக்களும் போரு ஆதரவு தருவார்கள் என்பதா தருணம் பார்த்திருக்கும் தீவிரவாதி அதிகாரத்திற்கு வரப்பார்ப்பார்க அதிகாரத்தைக் கைப்பற்றுவார்க அணுவாயுதங்களையும் கைப்ப வார்கள். நாம் எதிர்பார்த்தது பே ரஷ்ய மாபியாவிடமிருந்தல்ல. பாக தானிலிருந்து தான் பின்லாட அணுவாயுதங்களைப் பெற் கொள்வார் என்றெழுதியது Ja Defence weekly என்ற அமெரிக புலனாய்வு சஞ்சிகை.

இந்தியாவைப் பொறுத்தவரைய இத்தகைய போர்ப்பிரகடனங்க குறுகிய லாபங்களையே பெற்றுத்த இந்தியா குறிப்பாக இந்து மக்களிை யே தேசியவாதத்தை வளர்த்த அதன்மூலம் தேர்தல்களில் ஆத பி.ஜே.பி. ஆட்சியதிகாரத்தை தக வைத்தல், இவற்றை விட சர்வதே

## அமெரிக்காவை இறுக அணைக்கும் இந்தியா இந்தியாவை உறுஞ்ச நிற்கும் அமெரிக்கா

குறிப்பாக அமெரிக்க கவனத்  ஈர்த்தல் என்பனவே இந்திய அரசி நோக்கங்கள். ஆப்கானிஸ்தான் மீதா போரின் போது அமெரிக்க பாகிஸ்தானைக் கூட்டுச் சேர்த்து கொண்டதை இந்தியா பொறாமை கண்களுடன் பார்த்தது. அன்றிலிருந் இன்றுவரை 'பயங்கரவாதத்தி கெதிரான போரில் என்னை விட சிறந் நண்பன் உனக்கு கிடையாது' எ இந்தியா தம்பட்டம் அடித்து வருகின்று இப்போது அதன் முயற்சி பயன் தரலா அமெரிக்க பல்தேசிய வர்த்த நிறுவனங்களும் பல காலம் தவமிருந் பெற்ற இந்திய சந்தையை இழக் முன்வரமாட்டார். இதைவிட மத்தி ஆசியாவை நோக்கிய கேந்தி முக்கியத்துவம் வாய்ந்த இடத்தி காஷ்மீர் இருப்பதால் அங் அமெரிகா இராணுவ தளம் அமைக் முன்வர வேண்டும் என இந்திய எதிர்பார்க்கின்றது. ஆனால் இப்போை க்கு பாகிஸ்தான் தளமே போதும் என் எண்ணத்தில் தான் அமெரிக்க இருக்கின்றது.மேலும் இன்றை நிலையில் சீனாவுடன் முரண்ப அமெரிக்கா விரும்பவில்லை. அத குறித்து நீண்டகாலத் திட்ட அமெரிக்காவை இறுக அணைக்கு இந்தியா. இந்தியாவை உறிஞ்ச நிற்கு அமெரிக்காவிடம் உண்டு. இருப்பினு காஷ்மீர் பிரச்சனையை இந்திய வலிந்து சர்வதேச மயப்படுத்த வருவதால், சந்தர்ப்பத்தை பயன்படுத்த அமெரிக்கா தென்னாசியப் பிராந்த யத்தில் அதிகமாகத் தலையிடக் கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன

# ஏகாதிபத்திய உலகமயமாதலின் அழிவுகள்

1929இல் ஏகாதிபத்தியத்தினால் தோற்றுவிக்கப்பட்டிருந்த சர்வதேச பொருளாதார நெருக்கடிகள் இன்று மீள தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. இன்று ஏகாதிபத்தியத்திய உலகமய மாக்கல் திட்டங்களினால் மிகவும் மோசமான நெடிகள் நிலவுகின்றன.

ஒவ்வொரு பொருளாதாரத்துறையிலும் ஒரு சில பல்தேசியக் கம்பெனிகளே ஏகபோகம் செலுத்துவதால் நிறுவனங் களை கொள்வனவு செய்வதற்கே முதலீடுகள் செய்யப்படுகின்றன. இதனால் உற்பத்தி சக்திகள் அபிவிருத்தி அடைவதில்லை. இதன் விளைவாக உற்பத்தி உறவுகளில் பாரிய நெருக்கடிகள் தோன்றியுள்ளன.

ஏகாதிபத்திய நாடுகளுக்கும் மூன்றாம் உலக நாடுகளுக்குமிடையே பொருளா தார ரீதியாக பாரிய இடை வெளிகள் ஏற்பட்டுள்ளன. ஏகாதிபத்தி யத்திய நாடுகளுக்கிடையேயும் சில முக்கிய முதலாளிகளே பலன்களைப் பெற்றுக் கொள்கின்றனர். உலகில் 100 நாடுகளின் தனிநபர் வருமானம் 15 வருடங்களுக்கு முன்பிருந்ததை விட வீழ்ச்சியடைந்திருக்கின்றன. உலகில் 1.6 பில்லியன் மக்கள் அவர்களின் உயிர் வாழ்வுக்காக ஒரு நாளைக்கு ஒரு டொலருக்கு குறைவாகவே செலவழிக் கக் கூடியவர்களாக இருக்கின்றனர்.

பணச்சந்தை நிலவரங்களால் கம்பெனி கள் அதிக லாபத்தை சம்பாதிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாவதால் தொழிலாளர்கள் அதிகம் சுரண்டப்படு கின்றனர். பங்குச் சந்தை வியாபாரத்தி னால் ஏற்படும் மூலதன ஆக்கம் ஒரு நாட்டின் தேசிய உற்பத்தியை விட அதிகரித்துக் காணப்படுகின்றது. சர்வதேச ரீதியாக ஒரு நாளைக்கு 1,100 பில்லியன் டொலர் பெறுமதியான வெளிநாட்டு நாணயங்கள் பரிமாற்றப்படு கின்றன. அதற்கேற்ப பொருள் உற்பத்தி நடைபெறுவதில்லை.

1970-2000 வரை சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்தும் முதலாளித்துவ நாடுகளிடமிருந்தும் பெற்ற கடன் 2,500 பில்லியன் டொலர்கள் திருப்பிச் செலுத்திய கடன் 400 பில்லியன் டொலர்களாகும். எனவே மூன்றாம் உலக நாடுகளே முதலாளித்துவ நாடுகளுக்கு நிதியுதவி செய்துள்ளது என்பதே உண்மை.

உலக பொருளாதார நிலைமையில் அமெரிக்கா முதன்மையான இடத்திற்கு வந்துள்ளது. அதனால் அமெரிக்காவுக் கும் ஏனைய முதலாளித் துவ நாடுகளுக்குமிடையேயான முரண்பாடு கூர்மையடைந்துள்ளது. மூன்றாம் உலக நாடுகளை முற்றுமுழுதாக அதன் காலடிக்கு கொண்டு வந்திருக்கிறது.

# மேலும் தோலுரிக்கப்படும் சீனத் தலைமை

சீன நாட்டு தலைமையின் அண்மைக் கால நடவடிக்கைகள் அதனது நிலைப் பாட்டை மேலும்தோலுரித்துக் காட்டி வருகின்றன. மாக்சிசம். லெனினிசம், மாவோ சிந்தனைகள் என்பன மட்டுமன்றி ஏகாதிபத்திய எதிர்பார்ப்பும் அதனிடம் இல்லை. சோசலிஸம், புரட்சி என்பவற்றுக்கு அங்கு இடமில்லாமல் ஆக்கப்பட்டுவிட்டது.

நேபாள கம்யூனிஸ்ட் (மாவோ) கட்சியின் கெரில்லா போராட்டத்தை முற்றாக முறியடிக்க பூரணமான இராணுவ ஒத்துழைப்பை வழங்கு வதாக சீன நாட்டு தலைவர் ஜியான் ஸெமின் நேபாள நாட்டு மன்னர் கனேந்திராவிடம் உறுதியளித்துள்ளார். நேபாள மன்னர் சீனாவிற்கு சென்றிருந்த வேளையிலேயே மேற்படி உறுதியளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் நேபாள கெரில்லாக்கள் மாவோவின் பெயரை உச்சரித்துக் கொண்டு 'பயங்கரவாதம்' புரியக்கூடாது என்று ஜியான் ஸெமின் எச்சரித்துள்ளார் புரட்சி, ஆயுதப் போராட்டமெல்லாம் அவருக்கு பயங்கரவாதமாகிவிட்டதாக வெளிப்படையாக கூறியமைக்காக அவருக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

கம்போடியாவில் கம்யூனிஸ்ட்டுக்களும் தேசபக்தர்களும் போராடிக் கொண்டி ருக்கும் போது மன்னர் சிவஹானுக் கையே சீனத்தலைமை ஏற்றுக்கொண் டிருந்தது. அதன் மூலம் பிற்போக்கு சக்திகளே நன்மை அடைந்தனர். கம்யூனிஸ்ட்டுகளுக்கு மோசமான பின்னடைவுகள் ஏற்பட்டன.

ஈராக்கிற்கு எதிரான அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்கு எதிராக சீனா உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. அமெரிக்காவிடமும். மேற்கு நாடுகளிடமும் பகைத்துக் கொள்ளாமல் சீனாவை பொருளாதார ரீதியாக வளர்க்க வேண்டும் என்பது மாவோ சிந்தனைகள் அல்ல. ○

www.padippakam.com



# தெளிவான ஜோசப்பா, தெளிவற்ற ஜோசப்பா?

-விதுரன் -

போன வருசக் கடைசியிலே வந்த மூன்றாவது மனிதன் சஞ்சிகையிலே எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் புடைய நேர்காணல் வந்திருந்தது. எப்படி ஒரு இலக்கிய உன்னதமாக அவர் உயர்ந்தார் என்று அங்கே சொல்லி யிருக்கிறார். தன்னிடம் யாழ்ப்பாண விரோதம் இருந்ததாக யாரோ எல்லாம் தப்புப் பிரசாரம் செய்கிறதாகவும் சொல்லி அதற்கான பழியை பேராசிரியர் கைலாசபதி மேலே சுமத்தவும் பார்த்தி ருக்கிறார். முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தையும் தாக்கி எழுதியிருக்கிறார். ஆனாலும் பேராசிரியர் சிவத்தம்பியும் டொமினிக் ஜீவாவும் இவரிடம் பாவ மன்னிப்புப் பெற்றுவிட்டார்கள். இவருடைய கதைகளைப் பற்றி ஒரு காலத்திலே கண்டித்துப் பேசிய மு. நித்தியானந்தன் இவருடைய பத்து வருச இலக்கிய வனவாசத்தின் முடிவிலே இவருடைய புத்தகம் ஒன்றைப் போட முன் வந்து அவரும் பாவமன்னிப்பு வாங்கி விட்டார். இவர் மன்னிக்க முடியாத ஒருவர் இருந்தால் பேராசிரியர் கைலாசபதி மட்டும் தான்.

இந்த இலக்கிய சிகரத்தின் குற்றச் சாட்டுகளின் அபத்தம் இவர் முன்னுக் குப் பின் முரண்பாடாக எழுதுகிற விதத்திலேயே தெரியவருகிறது. மலையகத்து இலக்கியத்தின் தனித்துவ த்தை முதல் முதலாக வற்புறுத்தி அறிமுகப்படுத்தியவர்களில் கைலாசபதி க்கு ஒரு தனி இடம் இருந்ததை மலையக இலக்கியத்தின் உண்மை யான ஒரு மாமனிதரான சி. வி. வேலுப் பிள்ளை அவர்கள் எப்போதோ சொல்லி வைத்திருந்தார். ஒருவர் மலையத்தைச் சேர்ந்தவர் என்பதா லேயே அவரது குரல் மலையகத்தின் குரலாகி விட முடியுமா? இன்றைக்கும் கூட. மலையகம் என்ற அடையாளத் தை இந்திய வம்சாவழி என்கிற பேரில் மூடித் தங்களுடைய வர்க்க அடை யாளம் தொழிலாளி வர்க்க அடையாளம் இல்லை என்று காட்ட முயற்சி பண்ணு கிற மலையக தலைவர்மார். தொண்டர் மார் மீது கூட தெளிவத்த ஜோசப்புக்குப் பகைமை இல்லை. இது ஏன்?

பேராசிரியர் கைலாசபதி தன்னுடைய 20 வருடச் சாதனையைக் கண்டு கொள்ளவே இல்லை என்று முறையிடுகிற இந்த மனிதருடைய நூல் வெளியீட்டில் பேராசிரியர் கைலாசபதி கலந்து கொண்டு பேசியதைப் பற்றிக் கூட இரண்டு கேள்விகள் முன்னாடி எழுதியதும் இவருக்கு மறந்துவிட்டது. 'தெளிவத்த ஜோசப்புக்கு யாழ்ப்பாண வாத்திதான் வில்லன்' என்று பேராசிரியர் சொன்னது அந்த வாத்தி யாருக்கு வக்காலத்து வாங்கத்தான் என்று வலிந்து கற்பனை பண்ணிக் கொண்டு இருக்கிறார் தெளிவத்தை ஜோசப். அதனாலே தான் பேராசிரியர் சொன்னதை மற்றவர்கள் ஏற்று வலியுறுத்தியது கூட. பேராசிரியரை மறுத்து அவர்கள் பேசியதாக இவருக்கு தெரிகிறது. இது தெளிவத்த ஜோசப்பின் தெளிவற்ற சிந்தனையினது ஒரு தெளிவான சாட்சியம்.

பேராசிரியரை வலிந்து தாக்குவதற்கு அவருக்கு எந்தக் கம்பு கிடைத்தாலும் கைவிடமாட்டார் என்பதை அவருடைய நீண்ட நேர்காணலை வாசிக்கிற யாருமே கவனிக்காமல் விட முடியாது. பேராசிரியர் கைலாசபதியின் பாராட்டுக் காக வேண்டி முன்னுரை கேட்டு

## கைலாசபதி பற்றிய வாந்தியும் மார்க்சிச விரோத நோயும்

எழுத்தாளர்கள் வரிசையாக முண்டிக் கிடந்த காலத்தில் எதையுமே கவனிக்காமல் எழுதிக் குவித்துக் கொண்டிருந்தது இந்த இலக்கிய சிகரம். இவரது கதைகள் எல்லா ஏட்டிலும் வந்தபோதும். தினகரனில் மட்டும் வராதது எதைக் காட்டுகிறது என்று கேட்கிறார். இவர் சொல்லுகிற காலத்தில் பேராசிரியர் கைலாசபதி பல்கலைக் கழகத்தில் வேலையில் இருந்தார். தினகரனில் ஆசிரியராக சிவகுருநாதன் அவர்கள் இருந்தார்கள். என்றாலும். இன்னொரு இடத்தில். சிவகுருநாதன் அவர்கள் ஆசிரியராகிய தற்குப் பின்னாலேயே தன்னுடைய எழுத்து தினகரனில் வெளியாகத் தொடங்கியது என்றும் சொல்லுகிறார்.

கைலாசபதி தினகரனில் இருந்தது 1957-1961 காலப்பகுதியாகும். அப்போது தெளிவத்தை ஜோசப் என்னத்தை எழுதினார் என்றோ எதை யெல்லாம் கைலாசபதி நிராகரித்தார் என்றோ கூறுவாரா?

பேராசிரியர் கைலாசபதி தினகரனில் ஆசிரியராக இருந்த காலத்தில் வீரகேசரி, தினகரனுக்கு எழுதலாம் என்றே தனக்குத் தெரியாது என்று தானாகவே ஒப்புக்கொண்டிருக்கிறார் என்பதையும் தெளிவத்தை ஜோசப் மறந்து விட்டார். அறுபதுகளிலே கூட மலையகத்து இலக்கிய முன்னோடி களைப் பற்றி இந்த இலக்கிய சிகரத்துக்குத் தெரியாது. ஆனால் இவரைப் புறக்கணித்ததாகச் சொல்லு கிற கைலாசபதிக்கும் மற்றவர்களுக்கும் அவர்களைப் பற்றிப் பேசவும் எழுதவும் முடிந்த காலம் அது. தனக்கு ஒரு 'இடமும் பெயரும்' கிடைத்த பிறகே மலையக இலக்கிய முன்னோடிகள் பற்றி அக்கறை காட்டிய இந்த இலக்கிய சிகரம் மற்றவர்கள் மலையகத்தைப் பற்றி அக்கறை காட்டவில்லை என்று கோபப்படுகிறது.

எந்த ஒரு இடத்திலாவது இவருடைய எழுத்தின் தன்மைகளையோ எழுத்திலே இருக்கிற குறைபாடுகளை யோ யாராவது சொல்லிக் காட்டினாலும் அதை மறுத்து நிதானமாகப் பதில் சொல்லுகிறதை விட குற்றம் சொன்னவர்கள் மீதே சீறிப்பாய்கிறதை திரும்பத் திரும்ப காணுகிறோம். இப்போது இவருடைய இலக்கியப் பார்வைக்கும் இவர் தன்னுடைய மதிப்புக்குரியவர்களாகக் கொண்டாடு கிற சில தன் முனைப்புக்காரர்க ளுடைய இலக்கியப் பார்வைக்கும் உள்ள ஒற்றுமையை அறிந்து கொள்ள முடிகிறது. பேராசிரியர் கைலாசபதியை யும் தன்னை விமர்சிப்பவர்களையும் கண்மூடித்தனமாக விளாசித் தள்ளுகிற இவரது தகப்பனார் தோட்ட மக்களுடனும் அவர்களுடைய பிள்ளைக ளுடனும் இறுக்கமான தொடர்புகளை கொண்ட ஒரு வாத்தியாராம். அந்த வாத்தியார். தான் வாழ்ந்த லயத்தின் இரண்டு காம்பராக்களுக்கும் அடுத்தாற் போல இருந்த எட்டுக் காம்பராக்க ளுள்ளே இருந்தவர்களுடன் பழக தன்னுடைய பிள்ளைகளை அனுமதிக் காதவர் அவருடைய பிரம்பின் வல்லமை அவருடைய ஆளுமையாகத்தான் நமது இலக்கிய சிகரத்துக்குத் தெரிகிறது. அவர்களுடைய பெரிய பண்ணையில் தங்கள் குடும்பத்தினரது உழைப்பை விட வேறு யாரது உழைப்பும் இல்லை என்று நாங்கள் நம்பியாக வேண்டும். இல்லாமல் போனால் யாழ்ப்பாணத்து வாத்தியாருக்கும் இலக்கிய சிகரத்தினு டைய தகப்பனாருக்கும் வித்தியாசமே தெரியாமல் போய்விடும் அல்லவா!

தெளிவத்தை ஜோசப்பின் மலையக உணர்வு எப்படிப்பட்டது என்றால். மலையகத்துப் பட்டதாரிகளில் 80-90 வீதப் பேருக்கு இன்னமும் மலையகத்த வன் என்ற உணர்வு மிஞ்சி இருப்பது



பற்றி அவரால் பெருமைப்பட முடிகிறது. ஆனாலும் இந்த 80-90 வீதம் பேரில் எத்தனை வீதம் தங்களுடைய சொந்த தோட்டத்து சூழலுடன் தங்களை இன்னமும் நெருக்கமாக வைத்திருக் கிறார்கள் என்பது பற்றிக் கவனிக்க முடியாது. தங்களது தோட்டத்து மக்களுடைய சமுதாய உயர்வு பற்றி இந்தப் பட்டதாரிகளில் சிறு விகிதமான வர்கள் மட்டுமே அக்கறை காட்டு கிறார்கள். அவர்களுடைய பார்வைக் குள் அரசியல் இருக்கிறது. மற்றப் படிக்கு. மலையக அடையாளத்தை ஒரு வசதிக்காகப் பாவித்து அதற்கு இந்திய வம்சாவழி என்று மாறுவேசம் போட்டு நமது மலையகப் பட்டதாரிகள் எவ்வளவு பேர் தங்களுடைய வர்க்க அடையாள த்தை மூடி மறைக்கிறார்கள் என்று பார்க்க இவருக்கு அக்கறை துளிகூட இல்லை. மலையக மக்கள் சுரண்டப் படுகிறார்கள், ஒடுக்கப்படுகிறார்கள். ஏமாற்றப்படுகிறார்கள் என்றெல்லாம் மட்டும் எழுத ஒரு படைப்பாளி 1960களின் பிறகு தேவைப் படவில்லை. ஏனென்றால் அது பற்றிப் பரவலாக அரசியலிலும் இலக்கியத்திலும் படைக்கப்பட்டு விட்டது. என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வி பூதாகரமாக எழுந்து நின்ற நேரத்திலே. போராட்டங்கள் வெடித்து எழுந்த

## நேர்மையற்ற இலக்கிய எழுத்தாளனுக்கு நேர்காணல் கூறும் சாட்சியம்

காலத்திலே அரசியல் சாராமல் ஒருவர் எழுதினார் என்றால் அவரிடம் இருந்தது என்ன விதமான அரசியல் என்று விளங்கும்.

இந்திய வம்சாவழி என்று சொல்லியும் வேறு விதங்களிலும் இந்தியாவே தங்கள் நாடு என்றும் காந்தியும் நேருவுமே தங்கள் தலைவர்கள் என்றும் நம்பி வாழ்ந்த மக்களிடையே இலங்கைதான் உங்கள் நாடு என்று சொன்னவர்கள் யார்? இதைக் கூட நேர்மையாகக் கையாளத் தெரியாமல். 'கடலுக்கு அப்பால் இருக்கும் கடல் போன்ற சீமையையே தங்கள் தாய்நாடாகக் கருதி வாழ்ந்த இம் மக்களிடையே இதுவே உங்கள் நாடு என்பதை உணர்த்தக் கதைகள் படைத்தவன் நான்' என்று எழுதுகிறார் இவர். இவருடைய அரசியல் பார்வையை மட்டுமல்ல நேர்மையையும் தோலுரித்துக் காட்டுகிற வார்த்தைகள் இவை.

இன்றைக்கும் மலையகத்தின் பெரும் பான்மையான மக்கள் அரசியலிலிருந்து ஓரங்கட்டப்பட்டு இருக்கிறது ஏன்? அவர்களை இன்னமும் இலங்கையின் ஒடுக்கப்பட்டபிற சமூகங்களுடன் சேரவிடாமல் உள்ளிருந்தே மறிக்கிற சில அரசியல் தலைமைகளை மட்டுமே பழி சொல்ல முடியுமா? குறுகிய பிரதேச வாதத்தை வளர்த்து தொழிலாளர்களது கவனத்தை வேறு திசைக்குப் போகாமல் கவனித்துக் கொள்வதில் குறியாக உள்ள வேறு வர்க்க நலன்கள் உள்ளனவா? தெளிவத்தை ஜோசப்பின் நிலை என்ன? தெளிவற்ற பிரச்சனையா - தெளிவான சுரண்டும் வர்க்க நலன்களா?

இந்த ஜோசப்பின் சாதாரண நேர்மையீனத்திற்கு ஒரு உதாரணம். 1994ல் சுபமங்களா ஆசிரியர் கோமல் சுவாமிநாதனை தேசிய கலை இலக்கியப் பேரவை இலங்கைக்குக் கூட்டி வந்து மலையகம் உட்பட நாட்டின் பல பாகங்களுக்கும் அழைத்துச் சென்று இலக்கிய சந்திப்பு களும், கூட்டங்களும். கலந்துரையாடல் களும் நடாத்தியது.

தொடர்ச்சி மறுபக்கம்....

## இலங்கை அமெரிக்கா..

3ம் பக்க தொடர்ச்சி...

நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொண்டது போன்று தற்போது அமெரிக்க ஏகாதிபத்தியத்தை நம்புகின்றனர் அல்லது அதற்கு நம்பிக் கைக்குரியவர்களாக நடந்து கொள்கின்றனர். அவ்வாறு நடந்து கொள்வதை தமிழ் மக்களின் போராட்டத்தின் தந்திரோபாயம் என்று கூறுகின்றனர். அவர்களின் அக்கறை யும். வர்க்க நிலைப்பாடும் இலங்கை வாழ் சாதாரண தமிழ் மக்களின் நிலைப்பாடல்ல; சிங்கள. முஸ்லீம். மலையகத் தமிழ் மக்களின் நிலைப்பாடு மல்ல.

புஷ்-ரணில் பேச்சுவார்த்தையில் வெளிப் படுத்தப்பட்ட விடயங்கள் இலங்கை நாட்டிற்கும், மக்களுக்கும் பாரதூர மானவை. வெளிப்படுத்தப்படாத விடயங்கள் நிச்சயமாக சாதகமானவை யாக இருக்கப் போவதில்லை.

அமெரிக்க ஏகாதிபத்திய நலன்களுக்கு சார்பாக இல்லாதபடியால் யசீர் அரபாத் தலைமைக்கு பலவிதமான நெருக்கடி களை கொடுத்து வரும் அமெரிக்கா இலங்கைத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கு ஆதரவாக இருக்குமென்று கனவு காணலாகாது. பாலஸ்தீன-இஸ்ரேல் சமாதான உடன் படிக்கைக்கு அன்று பின்னாலிருந்த அமெரிக்கா இன்று யசீர் அரபாத்தின் தலைமையை மாற்றும்படி வற்புறுத்து கிறது. சகிக்க முடியாத இஸ்ரேலின் இனப்படுகொலைக்கு அமெரிக்கா சம்மதம் தெரிவிக்கிறது. இதேபோன்று இலங்கை தமிழ் மக்களின் போராட்டத்தின் முதன்மை சக்தியான விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இடத்திற்கு வேறு ஒரு தலைமையை மாற்றீடு செய்யும்படி வற்புறுத்தும் காலம் வெகு தொலைவில் இல்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இடத்தை நிராகரித்து வேறு ஒரு தலைமையை உருவாக்க வேண்டு மென்று அமெரிக்கா தமிழ் மக்களை வற்புறுத்தலாம். அத்திசையை நோக்கியே நிலைமைகளை நகர்த்திச் செல்வதாக ரணில்-புஷ் பேச்சுவார்த்தை உணர்த்துகிறது.

எனவே தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் பல தடைகளை கடக்க வேண்டியிருக்கிறது. சிங்கள. பௌத்த பேரினவாதத்திற்கு எதிராக தமிழ் மக்கள் அமெரிக்காவுடன் கை கோர்க்க வேண்டும் என்றும் தந்திரோ பாய ரீதியாக தொடர்புகளை வைத்தி ருக்க வேண்டும் என்றும் கூறுவதும் அதற்கேற்ப போராட்டத்தை வளைத்து. நெளித்து முன்னெடுக்க வேண்டும் என்பதும் செல்லுபடியற்றனவாகும்.

கடந்த செப்டம்பர் 11ஆம் திகதிக்குப் பிறகு விடுதலை அமைப்புகளுக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவுகளும் ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்க தாக்குதலும் எப்போதும் ஒரே மாதிரியாகவும் நிரந்தரமானவையாகவும் இருக்கப் போவதில்லை.

தமிழ்மக்களின் தலைமையை மாற்றும்படி அமெரிக்கா வற்புறுத்துவதற்கான காலம் வெகு தொலைவில் இல்லை.

• • • • • • •

# கம்பன் பெயரால் குத்துக்கரணங்கள்

அண்மையில் பாருங்கள். கொழும்பில் ஒரு சுவையான நிகழ்ச்சி நடந்தது. வழமையாக நடக்கின்ற கம்பன் விழா தான் என்றாலும் இம் முறை பெரும் பெரும் ஏற்பாடுகளோடு நடந்தது. இனி என்ன சமாதானம் வந்து விடும் என்ற உசார் அதில தெரிஞ்சது பாருங்கள்.

அதில கம்பகாவலர். தமிழ்க்காவலர் என்று பட்டங்களும். கௌரவமும் சில பேருக்குக் குடுத்தவை. அதில முதல் மரியாதை எங்கட சிவதமிழ்ச் செல்வி. பண்டிதை. கலாநிதி. துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டிஅவர்களுக்கு என்று அறிவிச்சினம். எங்கட சனமும் அம்மா வருவா. அவவைப் பார்க்கலாம் என்று அங்கலாச்சுப் போய் வந்து குவிஞ்சினம். ஆனால் ஏனோ தெரியேல. அம்மா வரவில்லை.

எங்கட வன் தொண்டர்கள் விடு வினமோ! அம்மாவின்ர படத்த சட்டகம் போட்டு எடுத்து. சிம்மாசனத்தில இருத்தி வைச்சு தங்கட வழமையான கைங்காரியத்தை கண்குளிரச் செய்து மகிழ்ந்தினம் பாருங்கள்.

எங்கட ஆக்கள் எட்டுச் செலவுக்கு. அந்திரட்டிக்குச் செய்யிற உபசரணை யள் போல இவர்கள் உயிருடன் வாழும் இச் 'சமூக சேவகிக்கு'. 'பெரியாருக்கு' செய்திருக்கிறார்கள். இதில சிக்கல் என்னவெண்டால் அம்மாவுக்கு இவையின்ர கௌரவிப்பு விருப்பம் இல்லாமல் இருக்கலாம், அல்லது கொழும்புக்கு வரமுடியாத உடல் நிலை இருக்கலாம். இவையள் என்னெண்டால் சர்வ அதிகாரத்தை பட்டம் அளிக்கிற கௌரவத்திலை யுமல்லோ காட்டினம்.

சாதாரண சனம் சாப்பிடுற சோற்றரிசிக் குள்ள கல்லும் பருப்புக்குள் குச்சியும் கலக்கிற முதலாளியின் காசு பாருங் கோ, மாலை போடுறதும். பொன்னா டை போத்துறதுமா ஒரே சமூகச் சீரழிவுகள்! கலர் கலரா மேடையை அலங்கரிச்சு வைச்சு. காசால செய்யிற கண்கட்டிக் காரியங்கள் பாருங்கள்!

இன்னும் ஒரு சுவாரசியமான விடயம் நடக்குது பாருங்கள்! கம்பன் விழா முடிஞ்ச கையோட பரமார்த்த குருவானவர் அறிவிச்சார் 'கம்பன் விழா பற்றி வெளி வருகிற சிறந்த விமர்சனம் ஒன்றுக்கு பரிசு. சன்மானம் வழங்கப்படும்' என்று ஆரும் எக்கச் சக்கமாக எழுதினால் விசயம் பிழைச்சுப் போகும் என்று வாரிதியாரே முந்திக் கொண்டு விட்டார் பாருங்கள்.

வத வத என்று தானே கட்டுரைகள் எழுதி தன்ர ஆக்களின்ர பெயரில தேசிய பத்திரிகைகளில் பிரசுரிக்க வைத்துவிட்டார். இதெல்லாம் கெட்டிக் காரத்தனமான வேலைகள் தான்.

அங்க நடந்த கவியரங்கத்தைப் பற்றி இன்னும் ஒரு விசயம் சொல்ல வேணும். பரமார்த்த குருவானவருக்கு கவிதை பற்றி சரியான விளக்கம் இன்னும் இல்லைப் போல. இராமாயணமே ஒரு அரசியல் காவியம் தானே. கவியரங்கத்தில் அரசியல் பாடினதும் தவறில்லை. அந்த ஊடகம் தன்ர பணியைச் செய்யத் தானே வேணும் பாருங்கள். கவிதை பாடின எல்லாரும் அவரின் விசுவாசமான தம்பிமார்தான். இல்லாட்டி மேடையில் ஏற விடமாட்டார் பாருங்கள்.

அதில முதலில் கவிதை வாசிச்ச தம்பி சொன்னது நல்ல கவிதை பாருங்கள். கவிதை வடிவம் குறியீடு. செய்தி எல்லாமே திறம். ஆனால் குருவானவர் அவனைப் பாட விடவில்லை. வெள்ளவத்தை றோட்டில நிக்கிற தம்பிமாரப் பற்றி கம்பன் மேடையில பாடின தம்பியப் பற்றி குருவானவர் தன்னுடைய கட்டும் உரையில நல்லா முதுகு சொறியிறார் பாருங்கள்.

எது என்ன ஆனாலும் பரவாயில்லை. பழமை. மரபு. பண்பாடு என்று பேசிக் கொண்டு இவையள் செய்யிற சமூகச் சீரழிப்புகள் தான் பாருங்கள் மிகக் கொடுமையானவை.

- பட்டணத்தடிகள் -

படிப்பகம்

புதியபூமி
புதிய பூமி REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA PUTHIYA POOMI
சுற்று 09 ஆகஸ்ட் 2002 பக்கம் 12 விலை 10/- சுழற்சி 49

## மீண்டும் பம்மாத்து! மீண்டும் ஏமாற்றம்!

*தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதத்தை அமைச்சர் பி. சந்திரசேகரம் முடித்து வைத்துள்ளார். சட்டமா அதிபருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் பழைய பல்லவியே பாடப்பட்டுள்ளது. இந்நிலையில் உண்ணாவிரதத்தை முடித்து வைத்தும் ஒரு அரசியலா?*

# மீண்டும் மாணிக்கக்கல் அகழ்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பம்

இராகலை தோட்டங்களில் மாணிக்கக் கல் அகழ்வதற்கான நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. இராகலை கீழ்ப் பிரிவிலும் சென் லெனார்ட்ஸ் தோட்டத்திலும் மாணிக்கக் கல் அகழ்வதற்காக குறிப்பிட்ட காணிகளை குத்தகைக்கு கொடுப்பதற்காக மீண்டும் ஏலம் கோரப்படவிருக்கிறது.

சில தொழிற்சங்கத் தலைவர்கள் இணக்கம் தெரிவித்ததையடுத்தே ஒத்தி வைக்கப்பட்டிருந்த ஏலம் கோரல் மீண்டும் நடாத்தப்படவிருக்கின்றது. அத் தொழிற்சங்கத் தலைவர்களின் உறவினர்களுக்கும் அவர்களுக்கு வேண்டியவர்களுக்கும் மாணிக்கக் கல் அகழ்வதற்கான காணித் துண்டுகள் கொடுக்கப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்ட பிறகே அவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

தேயிலைச் செடிகள் இருக்கும் நிலத்தில் மாணிக்கக் கல் அகழ்ந்தால் வேலை வாய்ப்பு குறைவடையும் என்பதாலும். மண்சரிவு. மண்ணரிப்பு போன்ற பாதிப்புகள் ஏற்படும் என்பதாலும், மாணிக்கக் கல் அகழ்வதற்கு வெளியார் மேற்படி தோட்டங்களுக்குள் வருதால் பதற்றமான சூழ்நிலை ஏற்படலாம். ஆகிய காரணங்களை காட்டியே அத்தோட்டங்களை சேர்ந்த மக்கள் மாணிக்கக் கல் அகழ்வதை எதிர்த்து வருகின்றனர்.

இலங்கை மாணிக்கக் கல் கூட்டுத்தாபன அதிகாரிகள் இராகலை தமிழ் மகாவித்தியாலயத்தில் நடாத்தவிருந்த ஏலக்கோரலை நிறுத்த வேண்டும் என்று நடத்தப்பட்ட மறியல் போராட்டத்தையடுத்தே ஏலக்கோரல் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

தொழிற்சங்க பேதங்களைக் கடந்த நிலையில் தொழிலாளர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் மாணிக்கக் கல் அகழ்வதற்கான காணிகளை குத்தகைக்கு விடுவதற்காக நடாத்தப்படவிருந்த ஏலக்கோரலை எதிர்த்து ஆர்ப்பாட்ட மறியல் போராட்டத்தைச் செய்தனர். ஏலக்கோரலை நடத்த இராகலைக்குச் சென்றிருந்த இலங்கை மாணிக்கக் கல் கூட்டுத்தாபன அதிகாரிகளை ஏலக் கோரலை நடத்தவிடாது ஆர்ப்பாட்டம் செய்தனர். அதனை அடுத்தே ஏலக்கோரல் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

ஆனால். அமைச்சர் சொக்ஸியிடம் பேச்சுவார்த்தை நடத்தி ஏலக்கோரலை தானே ஒத்திவைத்ததாக அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் அப்போது தெரிவித்திருந்தார்.

அவ் ஏலக்கோரல் மீண்டும் நடாத்தப் படவிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அத்தோட்டங்களில் மாணிக்கக் கல் அகழப்படக் கூடாது என்றும் அதற்காக குறிப்பிட்ட காணிகளை குத்தகைக்கு கொடுக்க ஏலக்கோரலை நடத்தக் கூடாத என்றும் அத்தோட்ட மக்கள் உறுதியாக இருக்கின்றனர். ஆனால் தொழிற்சங்க பிரதிநிதிகள் பின்னடிக்கின்றனர்.

பாதிப்புக்களைச் சந்திக்கப் போகின்ற மக்களின் எதிர்ப்பு நியாயமானது அவ்வெதிர்ப்பை வெளிப்படுத்தும் வழிவகைகள் வலிமையடைகின்றபோது எதிர்ப்பு போராட்ட இயக்கமும் வெற்றியடையும்.

சுயநல நோக்கம் கொண்ட சந்தர்ப்ப வாத தொழிற்சங்க தலைவர்கள் தொழிலாளர்களின் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தாலும் நியாயமான போராட்டம் முன்னேறும். வெற்றி பெறும்.

இந்த வகையில் மாணிக்கக் கல் அகழ்வதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் இராகலை கீழ்பிரிவு, சென்லெனார்ட்ஸ் தோட்டத் தொழிலாளர்களின் போராட்டமும் வெற்றியடையும் திசையில் முன்னேறும்.

# மலையகத்தில் திட்டமிட்ட கருத்தடையினால் ஆபத்து!

பொது வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த தலவாக்கலை பாமஸ்டன் தோட்ட லொறியில் அத்தோட்டப் பெண்கள் சிலர் கருத்தடை சத்திரசிகிச்சைக்குட்படுத்தப் பட்ட பிறகு மயக்க நிலையில் கிடத்தப் பட்டிருந்ததாக செய்திகள் வெளியாகி யிருக்கின்றன. கருத்தடை சத்திர சிகிச்சைகள் கொளுந்து மடுவம் போன்ற பொது இடங்களிலேயே மேற்கொள்ளப் படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

தோட்டப்புறப் பெண்களின் அறியாமையை பயன்படுத்தி கருத்தடை சத்திரசிகிச்சை செய்து கொள்ள நிர்ப்பந்திப்பதும் 'நாய்களை' போன்று நடுவீதிகளிலும் பொது இடங்களிலும் கருத்தடை சத்திரசிகிச்சை செய்வதும் மலையகப் பெண்களை கீழ்த்தரமாக மதிப்பதன் வெளிப்பாடே ஆகும்.

இது குறித்து மலையகத் தலைவர்கள் எனப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் வெட்கித் தலை குனிய வேண்டும். உலக நாடுகளுக்குச் சென்று சர்வதேச ரீதியாக தமிழர்களின் கௌரவம். மரியாதை பற்றியெல்லாம் முழங்குவதால் பயனேதுமில்லை. தமது சொந்த மக்கள் கீழ்த்தரமாக நடத்தப்படுவதைக் கண்டு கொதித்து எழாதவர்கள் தலைவர் களாக இருக்க அருகதையற்றவர்கள். மக்களை அறியாமை எனும் இருளில் வைத்திருந்தால்தான் லட்சக்கணக்கான வாக்குகளை பெற்று மந்திரிகளாகலாம் என்ற எண்ணம் கொண்டவர்களுக்கு கோபம் வருகின்ற, வெட்கம் வருகின்ற நரம்புகள் இருப்பதில் நியாயமில்லை. திட்டமிட்ட குடும்பக் கட்டுப்பாடு செய்யப்படுவது பற்றியும் அவர்களுக்கு கவலை ஏற்படாது.

ஆனால் உண்மையான தொழிலாளர் வர்க்க சிந்தனையுள்ளவர்கள், மலையகத் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை மதிப்பவர்கள், பெண்களின் சுதந்திரத்தை மதிப்பவர்கள் ஏன் மனிதாபிமானத்தை மதிப்பவர்கள் கூட மேற்படி திட்டமிட்ட கருத்தடை நடவடிக்கைகளைப் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள்.

தோட்டப்புறப் பெண்களின் அறியாமை. ஏழ்மை என்பவற்றை சாதகமாகக் கொண்டு பல தந்திரங்களை செய்தும். பசப்பு வார்த்தைகளைக் கூறியும் திட்டமிட்ட கருத்தடை மேற்கொள்ளப் படுகிறது. இதற்கு மலையக்கத்திலுள்ள சீரழிந்த ஆண்களின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படுகிறது. சீரழிவுக் குள்ளான தோட்ட மட்டத்திலான தொழிற்சங்க தலைவர்கள் திட்டமிட்ட கருத்தடை நடவடிக்கைகளுக்கு துணை புரிகின்றனர். தோட்டப்புறங்களில் உதவி வைத்தியர்களாக கடமை புரிபவர்கள், தோட்டப்புறங்களிலிருந்தும் கிராமப்புறங்களிலிருந்தும் தோட்டங்களில் நலன்புரி உத்தியோகத்தர்களாக வேலை செய்பவர்களும் கருத்தடைக்குச் சாதகமான பிரச்சாரங்களைச் செய்து தொழிலாள பெண்களை கருத்தடை செய்து கொள்ள தூண்டி விடுகின்றனர்.

தோட்டப்புறங்களிலுள்ள சில பாடசாலைகளில் சில வருடங்களாக முதலாம் வகுப்பிற்கு மாணவர்கள் அனுமதிக்கப் படவில்லையாம். காரணம் கருத்தடை சத்திரசிகிச்சை காரணமாக சில தோட்டங்களில் சில வருடங்களாக பிள்ளைகளே பிறக்கவில்லையாம்.

திட்டமிட்ட கருத்தடையினால் மலையகத் தமிழ் மக்களின் குடிசன வளர்ச்சி வீதம் பாதிக்கப்படுகிறது அத்துடன் அவர்களின் சுயகௌரவம் பாதிக்கப்படுகிறது. இதனால் சமூக ரீதியான பாதிப்புக்கள் ஏற்படுவதுடன் தனிப்பட்ட பெண்கள் பாதிப்புக்குள்ளா கின்றனர். கருத்தடை சத்திரசிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு மாதாந்தப் அதிக குருதி வெளியேறுவதால்




கருத்தடை சத்திரசிகிச்சையின் பின் மயக்கமுற்ற நிலையில் வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்ட காட்சி

அதனை ஈடுசெய்யக் கூடிய போஷாக்கான உணவு உட்கொள்ளப் பட வேண்டும். அவ்வாறு போஷாக்கான உணவை உட்கொள்ளக் கூடிய வசதி மலையக தோட்டப்புற பெண்களுக்கு இல்லை. அதனால் கருத்தடை சத்திரசிகிச்சை செய்து கொண்ட பெண்கள் இரத்தசோகை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இது ஒரு முக்கிய சுகாதாரப் பிரச்சினையாக தலை தூக்கியுள்ளது.

எனவே மலையகத் தமிழ் தேசிய இனத்திற்கும் தோட்டத் தொழிலாளர் வர்க்கத்திற்கும் பெண்களுக்கும் பாதிப்பு ஏற்படுத்துகின்ற திட்டமிட்ட கருத்தடை நடவடிக்கைகளுக்கு எதிரான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். கருத்தடையைத் தூண்டும் பிரச்சாரங் களுக்கு எதிரான சக்தி வாய்ந்த பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதுமட்டுமல்ல பாதிப்புக்குள்ளாகின்ற மக்களுக்கும், பெண்களுக்கும் திட்டமிட்ட கருத்தடையின் நோக்கங்கள் பற்றியும் அதனால் ஏற்படுகின்ற சமூக ரீதியான பாதிப்புக்கள் பற்றியும் பெண்களுக்கு ஏற்படுகின்ற சுகாதார பாதிப்புக்கள் பற்றியும் அறிவூட்ட வேண்டும். அப்பொறுப்பை மலையகத் தமிழ் மக்கள் பற்றி அக்கறை கொண்டவர்களும், அமைப்புகளும் ஏற்க வேண்டும்.

# தமிழ் கைதிகளின் விடுதலையா? வை. கோ.வின் விடுதலையா?

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட நாட்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்தை மீண்டும் தொடங்கியுள்ளனர். விடுதலைப் புலிகளும் ஐ. தே. மு. அரசாங்கமும் கையெழுத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தடுப்புக் காவல் கைதிகள் பற்றி எதுவும் குறிப்பிட வில்லை. விசாரணையுமின்றி, விடுதலை யுமின்றி நீண்ட நாட்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை தொடர்ந்து விடுதலை செய்யும்படி கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது.

அவர்கள் உண்ணாவிரதப் போராட்டத் தைச் செய்கின்ற போதெல்லாம் அவர் களை விரைவில் விடுதலை செய்வதற்கு நடவடிக்கைகளை எடுக்கப் போவதாக வாக்குறுதியளித்து உண்ணாவிரதத்தை அரசியல் வாதிகளும், சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளும் முடித்து வைப்பது வழக்கம்.

தமிழ் அரசியல் கைதிகளின் கோவைகளை கூடிய விரைவில் படித்து அவர் களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப் போவதாக அவ்வப்போது சட்டமா அதிபரும் அறிவித்து வருகிறார். ஆனால் எதுவும் நடந்தபாடில்லை.

தமிழ்நாட்டில் ம.தி.மு.க. தலைவர் வை.கோ. கைது செய்யப்பட்டதை எதிர்த்தும், அவரை விடுதலை செய்யக் கோரியும் வடக்கு கிழக்கெங்கும் ஹர்த்தாலும் மறியல் போராட்டங்களும் நடாத்தப்படுகின்றன. அவரின் விடுதலை வேண்டி இந்திய தூதுவரிடம் மகஜர்களும் கையளிக்கப்பட்டுள்ளன.

ஆனால் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யும்படி கோரிக்கை விடுக்கும் போராட்டங்கள் சிறைச்சாலைகளுக்கே வரையறுக்கப்பட்டு விடுகின்றன. கைதிகளின் விடுதலை குறித்து அக்கைதிகள் மட்டுமே அக்கறை கொண்டுள்ளதாகவே தெரிகிறது. அவர்களையும் காலத்துக்குக் காலம் சமாதானப்படுத்தி வாக்குறுதிகள் அளிக்கப்படுவதும் வழக்கமாகிவிட்டது.

மீண்டும் களுத்துறைச் சிறையிலும். மட்டக்களப்புச் சிறையிலும் கைதிகள் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். அவர்களின் விடுதலை தொடர்பாக மக்கள் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

தமிழ் அரசியல் தலைவர்களின் அழைப்பை ஏற்று வை.கோ.வின் விடுதலைக்காகப் போராடும் வடக்கு கிழக்கு மக்கள் தங்களது சொந்த மண்ணிலிருந்து கைது செய்யப்பட்டு நீண்ட நாட்களாக தடுத்து வைக்கப் பட்டுள்ள இளைஞர்களினதும், யுவதிகளினதும் விடுதலைக்காக வீதிகளில் இறங்கிப் போராடுவதே சிறந்ததாகும்.

சட்ட அதிபர் திணைக்களத்திற்குரிய சட்டப் பிரச்சினையாகவே கைதிகளின் விடுதலையை அணுகாது அதனை முக்கிய அரசியல் பிரச்சினையாக முன்னெடுத்து தீர்வு காண வேண்டும். இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவது என்பதில் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளவர்களை பிணையிலாவது விடுதலை செய்வதும் உள்ளடங்கும் என்பதை ஏற்றுக்கொண்டு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

தமிழ் அரசியல் தலைவர்களுக்கு வை.கோ.வின் விடுதலையில் இருக்கும் அக்கறை தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையில் இல்லை என்பது வேதனையானதே.

### தெளிவான ஜோசப்ப...

11ம் பக்க தொடர்ச்சி..

அதன் பின் தேசிய கலை இலக்கியப் பேரவையும் சுபமங்களாவும் இணைந்து ஒரு குறுநாவல் போட்டி நடாத்தப்பட்டது. அப்போட்டியில் இதே தெளிவத்தை ஜோசப்பிற்கு இரண்டாவது பரிசும் கிடைத்தது. தேசிய கலை இலக்கியப் பேரவை நடாத்திய பரிசளிப்பு விழாவில் வந்து 'அவ்வேளை கோமல் சுவாமிநாதன் மறைந்துவிட்டார்' தமிழக எழுத்தாளர் வல்லிக்கண்ணன் கையால் பரிசும் வாங்கினார். அதன் பின் இன்றுவரை தேசிய கலை இலக்கியப் பேரவை பற்றியோ அதன் பரிசு பற்றியோ ஜோசப் மறந்தும் உச்சரிப்பதில்லை. சுபமங்களா நடாத்திய போட்டி என்றும் அவர்கள் தந்த பரிசு என்றுமே இந்த இலக்கிய சிகரம் கூறியிருக்கிறது. அதிலும் கைலாசபதி வக்கிரம்தான் காரணமாகும். ஏனெனில் பேராசிரியர் கைலாசபதி தேசிய கலை இலக்கியப் பேரவையினதும் தாயகம் சஞ்சிகையினதும் உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகித்தவர் என்பதை இந்த தெளிவற்ற ஜோசப் தெரிந்தே வைத்துள்ளார். தெளிவத்தை ஜோசப்பிடம் படிந்து காணப்படுவது யாழ்ப்பாண விரோதம். கைலாசபதி எதிர்ப்பு மட்டுமல்ல. மார்க்சிச விரோத வன்மமும் ஆகும். அதனை அவரது நேர்காணல் வெளிச்சமிடுகிறது.

வெளியிடுபவர் : இ. தம்பையா, இல. 47. 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு யூகே. பிரின்டஸ் 98A, விவேகானந்தா மேடு, கொழும்பு 13.

www.padippakam.com
படிப்பகம்